# வினை தீர்க்கும்

# விநாயகர்



வினைதீர்க்கும்

# விநாயகர்



கந்தவனம் தங்கவேலாயுதம்

## பதிப்புத் தரவுகள்

| | |
|---|---|
| தலைப்பு | ''வினைதீர்க்கும் விநாயகர்'' |
| வகை | இந்து சமய மூர்த்தி விளக்கம் |
| ஆக்கியோன் | க.தங்கவேலாயுதன் |
| மொழி | தமிழ் |
| வெளியீடு | 1992.12.30 |
| பக்கம் | 160 |
| பிரதிகள் | 500 |
| அச்சகம் | புனித செபத்தியார் அச்சகம் 65,லேடி மனிங் டிறைவ், மட்டக்களப்பு |
| லேசர் அச்சுக்கோர்ப்பு | சித்ரா கிராபிக் ஆர்ட்ஸ் 73 1/1 ஹம்டன் லேன், கொழும்பு 6. |
| பதிப்புரிமை | நூலாசிரியர்க்கு |
| விலை Price | 101/= |

## BIBILIOGRAPHICAL DATA

| | |
|---|---|
| TITLE | "VINAI THEERKUM VINAYAGAR" |
| CATEGORY | HINDU RELIGIOUS LORDS EXPLANATION |
| AUTHOR | K.THANGAVELAUTHAN |
| LANGUAGE | TAMIL |
| PUBLICATION | 1992.12.30 |
| PAGES | 160 |
| COPIES | 500 |
| PRINTERS | ST' SEBASTIAN PRINTERS 65,LADY MANNING DRIVE, BATTICALOA |
| LASER TYPESET | CHITHRA GRAPHIC ARTS, 73 1/1 HAMPDEN LANE, COLOMBO 6. |
| COPYRIGHT | AUTHOR. |

# சமர்ப்பணம்

என் அன்புத் தந்தை
அமரர் திரு. வேலாயுதர் - கந்தவனம்
தோம்புதோர் வைத்தியர் அவர்களினதும்

என் அருமை அன்னை
அமரர் திருமதி. கந்தவனம் சின்னத்தங்கம்
அவர்களினதும்

திருப்பாதங்களில் இந்நூலினை சமர்ப்பணம்
செய்கின்றேன்



வினைதீர்க்கும்

வி நாயகர்

மட்டக்களப்பு இராமகிருஷ்ண புரம்,

## இராம கிருஷ்ணமிஷன் தலைவர்
# சுவாமி ஜீவனானந்த அவர்களின்
## ஆசியுரை

பரத கண்டத்தில் தோன்றியுள்ள சமயங்கள் அனைத்திற்கும் பொது வாக எழுந்தருளியிருக்கும் தெய்வம் விநாயகர். இத்தெய்வத்தை முன் நிறுத்தித் தத்தம் தெய்வத்தை மக்கள் வழிபாடு செய்கின்றனர். புற மதங்களாகிய பௌத்தம்.ஜைனம் என்பன கூட விநாயகனை வழுத்துகின்றன.

விநாயக வழிபாடு மிகவும் தொன்மையானது. ரிக் வேதத்தில் விநாயகர் பின்வருமாறு போற்றப்பட்டுள்ளார். **'கணானாம் கணபதிம் உற வாமஹி'** மேலும் இவ்வழிபாடு இதிகாசங்களிலும் புராணங்களிலும் மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. இந்து சமயத்தவர் இறைவழிபாடு ஆற்றும் வேளைகளிலெல்லாம் முதன்முதலில் பூஜிக்கப்படுபவர் விநாயகர். தடைகள் பல செய்யவும் தடைகளைத் தவிர்க்கவும் வல்லவர். ஆகையினால் அவர் விக்னேஸ்வரர் என அழைக்கப்படுகிறார். அவருடைய திருவுருவத்தைப் பொன்னால் அமைத்தும், கல்லில் செதுக்கியும், மஞ்சள், மா, சாணம் என்பவற்றுள் ஒன்றால் பிடித்தும் வழிபாட்டுக்குப் பயன்படுத்துகின்றனர். மேற்படி சின்னம் எதுவும் கிடைக்காதவிடத்து, அறுகம் புல்லினை அவருக்கு அறிகுறியாக வைத்துப் பூசித்தல் வழக்கிலுள்ளது. விநாயக வழிபாடு மிகவும் எழிமையான முறையில் மேற் கொள்ளத்தக்கது என்பதையே மேற்படி வழக்குகள் காட்டிநிற்கின்றன.

விநாயகனை வலம் வருதல், தலையில் குட்டிக் கொண்டு தோப்புக்கரணம் போடுதல், தேங்காய் உடைத்தல், பலவிதப் பக்ஷணங்களைப்

பாகம் செய்து படைத்தல், அபிஷேகமும் அலங்காரமும் செய்தல், அவரது வழிபாட்டில் ஒரு சில முறைகள், விநாயகப் பெருமானின் மான்மியம், விநாயக மூர்த்தத்தின் தத்துவங்கள், விநாயக வழிபாட்டால் பெறக்கூடிய பெறுபேறுகள் ஆகிய அனைத்து அம்சங்களையும் இரத்தினச் சுருக்கமான முறையில் தெளிவாக விளக்கியுள்ளார் இந்நூலாசிரியர். அவை வெறும் விளக்கங்களாக மட்டும் அமையாது, அவருக்கு விநாயக வழிபாட்டின் மீதுள்ள உள்ளார்ந்த ஈடுபாட்டையும் எடுத்துக் காட்டுவனவாய் உள்ளன. விரதங்களுள் சிறந்ததான விநாயக விரத்தையிட்டு அவர் வழங்கியுள்ள விபரங்களைக் குறிப்பிடலாம். கார்த்திகை மாதத் தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரை சைவமக்களால் அனுஷ்டிக்கப்படும் 'பிள்ளையார் காப்புக் கட்டு விரதம்' பற்றிய பயன்தரும் பல தகவல்களைக் குறிப்பிடலாம்.

பயனுள்ள இந்நூலை ஆக்கியுள்ள சைவப்புலவர் திரு.க.தங்கவேலாயுதன் அவர்கள் அனைவரதும் பாராட்டுக்குரியவர் ஆகின்றார். இந்நூலை வாசிப்பவர்கள் விநாயகப் பெருமானின் மகத்துவத்தை நிச்சயம் உணர்வார்கள். ஆஸ்தீகப் பெருமக்களிடையே இந்நூல் இதற்குரிய பெறுமானத்தைப் பெறவேண்டும்மெனப் பிரார்த்திக்கின்றேன். விக்னேஸ்வரனை முன்நிறுத்தி இவர் மேற்கொண்டுள்ள சமயப் பணி மென்மேலும் வளர ஆரணமுகத்தான் வளங்களனைத்தும் அருள்வாராக! பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

சுவாமி ஜீவனானந்த

இராமகிருஷ்ண மிஷன்,
இராமகிருஷ்ண புரம்,
மட்டக்களப்பு.

## இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர்

# மாண்புமிகு பி.பி.தேவராஜ் அவர்களின்

### ஆசிச் செய்தி.

**'வினை தீர்க்கும் விநாயகர்'** எனும் பெயரில் விநாயக தத்துவம் பற்றி முழுமையான ஆய்வுடன் எழுதப்பட்டுள்ள இந்நூலுக்கு என் வாழ்த்துக்களை அளிப்பதில் பெருமகிழ்வு கொள்கின்றேன். இந்துசமயத்தில் ஷண்மதக் கோட்டுபாடுகளுள் ஒன்றாகப் போற்றப்படும் விநாயகர் வழிபாடு மிகவும் தொன்மை நிறைந்தது. அங்கிங்கெனாதபடி எங்கும் நீக்கமற நிறைந்துள்ள எளிமைமிக்க இறை சொருபமாக விநாயகர் வழிபடப்படுகின்றார். காலகாலமாக ஆற்றங்கரையிலும், ஆலமரத்தடியிலும், குழைத்த மஞ்சளிலும், அறுகம்புல்லலிலும் எழுந்தருளுவதாகக் கருதி விநாயகர் வடிவத்தை பக்தர்கள் போற்றி வந்தள்ளனர்.

எமது சமயம் போற்றும் கடவுள் உருவங்களில் விநாயகர் வடிவம் ஆழ்ந்த தத்துவங்களையும், வேத விளக்கங்களையும் உள்ளடக்கியது. எந்த நல்ல காரியத்தை தொடங்கும் முன்பும் விநாயகக் கடவுளுக்கு முதல் வழிபாடியற்றுவது இந்துக்களின் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்துள்ளது. இத்தகைய பெருமைகள் நிறைந்த முதல்வரான விநாயகக் கடவுள் பற்றிய ஒரு நூலாக **'வினை தீர்க்கும் விநாயகர்'** எனும் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. விநாயகரைப்பற்றி தெரிந்து கொள்ள விரும்பும் அனைவருக்கும் பொருத்தமான நூலாக இது அமையுமென்றே கருதுகின்றேன். சிறுவர் முதல் பெரியோர்வரை விளங்கிக் கொள்ளக்கூடியளவு அழகு தமிழில் அருமையாக எழுதியுள்ளார் ஆசிரியர். விநாயரின் தோற்றம், ஆலய அமைப்பு, வழிபாட்டு முறைகள், கிரியை முறைகள், விரதங்கள், சிறப்பம்சம் போன்றவைகளை உள்ளடக்கி ஆழம் பொருந்திய நூலாக இது காட்சியளிக்கின்றது. இந்நூலைப் படிக்கும் ஒவ்வொரு இந்துவும் விநாயகரைப்

பற்றி தெளிவான அறிவைப் பெற இந்நூல் உதவுவதோடு, இந்து சமயத்தை ஒரு பாடமாக கல்விகற்கும் மாணவர்களுக்கும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கும் உகந்த வகையில் பயன்படும்.

இந்துக்கள் தமது வீடுகளிலும் கைநூலாக வைத்துப் படிப்பதற்கும் ஏற்ற விதத்தில் அமைந்திருப்பதால் இப்பயனுள்ள நூலை யாவரும் படித்து இன்புறவேண்டும் என்பதே என் அவா.

இந்நூலாசிரியரின் சமயப் பணியை நான் பாராட்டுகிறேன். மேலும் பல நூலல்களை சைவசமயத்தின் வளர்ச்சிக்காக இவர் வெளிக்கொணர வேண்டும். இந்த உயரிய பணியினை மேற்கொண்ட நூலாசிரியருக்கு எனது பாராட்டுக்களை தெரிவித்து நல்லாசிகளை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

பி.பி.தேவராஜ்,
இந்துசமய, கலாச்சார
இராஜாங்க அமைச்சர்



களுவாஞ்சிகுடி சைவ மகாசபைத் தலைவர், பண்டிதர்

## சைவமாமணி திரு வி.விசுவலிங்கம் அவர்களின் அணிந்துரை

**''வினை தீர்க்கும் விநாயகர்''** என்னும் பெயருடைய இந்நூல் சைவசமய மக்களுக்குக் கிடைத்த அரும் பெரும் பொக்கிஷமாகும். இதை இயற்றி வெளியிட்டவர் திரு.தங்கவேலோயுதன் என்னும் பேர றிஞராவர். இவர் மட்/கோட்டைக் கல்லாற்றைப் பிறப்பிடமாகவும், குருக்கள் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட அரசாங்க ஊழியர் ஆவர். சிவநெறி தழுவிச் சீருடன் வாழும் இவர் சிறந்த தமிழ்ப் பற்றும் இறை பக்தியுங் கொண்டவர்.

இவரால் ஆராயப்பட்டு வெளியாகியுள்ள இந்நூல் படிப்போர் உள் ளத்தைக் கவருந் தன்மையுடையது. சைவாபிமானிகள் அவசியம் அறிய வேண்டிய முக்கிய சமயக் கருத்துக்களைக் கொண்டது. சைவ மதக் கோட்பாடுகள், விநாயகக் கடவுளது பிறப்பு, தோற்றம் பெருமை, முதன்மை, அற்புதங்கள், வழிபாட்டு முறைகள், திரு உருவ விளக்கம் போன்ற விடயங்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவ்வா ராய்ச்சிகளுக்குப் புராண இதிகாசங்கள், திரு முறைகள் போன்ற புரா தன நூல்கள் தக்க சான்று பகர்கின்றன. வண்டுகள் நறுமணங் கமழும் பல மலர்களைத் தேடி அவற்றில் உள்ள நறுந்தேனை ஒன்று கூட்டிச் சேமித்தது போல, இந்நூலும் சமய தத்துவங்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கியுள்ளது.

ஆணவ வினையினால் கண்டுண்டு அஞ்ஞான இருளில் மூழ்கி தீய நெறியில் ஆழ்ந்து உழலும் ஆன்மாக்களை மறக்கருணையால் தண் டித்து, அறக் கருணைகாட்டி ஆட்கொள்ளும் இறைவனது திருவிளை யாடல்களைக் கொண்ட பல புராணக் கதைகள் இந்நூலில் விளக்கப் பட்டுள்ளன. இந்நூலைப் படிப்பதால் பல நூல்களைக் கற்ற அறிவைப் பெறலாம். இத்தகைய நூல்களை மேலும் இயற்றிச் சமயப்பணி புரிவ தற்கு ஆசிரியருக்குத் திருவருள் புரியுமாறு விநாயகக் கடவுளை வேண்டுவோமாக.

வி.விசுவலிங்கம்.

குருக்கள்மடம்/கலைவாணி மகாவித்தியாலய அதிபர், சைவப்புலவர்

## *திரு.த.சாந்தலிங்கம்* B.A. *அவர்களின்*

## *சிறப்புரை*

இந்து சமயம் என்று சொல்லும் போது, அதில் அறுவகைச் சமயங்கள் உள்ளடக்கியிருப்பதை நாம் அறிவோம். அதில் ஒரு பிரிவான **"காணாபத்தியம்"** விநாயகர் வழிபாடு பற்றிச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றது. எனினும் தற்போது விநாயகர் வழிபாடு ஒரு தனிப் பிரிவாக இல்லாமல் சைவத்திற்குள் இணைந்து விட்டன.

சைவக் கோயில்களிலே அவை எந்த மூர்த்திக்குரிய கோயில்களாக இருந்தாலும் முதல் பூசை விநாயகருக்கே நடைபெறுகின்றது. சைவ சமயத்தவர்கள் தங்கள் சுபகருமங்கள் எல்லாவற்றிலும் விநாயகருக்கே முதல் வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

மட்டக்களப்பில் விநாயகர் கோயில் இல்லாத ஊர்களே இல்லை எனக் கூறலாம். அந்த அளவிற்கு இப்பகுதி மக்களின் வழிபாட்டில் விநாயகர் வழிபாடு முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

கோட்டைக்கல்லாறு கிராமத்தைப் பிறப்பிடமாகவும் குருக்கள்மடம் கிராமத்தைப் வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்கின்ற அன்பர் கந்தவனம் தங்கவேலாயுதன் அவர்கள் விநாயகர் மேல் மிகுந்த நம்பிக்கை கொண்டவர். வெள்ளிதோறும் களுதாவளைப் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய்யும் வழக்கம் இவரிடம் உண்டு. இவரது ஆக்கமான "வினைதீர்க்கும் விநாயகர்" என்ற நூலைப்படிக்கும் பாக்கியம் அடியேனுக்குக் கிடைத்தது. விநாயகர் வழிபாடு பற்றிய பல்வேறு அம்சங்கள் இதில் சிறப்பாக விளக்கபட்டுள்ளன. மிகவும் எளிய நடையில் எல்லோரும் வாசித்துப் பயன்பெறக் கூடியவகையில் எழுதியுள்ளார்.

வாழ்க அவர் தொண்டு!.

**த.சாந்தலிங்கம்**

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவரும்,
ஓய்வுற்ற கல்வி அதிகாரியுமான

## *சிவத்திரு ம.சிவனேசராசா* B.A. **அவர்களின்**

## *பாராட்டுரை*

இந்துக்கள் வணங்கும் தெய்வங்களுள் விநாயகப் பெருமானின் வணக்கம் மிகப் பிரபலமானது. விநாயகப் பெருமான சாணத்தில் அல்லது மஞ்சளில் அறுகம்புல்லை வைத்து வணங்குவது முதல் கோயில்களில் வைத்து வணங்குதல் வரை பல்வேறு நிலைகளில் மிகவும் இலகுவாக வணங்கப்படக்கூடிய தெய்வம். எந்த வேலை யைத் தொடங்குவதானாலும் விநாயகப் பெருமானை வணங்கிச் செய்வது சைவ மரபு.

இங்ஙனம் வேண்டுவார் வினையையும் விக்கினத்தையும் தீர்க்கும் விநாயக வணக்கம் இந்துக்களல்லாத மக்கள் மத்தியிலும் பிரபலம் பெற்றுள்ளது. சிங்கள மக்கள் கணதெய்யோ என அவரை வணங்கு வர். விநாயக வணக்கம் தீபெத், சீனு, மங்கோலியா வழியாக யப்பான் வரை சென்றுள்ளது.

இத்தகைய விநாயகப்பெருமான் பற்றிய அரிய பல செய்திகளை சமய நூல்களிலும்,இலக்கிய நூல்களிலுமிருந்து திரட்டிய சமயப்புலவர் திரு. க. தங்கவேலாயுதம், அவர்கள் **''வினை தீர்க்கும் விநாயகன்''** என்னும் சிறந்த நூலை எழுதியுள்ளார்.

இந்நூல் விநாயகப்பெருமானின் பெருமையை அறிய விரும்புவோ ருக்கும் இளைஞர்களுக்கும் பெரும் பயனளிக்கும் என்பது எனது நம்பிக்கை.

அவரது அயராத முயற்சியின் பயன் இந்நூல். அவரது முயற்சியை பாராட்டுவதுடன் அவரது நூலை வாங்கி ஆதரிக்குமாறு சைவ பெரு மக்களை வேண்டிக்கொள்கிறேன்.

**ம. சிவநேசரசா.**

# முகவுரை

அகரத்தை அறித்த மனிதன் ஆதிகாலத்தே அதனோடு சேர்ந்து வரு கின்ற உகரம் மகரத்தையும் அறியலானான். இவை மூன்றும் சேருகின் றபோது ''ஓம்'' என்பது ஒலிக்கின்றது. இந்த ஒலியே உலகில் முதன் முதல் தோன்றிய ஒலியென நம்பப்படுகிறது. இதுவே பிரணவம், அந்தப் பிரணவ சொரூபியாக இருப்பவரும் விநாயகரே. எனவே தான் அவர் விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனாக வைத்து வழிபடப் படுகிறார்.

இந்து சமயத்தின் சிறப்புக்களையிட்டு ஆராயும்போது, அது வாழ்க் கைவேறு சமயம் வேறு என்று வித்தியாசம் காட்டாது. வாழ்க்கையே சமயம்; சமயமே வாழ்க்கை என்னும் மதாபிமான தத்துவத்தைக் கொண்டதாகும். உலகில் உண்டான உயிருள்ள பொருட்கள் உயிரற்ற பொருட்கள் அத்தனையிலும் கடவுள் தன்மையினைக் கண்டு அதற் கேற்றவாறு பல மூர்த்த வழிபாட்டு முறைகளைக் கொண்டதாகும். சமய வழிப்பாதையில் ஆரம்ப கட்டத்தில் விக்கிரக வழிபாடு முக்கி யம் என்பதை தெளிவு படுத்தவே விக்கிரக வழிபாடு தோற்றுவிக்கப் பட்டது.

நெஞ்சுக்கு எப்போதும் நிம்மதி ஆண்டவன் சந்நிதி என்பதற்கேற்ப ஆலய தரிசனம் அமையப் பெறுகிறது.

விநாயகரைப் பற்றி பூரண அறிவு எமக்கு வேண்டும். அந்த வகையில் அவரின் தோற்றம் அவரின் திருஉருவ விளக்கம், எங்ஙனம் வழிபாடு செய்வது போன்ற விடயங்கள் குறிக்கப்படுகின்றன. விநாயக வழிபா டானது மிகவும் எளிய முறையில் வழிபடக்கூடிய தொன்றாகும்.

இந்த வழிபாட்டின் பழமை அவரது நாமங்களும் விளக்கங்களும், மேலும் மேற்கொண்டு விநாயகர் எவ்வாறு முதல்வனாகக் காணப்படு கின்றார் போன்றவைகள் புராண உதாரணங்களுடன் குறிப்பிடப்பட் டுள்ளன.

விநாயக வழிபாடு இலங்கை இந்தியாவில் மட்டுமன்றி பலவெளிநாடு களிலும் வணங்கப்படுகிறது. மகா கணபதியின் முப்பத்திரண்டு திவ்

விய தரிசனம் மற்றும் விநாயகர் விரும்பும் நிவேதனப் பொருட்கள், புஷ்பங்கள், வன்னிஇலை, அறுகம்புல் போன்றவற்றின் மகிமைகள் அற்புதங்கள் சிலவும் தரப்பட்டுள்ளன.

விநாயகர் ஆலயங்களில் விநாயகர் பாடலே பெரும்பாலும் படிப்பது நல்லது. அதன் பிரகாரம் விநாயர் துதிப்பாடல்கள் பஜனைப் பாடல்கள் இடம்பெறுகின்றன.

அல்லல்களையும் அத்தி முகத்தானின் இந்நூலை அச்சேற்றி அனைவரும் அறியும் வண்ணம் வெளியீடு செய்வதற்கு உதவிய அன்பர்கள் நண்பர்கள் அனைவருக்கும் நன்றி கூறுவதோடு நூல் சிறப்புற அமைய ஆசியுரை வழங்கிய மட்டக்களப்பு இராமகிருஷ்ணபுரம் இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஜீவனானந்த அவர்களுக்கும், ஆசியுரை வழங்கிய மாண்புமிகு இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி.பி தேவராஜ் அவர்களுக்கும், அணிந்துரை வழங்கிய பண்டிதர், சைவமாமணி திரு.வி.விசுவலிங்கம் அவர்களுக்கும் பாராட்டுரை வழங்கிய மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் முன்னாள் வட்டாரக் கல்வி அதிகாரி திரு.ம.சிவநேசராசா அவர்களுக்கும், சிறப்புரை வழங்கிய குருக்கள்மடம் கலைவாணி மாகவித்தியாலய அதிபர், சைவப்புலவர் திரு.த.சாந்தலிங்கம் B.A அவர்களுக்கும், என்னைப்பற்றி எழுதிய அன்பர் திரு.காசுபதி-நடராஜா அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பாடுடையேன்.

மேலும் அச்சுப்பதிவுக்கு முன் தட்டச்சு செய்வதில், எழுதுவதில் உதவியவர்களுக்கும் அச்சுப்பதிவை அழகுற வடிவமைத்து குறுகிய காலத்தில் வெளியிட உதவிய மட்டக்களப்பு புனித செபத்தியார் அச்சக உரிமையாளர் திரு. அ.சிவதாசன் அவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

''உருத்திரபதி''
குருக்கள்மடம்.
05.12.92

கு.தங்கவேலாயுதன்

## ஆக்கியோன் - யார் இவர்?

கோட்டைக்கல்லாறு கந்தவனம்-சின்னத்தங்கம்
தம்பதிகளின் மூத்த புதல்வனாக,
குருக்கள்மடம் கணபதிப்பிள்ளை - கஸ்தூரிபாயின் துணைவனாக,
கோட்டைக்கல்லாறு, பெரியகல்லாறு, கல்முனை வெஸ்லி, கல்லடி
உப்போடை சிவாநந்த வித்தியாலயங்களில் பயின்று,
புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை முதலாந் தமிழறிஞர் நெறிநின்று,
யாழ்/சைவப்பட்டதாரிகள் சங்கத்தினூடாக ''சைவப்புலவர்'' ஆகி,
கொழும்பு விவேகாநந்த சபையின்
இந்துமத உயர்தகைமைச் சான்றிதழ் பெற்று,
ஆசிரியராக, கிராமசேவையாளராக, கிராம அபிவிருத்தி அலுவலரா
க, கிராம அபிவிருத்திப் பயிற்சியாளராக செயலாற்று திறன் மிகுந்து
திணைக்களத் தலைவர்களாலும், அரச அதிபர்களாலும் பாராட்டப்
பட்டவர்.
மனித நேயத்தாலீர்க்கப்பட்டு மாவட்டதத்தின்
பல்வேறு பாகங்களிலும் பணியாற்றிச்
சிறப்பு மிகு சேவையாளரானவர்.
அறநெறி வாழ்வு, ஆழ்ந்த புலமை எவர்க்கும் உதவும் பண்பு,
மேடைகளிலும், வானொலியிலும் பத்திரிகைகளிலும்
பேசியும் எழுதியும் சிறப்புறுபவர்.
திருவருள் துணைகொண்டு 'வினை தீர்க்கும் விநாயகர்'
எனும் நூலை இப்போது வெளிக்கொணர்ந்து மேலோங்குகின்ற வரு
மானவர்.
அவரே - எனது இனிய நண்பர்
சைவப்புலவர் க.தங்கவேலாயுதன்.

**காசுபதி நடராசா,**
செயலாளர்.
மட்டக்களப்பு-அம்பாறை இந்து மாமன்றம்.

# பொருள் உள்ளடக்கம்


01. சமயம் ........................................ 01

02. சமய நம்பிக்கை ............................... 04

03. இந்து சமயத்தின் சிறப்பியல்புகள் .......... 09

04. விக்கிரக வழிபாட்டில் விநாயகர்............. 15

05. ஆலய தரிசனமும் அமைப்பும்............... 17

06. விநாயகர்.......................................... 21

07. விநாயகர் தோற்றம் ............................ 27

08. விநாயகர் திருவுருவ விளக்கம் .............. 32

09. விநாயகரை எளிய முறையில் வழிபடல் .... 36

10. விநாயக வழிபாட்டின் தொன்மை ........... 40

11. விநாயக நாமங்களும் விளக்கங்களும் ...... 43

12. முதல்வன் விநாயகன் ........................ 48

13. வெளிநாடுகளில் விநாயக வணக்கம்........ 57

14. ஞானக் கொழுந்து.............................. 59

15. மகா கணபதியின் 32 திவ்விய தரிசனங்கள் . 62

16. விநாயகர் விரும்பும் நிவேதனப் பொருட்கள் . 70

17. அறுகம் புல்லின் அற்புதக் கதை............ 73
18. ஒரு அறுகம் புல்லின் மகிமை.............. 76
19. வன்னி இலையின் மகத்துவம் .............. 80
20. விநாயகப் பெருமானின் மகிமைகள்.......... 82
21. விநாயகப் பெருமானின் விசுவரூபம் ........ 86
22. வல்லாள கணபதி........................ 91
23. விநாயக புராணம்(கலைக்களஞ்சியம்)...... 98
24. விநாயக விரதங்கள்
(கலைக்களஞ்சிய விளக்கம்) ............ 99
25. இந்துமதி அனுஷ்டித்த சதுர்த்தி விரதம்... 102
26. நாலாம்பிறை.............................. 106
27. விநாயகர் காப்பும் காப்புச் செய்யுள்களும் . 108
28. விநாயகர் காப்புக் கிழமையும்
பிள்ளையார் கதையும்..................... 113
29. விநாயகர் துதிப்பாடல் ..................... 115
30. கழுதாவளைப் பிள்ளையார் ஆலயம் ..... 133

# சமயம்

உலகம் தோன்றி, உயிர்தோன்றி அளவில்லாத ஆண்டுகள் கழிந்தன. ஓரறிவு உயிர் தொடங்கி வளர, வளர பிற அறிவுகளும் பெற்று கடைசியில் ஆறறிவுடைய மனிதன் (வந்திருக்கிறான்) தோன்றினான்.

மனிதன் தோன்றிய காலத்தே இன்றைய நாகரீகமும் நல்வாழ்வும் அவனோடு தோன்றவில்லை. மனிதவளர்ச்சியும் இயற்கையில் உள்ள அறிவும் திருந்தும் நிலை ஏற்பட்ட காலத்தில் மனிதன் தன்னைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

மனிதன் அறிவு விளக்கம் பெற்ற காலத்தில் இருந்து தன் அறிவுக்கு அப்பால் ஒன்று உளது என உணர்ந்த பின் தன் உள்ளம் உரிய பொருளைப் பற்ற வேண்டும் என்ற விருப்பம் தோன்றலாயிற்று. அத்தகைய விருப்பத்தின் மலர்ச்சியே சமயமாகும். உணர்ச்சியின் வேகம் பல்வேறு வகையாகப் பரிணமித்ததின் விளைவாகப் பல சமயங்கள் தோற்றம் பெற்றன. ஆயினும் அனைத்திற்கும் அடிப்படை ஒன்றே.

மனிதனின் தொடக்க வாழ்வு காட்டில் காண்பதைத் தின்று காலம் கழித்து தன் வயிறு வளர்க்கும் நிலையே உறுதியென நினைத்தான். பின் நாட்டில் நல்லாருடன், வாழ்கின்ற நிலையினையடைந்த போது யான், எனது என்கின்ற தன்மையில் இயங்குவன என அறிந்தான். ஆனால் அவற்றில் மன அமைதியை கண்டானில்லை. மன அமைதியைப் பெற இறை உணர்வை நாடினான். அன்றுமுதல் வாழ்க்கை வழி முற்றிலும் ம்மாறாக இருக்க வேண்டும் என எண்ணினான். அவ்வழியே அன்பு வழியெனக் கண்டான். அந்த அன்பின் அடிப்படையிலே எழுந்ததுதான் சமயக் கொள்கைகள்.

## விரதம்

**மனம்:** நல்லமனம் வாழ்வையும் தாழ்வையும் சமானமாக நோக்கும், ஓட்டையும் பொன்னையும் ஒன்றாகவே நோக்கும் மனம் இயற்கையிலேயே கெட்டது. மனம் இயற்கையிலேயே நல்லதாயிருப்பதில்லை. அதனால் தான் நாம் முயற்சி எடுத்து அம்மனத்தை நல்ல மனமாக்க விரதமிருக்க வேண்டும்.

முப்பொருள் உண்மையை முற்று முழுதாக தெளிவுபடுத்துவது சைவசித்தாந்தம். உயிரும் உயிர் வாழ் உலகும், இவ்விரண்டிற்கும் மேலான இறைவனும் என்றென்றும் நிலைத்திருக்கும் பொருள்கள் என்பது சித்தாந்தத் தெளிவு. எனவே பதி, பசு, பாசம் என்ற மூன்றும் நிலைத்துள்ளன. அவற்றின் உண்மையை உணர்வதுவே சமயம். பதியின் தன்மையை பசுவினதும், பாசத்திலும் காணவே- கடவுள் தன்மையை யாரிடத்திலும் எதனிடத்திலும் காணவே சமயம். இறைவன் உலகின் உயிர்களிலே ஒன்றாய் இயங்கி இருந்தே அதற்கு அப்பாலும் தனித்து நிற்கும் தன்மையை உடையவன் என்பதை உணர்வதுவே சமயம். இந்த உன்னத உலகத்தில் இறைவனைக் காண்பதும், அந்த உலகத்தில் செய்யும் தொண்டே இறைத்தொண்டு என்று நோக்குவதும், அந்த மெய்நெறியே உலகத்தை தன்னைப் போல் ஒத்து அன்பால் நோக்கி அவ்வன்பிலே ஆண்டவனைக் காண்பதும் தான் சமயம்.

தனிமனிதன் பரந்து விரிந்து சமூகமாக மாறும் போதும், வாழ்வே சமயம், சமூகமே சமயம் என்ற அளவிற்கு பின்னிப் பிணைந்தும் வாழ்க்கையோடு ஒட்டியுள்ளது சமயம். சமயத்தை சரிவரக் கடைப்பிடித்தொழுதல் மனிதனின் தொடக்க காலத்தில் இருந்தே கடவுள் நெறி பேணப்பட்டு வந்துள்ளது. மனித இனப் பண்பாட்டின் அஸ்திவாரமே சமயமாகும். சமய வாழ்வை செப்பம் செய்யாமல் வேறு துறைகளில்

கவனம் செலுத்துவது உடம்புக்கு உயிரூட்டாமல் அணிகலன் செய்வது போலாகும்.

கடவுளும், அவன் அருளும் என்றும் மாறா இயல்போடு இருந்தாலும், சமய வாழ்வானது காலத்துக்குக்காலம் புதிய நெறியில் இயங்கும் அடிப்படையில் மாறுதல் இல்லாவிட்டாலும், காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப வேறுபடலாம். ஆகவே சமயவாழ்வே மிக முக்கியமாகிறது.

தமிழ் இனத்தின் வாழ்வு சமயப் பண்பிலே வளர்ந்து வளம் பெற்றது. அன்பு பொருந்திய அறந்தழுவிய ஒழுக்கம் நிறைந்த நல் வாழ்வை கொடுக்கும் தகுதி சமயத்திற்கே உண்டு. சமயச்சார்பற்ற ஒழுக்கம் உலகில் நிலைபெற்றிருத்தல் இயல்பானது.

சமயம் வேறு வாழ்க்கை வேறு என்று ஒரு காலத்தில் எண்ணியிருந்தனர். ஆனால் தற்போதைய புதிய சிந்தனையில் இரண்டும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்திருப்பதை மக்கள் அனுபவ ரீதியாக உணர்ந்துள்ளனர். சமயச் சார்பற்ற வாழ்க்கை சாரமற்ற வாழ்க்கை என்று மக்கள் நம்புகின்ற நிலைக்கு வந்துள்ளனர். வாழ்க்கையோடு ஒன்றுபட்ட சமய வாழ்க்கை விரும்புகின்ற வேட்கையும் மலர்ந்திருக்கின்றது. இறைவனுடைய இடமாகிய முத்தி என்னும் பேரூரை அடையவே எல்லாச் சமயங்களும் வழிகூறுகின்றது. சமயங்களை மார்க்கம் என்று வடமொழியிலும், நெறி என்று தமிழிலும் சொல்வார்கள். இறைவனாகிய தலைவன் உள்ள ஊரை அடையும் வழியே சமயம்.

* * *

# சமய நம்பிக்கை.

## 1. வாழ்வியல் துறை:

நாம் குழந்தையாகவே இந்த உலகில் தோன்றினோம். பிறந்ததும் இறைவன் அருளால் அம்மா என்னும் சொல்லை பெரும்பாலும் சில மாதங்களுக்குள் சொல்வதற்கு இறைவன் அருளுகின்றான். அன்னையின் மடியில் சில நாட்கள் பழகுகின்றோம், பின்னர் பாசமேற்படுன்கிறது. பத்துமாதம் சுமந்திருந்து ஈன்றெடுத்து பாலூட்டித் தாலாட்டும் தாயை அம்மாவென ஏற்றுக்கொண்டோம். அந்தத் தாய் ''அப்பா'' என்று சொல்லிக் காட்டி அப்பாவைக் காட்ட பின்னர் அதை முழுமையாக நம்பி ''அப்பா'' என்று அழைத்து பின் அதே போன்று அனுசரித்து நடக்கின்றோம். இந்த நம்பிக்கையே எமது வாழ்வியலில் அத்திவாரமாக அமையக்கூடிய நம்பிக்கையாகும்.

இந்த அடிமட்டத்தில் ஏற்பட்ட நம்பிக்கையானது புனிதமாக அமையுமிடத்து எதிர்காலத்தில் ஒருவரை ஒருவர் நல்ல விழிப்புணர்வோடு புரிந்துகொள்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தும். நல்லதாய், நல்ல தந்தை, நல்ல பிள்ளைகள் என்ற குடும்ப நல்லுறவை பேணிக்காக்கவும் ஏதுவாக அமையும் வளர்ச்சியடையும்போது,

''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்''

என்ற குறளுக்கு இலக்கணமாக ஒரு தாய் தன்னை ஆக்கிக் கொள்வாள்.

''தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தியிருப்பச் செயல்''

என்னும் குறளுக்கு அமைய ஒரு தந்தை தன்னை ஆக்கிக் கொள்வான்.

## 2. குருவின் நிலையியல்:

எமது வாழ்வின் ஆரம்பம் நாம் வாழும் வீடாகும். அங்கே ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'' என்னும் ஔவையாரின் பொன்மொழிக்கமைய நாம் எமது முதல் குருவாக அன்னையையும் பிதாவையும் கொள்ளவேண்டும். அப்பொழுதுதான் ''தந்தை சொல் மிக்க மந்திரமில்லை'' என்பதை உணரமுடியும்.

அடுத்து நாடுவது அறிவியல் கூடம். அங்கேயிருக்கும் ஆசிரியரை நாம் நமது குருவாக ஏற்று முழுமையாக கனம் பண்ண வேண்டும். ''எழுத்தை அறிவிப்பவன் இறைவன்'' என்று ஆன்றோர் கூறியிருக்கின்றனர். ஆகவே நமது குருவை நாம் நம்ப வேண்டும். அதற்கேற்றவாறு நாம் அனுசரித்து நடக்கவேண்டும். ''குருவே சிவனெனக் கூறின்'' என்பது திருமந்திரம். ஆகவே குரு வணக்கம் சிவ வழிபாடாகும்.

## 3. ஆன்மீகவியல் :

வாழும்போது வகையறிந்து வாழ்வதற்கு ஆன்மீகம் வகைசெய்கிறது. நாம் கடைபிடிக்கும் நெறியானது சிவநெறி. அது செம்மையானது, செழுமையானது, புனிதமான அன்பு நெறியாகும். அதில் அசைக்கமுடியாத நம்பிக்கை எமக்கு ஏற்பட வேண்டும்.

திருநாரையூரிலே சிற்பி செதுக்காத பொற்சிலையாக விநாயகப் பெருமானார் கோயில் கொண்டிருந்தார். கோயில் பூசகர் தினமும் நிவேதனப் பொருட்களை எடுத்துச் செல்கிறார். அங்கே விநாயகப் பெருமான் அத்தனை பொருட்களையும் ஏற்று கொள்கின்றார் என்று தனயன் முழுமையாக புனிதமாக நம்பிவிட்டான். ஒருசமயம் தந்தை

பூசகர் வெளியூர் செல்ல வேண்டியேற்பட்டது. அக்கடமையை நிறை வேற்றத் தனயன் கேட்கப்பட்டான். தனயனோ நிவேதனப் பொருட் களை தந்தை எடுத்துச் செல்வது போன்று, கோயிலுக்கு எடுத்துச் சென்று அங்கு விநாயகப் பெருமானுக்கு முன் படைத்துவிட்டு மனமு ருக நின்றான். தீப ஆராதனை தோத்திரம் எல்லாம் முறையாகச் செய்தபின்னரும், விநாயகப் பெருமான் நிவேதனம் செய்யாமை யைக் கண்ட தனயன் நம்பி மிகக் கவலை கொண்டு, தான் என்ன பிழை செய்தேன். எனது தந்தை கொண்டு வந்தால் எல்லாவற்றையும் சாப்பி டுகிறார் இன்று மட்டும் ஏன் சாப்பிடவில்லை என்று வினாவெழுப்பி சற்றுநேரம் பார்த்தும் சரிவரவில்லை. உடனே நம்பிக்கு கவலை மேலும் கூடியது. இனிமேல் விநாயகர் தான் வைத்த அமுதை சாப் பிடா விட்டால் நான் உயிருடன் வாழ மாட்டேன் என்று தனது தலையை மோதி உடைக்க சென்ற போது ஆச்சரியம் அசரீரி ''நம்பி கொஞ்சம் பொறு'' கற்சிலையாக இருந்த விநாயகப் பெருமான் உண் மையிலேயே தனது துதிக்கையை நீட்டி எல்லாப்படைப்புகளையும் உண்டு விட்டார். ஆனந்தக் கண்ணீர் சொரிய நம்பி வீடு செல்கிறான். வீட்டிலே நிவேதனப் பொருட்களையிட்டு விசாரித்தபோது விடயம் வெளிவந்தது. ''நம்பிக்கைக்கு நம்பிதான்'' என்பது காட்டுத்தீ போல் பரவியது.

இதனால் ஏற்பட்ட நன்மை என்னவென்று ஆராயும் போது, ஒரு புதிய சகாப்தமே இந்து சமயத்தின் கலங்கரை விளக்கமாகத் தோன்றி யுள்ளது. நம்பியின் நம்பிக்கையால் எழுந்த நற்பயன் காரணமாக இன்று நாம் படித்துப் பயன் பெறுகின்ற தேவார திருமுறைகளைப் பெற்றோம்.

கடவுள் திருநாம மகிமைகளை விளக்கும் ஒரு பண்டிதர் ஒரு சமயம் புராண விரிவுரைகள் செய்யும்போது,

''கடவுள் திருநாமம் உலகமாகிய சம்சார சமுத்திரத்தை கடக்க உதவும் ஒரு பெரிய மரக்கலமாகும்'' என்பதை பண்டிதர் சொல்லிக் கொண்டிருந்த போது அவ்வழி சென்ற பால் கொண்டு செல்லும் பெண்கள் இருவர் மனதாரக்கேட்டு நம்பி விட்டனர். அவர்கள் இருவரும் அந்தக்கணமே அதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டனர். கடவுளின் திருநாமம் சமுத்திரத்தை கடக்க உதவும். அன்று தொட்டு கடவுள் திருநாமத்தைச் சொல்ல ஆரம்பித்தார்கள்.

தாங்கள் பால் சேகரித்துச் செல்லும் வழியில் ஒரு ஆற்றைக் கடந்தே செல்ல வேண்டும். அவர்கள் முன்பு அதைக் கடந்து செல்வதற்கு படகுக்காரனின் உதவியை நாடுவது வழக்கம். பண்டிதரின் விளக்கத்தை முழுமையாக நம்பிய பால்காரிகள் இருவரும் இனிமேல் ஆற்றைக் கடப்பதற்கு படகுக்காரனை நாடாது நாம் இறைவனின் திருநாமத்தையே ஓத வேண்டும் எனத் தீர்மானித்தனர். அவ்வாறு அன்று கடவுளின் திருநாமத்தை மனதில் பதியவைத்து பிரணவத்தை ஓதிக் கொண்டு ஆற்றில் இறங்கினர். அவர்கள் ஆற்றை மறந்தனர். தங்களையும் மறந்தனர். கடவுள் திருநாமத்தோடு ஐக்கியமானார்கள். எந்த விதச் சிரமமுமின்றி ஆற்றுநீரின் மேல் நடந்து அதன் அக்கரையை அடைந்தனர். அதன் பின் அப்படியே செய்து படகுக்காரனுக்கும் காசு கொடுக்க அவசியமில்லாமல் போய்விட்டது. சில நாட்கள் அவ்வாறே செய்த பின் தங்களுக்கு இந்தப் புனித வழியைக்காட்டி நம்ப வைத்த பண்டிதருக்கு நன்றி சொல்ல வேண்டும் என நினைத்து பண்டிதரை அழைத்துச் சென்று ஆற்றைக் காட்டி வழமையாகச் செய்வது போன்று இறைநாமத்துடன் அக்கரை சென்றனர். அவர்களுடன் கூடிப் பண்டிதரும் வருகிறார் என்ற எண்ணினர். ஆனால் பண்டிதர் வரவில்லை. மீண்டும் பண்டிதரிடம் ஏன் வரவில்லை என வினவினர். பண்டிதர் தானாகவே உண்மைநிலையை உணர்ந்து கொண்டார்.

அசைக்க மடியாத நம்பிக்கையே வெற்றியின் இரகசியம். சிறிதும் சந்தேகமில்லாமல் பற்றுதலோடு ஏற்படும் நம்பிக்கையே உண்மை யான நம்பிக்கை. ஆகவே சாதாரண பால்காரிகளையும் அற்புதம் நிகழ்த்த வைத்திருக்கிறது என்பதை அந்தப் பண்டிதர் உணர்ந்து கொண்டார்.

ஒரு யானைக்குத் தும்பிக்கை எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் எமது வாழ்க்கையில் "நம்பிக்கை", நம்பிக்கையில்லாதான் வாழ்வு தும்பிக்கையிழந்த யானை போலாகும் என்பார்கள். ஆகவே அதுபோலல்லாமல் எமது வாழ்க்கை மேலும் சிறப்புற ஆக்குவதற்கு செம்மை நெறியாகிய சிவநெறியில் நம்பிக்கை வைத்து வாழ்வை சிறப்பிப் போமாக.

**ஓம்**

உலகில் முதன் முதல் தோன்றிய ஒலி ஓம்.
அந்த ஒலியில் அமைந்திருப்பவர்
விநாயகப் பெருமான்.

**'ஓம் எனும் பொருளிலே உற்றோய் போற்றி'**

விநாயகக் கடவுள் அர்ச்சனை மலர்

# இந்து சமயத்தின் சிறப்பியல்புகள்

உலகின் மனித இனம் எப்பொழுது தோன்றியதோ அன்றே உலக ளாவியரீதியில் தோன்றிய ஒப்பரிய, உயரிய நோக்குடைய விசால மான மதம் இந்துமதமாகும். இந்துமதம் மற்றைய மதங்கள் எல்லாவற் றையும் அரவணைத்துக் கொள்வதோடு ஒருவன் எந்த மதத்திலிருந்து அதனைச் சாதனை செய்தாலும் அவன் தவறாது இறைவனை அடை வான் என்று சொல்லும் பெருநோக்கினை உடையது. 'எங்கள் சமயத் திற்கு வாருங்கள் உங்களுக்கு சகல சௌபாக்கியங்களும் வழங்கப்ப டும்' என்று மத மாற்றத்தை இன்று வரை செய்யாத ஒரே ஒரு சமயம் இந்து சமயமாகும்.

பண்டைக்காலத்தில் சிந்து நதியையும் அதனைச் சூழவுள்ள பகுதி யிலும் வாழ்ந்து வந்தவர்களை 'இந்து' என அழைக்கலாயினர். பின் னர் நாளடைவில் அப்பதம் முழுப் பாரத தேசத்தவர்களையும் அழைக் கும் தன்மைக்கு பரவியிருந்தது.

இந்து என்றால் யார் என்பதனை சிந்திக்கும் போது பல உத்தம

தத்துவ கருத்துகளைக் கொண்டுள்ளமையை அறிய முடிகின்றது.

1. ஓர் உயிர் எந்தக் காரணத்தினாலாவது, வருந்துவதாக இருந்தால், அதற்காக மிகவும் துக்கித்து, அவ்வுயிர்க்கு நேர்ந்த துன்பத்தை தனக்கு நேர்ந்ததாகக் கருதி, அதனை அகற்றுவதற்கு எவனொரு வன் துணை புரிகிறானோ அவனே இந்து.
2. நினைவிலும், சொல்லிலும், செயலிலும், எத்தகைய இழிவும் பிழையும் நிகழாமல் ஒழுகுபவன் எவனோ அவனே இந்து- அவனது சமயமே இந்து சமயம்.

சேர் மாஜியர், வில்லியம்ஸ்: ஏனைய எல்லாச் சமயங்களையும் தனது பரந்து விரிந்த பெரு நோக்கினால் தன்பால் ஏற்று இணைத்து

தழுவிக் கொள்ளும் பெருமாட்சியை உடையதாக இந்துசமயம் இயங்குகிறது. அவரவர்களின் மனப்போக்கிற்கும் இயல்பிற்கும் ஏற்ப அவரவர் பொருந்திய நலன்களை விளைவிக்கும் திறனை இந்துசமயம் உண்மையிலேயே பெற்று விளகுங்கிறது. மனித இனத்திற்கும் மனித மனப்போக்குக்கும் உரிய எத்தகைய வேறுபாடுகளுக்கும் இணங்கி இசைந்து ஒத்துச் செல்லும் தன்மையில் இந்து சமயம் இணையற்றதாகத் திகழ்கின்றது. இவ்வியல்பே அதன் வலிமைக்கும், வளர்ச்சிக்கும் காரணம் எனலாம். தத்துவ ஞானிகள், கவிஞர்கள், சிந்தனையாளர்கள், அமைதி விரும்புவோர், தலைமை நாடுவோர், உணர்ச்சி மிகுந்தோர் செயல்வகை விழைவோர் ஆகிய பலருக்கும், மனநிறைவு அளிக்க வல்லதாக இந்துமதம் இனிய பற்பல சிறப்பியல்புகளைத் தன்னிடம் கொண்டுள்ளது.

அருள்நந்தி சிவாசாரிய சுவாமிகள் ''பிணக்கு அற்ற ஒரு பெரும் சமயம்'' எனக் காண்கிறார். எது சிறந்த சமயம் என்பதை விளக்கும் போது, எந்த சமயத்தையும் நூலையும் இகழாமலும், இதுவே சிறந்தது அதுவே தாழ்ந்தது என்னும் பூசல்கள் இல்லாமலும், பல்வேறு சமயங்களும் நூல்களும் கூறுகின்ற எல்லா உண்மைகளையும் ஏற்று இனிது உடன்பட்டுத் தழுவிக் கொண்டு அவைகள் அனைத்திற்கும் பொதுவானதாய், அவற்றிற்கெல்லாம் ஒரு நிலைக்களனாய்த் திகழ்ந்து, பரந்து விரிந்த மனப்பான்மையுள்ள ஒரு சமயம் இந்துசமயம் எனக் கூறுகின்றார்.

ஆராய்ச்சியாளர்கள் கண்ணோட்டத்தில் கவனிக்கும் போது உலகத்தில் முதன் முதல் தோன்றிய வேதம் இருக்கு வேதம் என்பதனை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொண்டுள்ளார்கள்.

அகழ்வு ஆராய்ச்சிகளின் மூலம் சிவலிங்க வழிபாட்டின் தொன்மை சிவலிங்கத் திருவுருவின் பழமையும் பெருமையும் எல்

லையற்றன என்பதை மொசஞ்சதாரோ கரப்பா போன்ற இடங்களில் மேற் கொண்ட ஆராய்ச்சிகளில் தெளிவாகியுள்ளது.

அமெரிக்காவில் ''சிவன் கோயில்'' என்று அழைக்கப்படுகின்ற ஒரு திட்டு இருப்பதாகவும் இது நூறாயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட தென்று ஆராய்ச்சியாளர்களால் கணக்கிடப்பட்டுள்ளது என்று அறி யக் கிடக்கிறது.

உலகில் நிலவி வரும் பல்வேறு மதங்களில் மிகவும் பழமையும், பெருமையும் வாய்ந்து திகழ்வது நமது இந்துமதம்.

1. சிறந்த பொதுமைப் பெருநெறி
2. கடவுள் நம்பிக்கை
3. பல்வேறு சடங்குகள்
4. பாவம், புண்ணியம், ஊழ்வினை, பிறப்பு, இறப்பு, மறுபிறப்பு, சுவர்க்கம், நரகம் என்பன பற்றிய தெளிவான கொள்கைகளைக் கொண்டுள்ளது.

பழமையினைப் பார்க்கும் போது;

| | | | |
|---|---|---|---|
| 1. | யூதமதம் | - கி.மு | 1500ம் ஆண்டு |
| 2. | விஷ்வோமதம் | - கி.மு | 660ம் ஆண்டு |
| 3. | சொராஸ்ரமதம் | - கி.மு | 660ம் ஆண்டு |
| 4. | டாவோயிரம் | - கி.மு | 604ம் ஆண்டு |
| 5. | சமணம் | - கி.மு | 599ம் ஆண்டு |
| 6. | பௌத்தம் | - கி.மு | 560ம் ஆண்டு |
| 7. | கன்-பூச்சியம் | - கி.மு | 551ம் ஆண்டு |
| 8. | கிறிஸ்தவம் | - கி.பி | 4ம் ஆண்டு |
| 9. | இஸ்லாமியம் | - கி.பி | 570ம் ஆண்டு |
| 10. | சீக்கியம் | - கி.பி | 1469ம் ஆண்டு |

இவ்வாறு காலம் ஏதும் கூறுவதற்கு இயலாத நிலையில் வரலாற்றுக் காலத்திற்கும், மிக முற்பட்டு, மிக்க பழமை வாய்ந்ததாக இந்துமதம் விளங்கிறது.

இன்றும், எகிப்து, மெச்சிக்கோ, பாபிலோனியா, ஆசிரிய பினிசீயா, சிறிய ஆகிய கிரிசு, உரோம் போன்ற இன்னும் பல நாடுகளில் இந்து மதம் சிறப்பாக இயங்கி வருகிறது.

**அன்னை வசந்தா அம்மையார்,**

நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக சமய ஆராய்ச்சி செய்த வசந்தா அம்மையார் இந்துசமயம் என்னும் பெயரால் வழங்கி வருகின்ற சிறந்த சமயத்தைப் போற்றி நிறைவுடையதும் அறிவார்ந்ததும், உயிர்க்கு உய்வளிக்கக் கூடியதும் ஆகிய சிறந்த சமயம் இந்து சமயத்தை விட வேறு எதுவும் இல்லை.

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பதுவே இந்து மதத்தின் அடிப்படை நாதம். இதைப் பலர் விளங்கிக் கொள்வதில் மயக்கம். சுவாமி சுத்தானந்தர் கூறுவது போன்று,

> ''எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
> எல்லா உடலதும் இறைவன் ஆலயமே''

என்பதில் நன்கு உணர முடிகின்றது.

உலகில் பல கோடானு கோடி மனித இனம் தோன்றியுள்ளது. அந்தக் கோடானுகோடி மனிதர்கள் எல்லோரும், ஒரே விதமாக சிந்திப்பதில்லை. ஒரே விதமாக செயற்படுவதில்லை. ஒரே விதமாக உடுப்பதில்லை, ஒரே விதமாக உண்பதில்லை, ஆகவே மனிதன் பல எண்ணங்களைக் கொண்டவன். இந்த உண்மையினை உணர்ந்தது இந்து மதமே. ஆகவே மக்களின் மனநிலைக்கேற்ப இறைவனை

வழிபடுவதற்குரிய உப பிரிவுகளை ஆதி சங்கரர் போன்ற அறிவுச்சுடர்களால் இறைவன் ஆக்கி வைத்தார். எப்படியிருந்தும் சென்றடைவது ஒருவனையே.

''யா தொரு தெய்வங் கொண்டீர் அத்
தெய்வமாகி மாதொரு பாகனார் தாம் வருவர்''

என்பதற்கமைய இறைவன் அருள் பாலிக்கின்றான். இதனாலே தான் பல மூர்த்திகளை வழிபட்ட போதிலும் அடிப்படைத் தத்துவம் ஒன்றே தான். மேலும் விளக்க வேண்டின் வடிவம் அற்ற இறைவனுக்கு ஏன் வடிவம் என்று பார்க்கும் போது, பஞ்ச பூதங்களில் ஒன்றாகிய நெருப்பை நாம் தனியே பார்க்க முடியாது. ஏதேனும் கட்டையையோ அல்லது திரியையோ பற்றிக் கொண்டால் தான் பார்க்க முடிகிறது. இவ்வாறு ஆரம்பப் படியில் இருந்து வழிபடும் போது ஏதாவது துணைதேவை என்பது புலனாகின்றது.

இந்து சமயத்தின் அதிவிசேட சிறப்புத் தன்மை என்னவெனில் இது இயற்கையோடிணைந்த ஒரு மதம். நமது நாளாந்த வாழ்வியலோடு இணைந்திருக்கின்ற ஒரு மதம். நாம் கண்களைத் திறந்து எதைப் பார்க்கின்றோமோ அத்தனை பொருட்களிலும் கடவுள் தன்மையைக் காண்பது இந்துமதம். பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிறைந்து இருக்கிறான் நம் இறைவன்.

கல்லிலே கடவுள், கனியிலே கடவுள், மண்ணிலே கடவுள், மலையிலே கடவுள், மரத்திலே கடவுள், நீரிலே கடவுள், நெருப்பிலே கடவுள், மனிதனிலே கடவுள், மிருகத்திலே கடவுள், பறவையிலே கடவுள், பட்சிகளிலே கடவுள், இவ்வாறாக உலகில் காணப்படும் அத்தனை 'சித்து', 'அசித்து' பொருட்களிலும் கடவுள் தன்மையை பாவனை செய்து வழிபடும் ஒப்பரிய உயர்ந்த மதம். மேலும் சனாதன

தர்மத்தை வெகு சிறப்பாகக் கடைப் பிடித்து வரும் நிலையான மதம் இந்துமதம்.

மேலும் வாழ்வியல் துறையில் கணவன் மனைவி, வீடு வாசல், சுப மற்றும் துக்க சம்பவங்கள் அத்தனையிலும் சமய முறைப்படி செயற்ப டுவது ஈண்டு நோக்கற்பாலது. குறள் தந்த பெருமை இந்து சமயப் பெண்ணுக்கே உரித்தானது. கணவன் வீட்டில் இருந்து வெளியே செல்லும் போதும் முறையாக வழியனுப்பி, வரும் போதும் வழிமேல் விழிவைத்து காத்திருந்து உணவளிப்பாள். சமையல் செய்யும் விதம் கூட சிறப்பாகக் கூறப்படுகிறது. முதலில் சோறு பின்னரே கறி வகை கள் சமைக்கப்பட வேண்டும்.

இந்து மதத்தின் சிறப்பியல்புகள் பற்றி கூறும் போது யோகம், மற்றும் ஜீவன் முத்தி பற்றி சிறப்பாகக் கூறலாம். உடம்பில் ஆன்மா இருக்கும் போதே பேரின்ப அனுபவத்தைப் பெறுவது ''ஜீவன் முத்தி'' எனப்படும். இந்தச் சிறப்பானது இந்து சமயத்திற்கே உரித்தானதாகும். ஏனைய சமயங்களெல்லாம் இறுதியாகக் கடவுளை அடைந்து பேரின்ப பெருவாழ்வை அடைவதாக கூறுகின்றன. இறந்த பிறகு அடையும் நிலை அது. இந்து மதமோ இந்த உடம்பில் இருக்கும் போதே ஆன்மா அந்த இன்பத்தை அடையும் நெறியைச் சொல்கிறது.

''இத்தேகமோடு காண்பனோ''

என்ற தாயுமானவர் வாக்கில் இருந்து இந்த உண்மையைக் காண் கின்றோம்.

இவ்வாறு அன்பின் அடிப்படையில் உருவாகிய இந்துமதம். அன்பு கனிந்து, அருள் சுரந்து அறம் காக்கும் தத்துவத்தை உள்ளடக்கியுள் ளது.

* * *

# விக்கிரக வழிபாட்டில் விநாயகர்

தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக, சமயப் பயிற்சி அவசியம் எனக் காணப்பட்டது. சமயப் பயிற்சியாகிய கடவுள் வணக்கம் கணபதி வணக்கத்தையே அடிநிலையாகக் கொண்டுள்ளது. தற்போதைய நிலையில் எல்லோரினதும் கவனத்தையும் கவர்ந்திருப்பது விநாயகர் வழிபாடேயாகும். இந்துசமயத்தின் சிறப்பியல் புகளைப்பற்றி ஆராய்ந்த மனோ தத்துவ நிபுணர்கள் விக்கிரக வழிபாடு, விக்கிரக ஆராதனை பற்றி ஐயந்திரிபற விளக்கியுள்ளனர். ''உள்ளம் ஒன்றி நிற்க உருவம் வேண்டும்''. மனம் ஒன்றைப் பற்றி நின்றே உயரும். மனத்தின் ஒன்றை விட்டு ஒன்றைப்பற்றி உயரும் தன்மையை உணர்ந்து அறிய உருவத்தையுடைய இறைவன் எமது பரிபாக நிலைகட்கு ஏற்ப உருமேனி தாங்கி எழுந்தருளினார். உருமேனியை குரு உபதேச வழியில் நின்று சிந்தித்து உயர்ந்த முனிபுங்கவர்கள் தம்தம் சிந்தனையை அனைவரும் அடைந்து ஈடேற தியான சுலோகங்களாக திரட்டித்தந்தனர். அவைகளுக்கு சிவாகமங்கள் வழிகாட்டின. சிவாகமங்கள் சிவபெருமானின் திருவாக்குகளே. இந்த சிவாகமங்களையும் தியான சுலோகங்களையும் கொண்டு கடவுளைக் காட்டும் கலைத்திறனாகிய சிற்பம் செழித்தது. இதன் பயனாக தியானத்திருவுருவம் செம்பிலும் கல்லிலும், மரத்திலும், உருவாயிற்று. உருவங்கள் சிந்தனையாளனின் ஈடுபாட்டைத் தெரிவிக்கும் கருவூலங்கள் ஆயின. அழகுத் தெய்வமாக அருள் சுரந்தது. ஆகவே கலையின் வழியாக கடவுளைக் கண்டு கருணையைப் பெற்றனர். நமது மக்கள் இத்தகைய கடவுள் உருவங்களில் விநாயகர், வைரவக் கடவுள், முருகன், வீரபத்திரக்கடவுள் சிவனின் திருக்குமார மூர்த்தங்களாகும்.

தெய்வவழிபாடு என்று கூறும்போது அவ்வழிபாடானது விநாயகர் வழிபாட்டுடனேயே ஆரம்பமாகின்றது என்பதை மக்கள் வாழ்வில் இருந்து அறியலாம். எமது வாழ்வில் சில பழக்கங்கள் எம்மை அறியாமலே கலந்திருக்கின்றன. அந்தப் பழக்கத்திற்கு நம்மை ஆக்கிக் கொண்டோம். அத்தகைய பழக்கத்தில் மிகச்சிறந்த பழக்கம் உயி

ரோடே தோன்றிய பழக்கம்-தெய்வ வழிபாட்டுப்பழக்கம்- இவற்றில் ஒன்றே விநாயக வழிபாடு. பழக்கம் முற்றின் கடமை. அங்ஙனமே விநாயக வழிபாடு முற்றிக் கடமையுமாகி விட்டது.

தமிழர் தம் வாழ்வில் எதைச் செய்தாலும் பிள்ளையார் வழிபாடு வந்து விடுகிறது. எடுத்த காரியம் எளிதாக இன்பமாக முடிய வேண்டும் என்ற ஆசை அனைவருக்கும் உண்டு. அந்த ஆசையை நிறைவேற்றி வைக்கும் கடவுள் விநாயகரே என்ற நம்பிக்கை எல்லோரினது உள்ளத்திலும் நிலைத்துவிட்டது. இதன் காரணத்தாலேயே நம் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்பினாலும் பிள்ளையார் வணக்கம், காது குத்தினாலும் பிள்ளையார் வணக்கம், வீட்டிற்கு அடிக்கல், நிலை வைத்தல், வளை வைத்தல், குடிபுகுதல், ஏர்பூட்டுதல், சூடு மிதித்தல், திருமண விழாக்கள், மரணச்சடங்குகள், பெண்ணுக்கு தாலிவேலி என்று சொல்லுவார்கள் அந்ததாலியின் முக்கிய காய் உறுப்பாக அமைந்திருப்பவர் விநாயகர். இவ்வாறாகப் பலவிதமான விழாக்களைக் கவனிக்கும் போது எல்லா நிகழ்வுகளிலும் விநாயகர் கலந்திருப்பது கண்கூடு,

> ''நம்பிக்கை உண்டுநமக்கு விநாயகனார்
> தும்பிக்கை உண்டே துணை''
>
> பொல்லாப் பிள்ளையார் வரலாறு

மக்களிற் பெரும்பாலானோர் விக்கிரக ஆராதனை புரிபவரேயாவர். நம் நோக்கு புறத்தே செல்லும் இயல்பினது. அதனை அகநோக்காக்குவதற்கு பிரயத்தனம் வேண்டும். குணாதீதராகிய கடவுளை அவரது அருவநிலையில் அறியும் அநுபூதி பெறும் வரை,ஒருவன் சமயங்களையும் அவை கூறும் கடவுளிலக்கணங்களையும், விக்கிரக ஆராதனை முதலிய வற்றையும் புறக்கணிக்க முடியாது எனப்பட்டினத்துப் பிள்ளையார் திருவாய் மலர்ந்துள்ளார்.

* * *

# ஆலயதரிசனமும் அமைப்பும்

இன்று உலகில் எத்தனையோ சமயங்கள் இருக்கின்றன. அவை அனைத்தும் மக்களை நல்வாழ்வு பற்றுவதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டன. அவற்றின் அடிப்படையும் ஒன்றே.

கடவுள் நெறிபற்றி ஆதிகாலம் தொட்டு பலராலும் பரவலாக பேசப்பட்டு வந்துள்ளது. மனிதனின் தொடக்க காலத்தில் தனக்கு மேற்பட்ட சக்தி ஒன்று இருப்பதை உணர்ந்த மனிதன் பின்னர் நாளடைவில் அதை நிலைநிறுத்தி ஓரிடத்தில் சிந்திக்க தொடங்கினான். பின்னர் அதையே தெய்வமாகக் கருதி வழிபடத் தொடங்கினான். ஆன்மாவிற்கும் அந்த சக்திக்கும் இருக்கும் தொடர்பைக் கூட அறியலானான். அத்தகைய ஆரம்ப அறிவானது வளர்ச்சியடைய காலக்கிரமத்தில் உடம்பு ஆலயம், உள்ளம் பெருங்கோயில் என்ற பேருண்மையை அறிய முற்பட்டான்.

அன்புப்பெருமாட்டி ஒளவையார் தமது நல்ல நெறியில் ''ஆலயம் தொழுவதே சாலவும் நன்று'' என்று தெளிவாக்கினார். பின்னர் மேலும் விருத்தி அடைய ''கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'' என்பதை உணர்ந்தார்கள். அவ்வண்ணம் ஆன்மாவானது லயப்படுகின்ற இடமாக ஆலயத்தைக் கண்டார்கள். கடவுளுடைய திருவடியில் இந்த ஆன்மாவானது ஒடுங்குதற்குரிய இடமாக ஆலயம் தோற்றுவிக்கப்பட்டது. இவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட ஆலயங்களின் வளர்ச்சி தற்போது கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றும் ''கோயில் இல்லா ஊர் ஊரல்ல அது அடவிகாடு'' என்று சொல்லும் அளவிற்கு சிறப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆலயங்களில் நடைபெறும் சகல நடைமுறைகளும் மக்களின் வாழ்வியலோடு சம்பந்தமானது. இன்றைய காலகட்டத்தில் சிலர் கல்

லையெல்லாம் கடவுளாக்கி அதிலே பாலையும் தேனையும், பன்னீரையும் ஊற்றி வணங்குகிறார்களே என்று நினைக்கிறார்கள். ஆனால் சமயத்தை வாழ்க்கையோடு ஒன்றிய வழிமுறையாக வகுத்த நம்முன்னோர்கள் காரண காரியங்கள் கருதியே எல்லா சடங்கு முறைகளையும் ஏற்படுத்தியுள்ளார்கள்.

இவ்வாறு மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக அமைத்துக் கொண்டாலும், இறைவனுக்கு பூசை செய்யும் பொருட்களைவிட மனோபாவமும் பக்தியுமே முக்கியம் என்கிறது எமது மதம்.

## ஆலய அமைப்பு

ஆலயம் - ஆ+லயம் ஆ - ஆன்மா லயம் - சேர்தல், ஒடுங்குதல். எனவே கடவுளுடைய திருவடியில் ஆன்மா ஒடுங்குதற்குரிய இடம்.

ஆ - ஆணவமலம், லயம் - அடங்குதல். ஆகையால் ஆணவமலம் அடங்குதற்குரிய இடம்.

கோவில் - கோ+இல் கோ - கடவுள், அரசன் இல் - தங்குமிடம். ஆகையால் அண்டபிண்ட சராசரங்கள் எல்லாவற்றையும் ஆண்டு நடத்தும் அரசராகிய கடவுள் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் பொருட்டு தங்கும் இடமாகும்.

பண்டைய தமிழ்மக்களின் திறமைகளை பெரும்பாலும் சைவக்கோயில்களில் காணக்கூடியதாயுள்ளது. சைவ ஆலயங்களில் சிற்பம், ஓவியம், தத்துவம், ஞானம் முதலிய பேருண்மைகளை உணர்த்தும் கலைகளையும் நுண்பொருள்களையும் காணலாம்.

ஆகம விதிப்படி அமைந்த ஆலயங்களில் , தூபி, சிகரம், கோபுரம்,

கொடிஸ்தம்பம் முதலிய பல அங்கங்கள் அமையப்பெற்றனவாம்.

1. சித்திர ஓவியச் சிறப்புகளுடன் விளங்குபவைகளையே முறைப்படி அமைந்த கோயில் எனவும், அவ்வாறு தூபி அமைக்கப்படாமல் விதிப்படியோ அல்லது அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வரும் கோயில்களை மட ஆலயங்கள் எனப்படும்.
2. இருதய கமல ஆலயத்தை விரித்து ஞானப்பொருள் அமைய் விதிப்படி விளக்கும் இருதய பிரஸ்தாப அமைப்பு மிக விசேடம். சிதம்பர ஆலயம் உதாரணம்.
3. விமானம்-தூபி அமைந்த சரீர பிரஸ்தார அமைப்பு.

## அண்டபிண்டசயம்

காணப்படுகின்ற உலகம் - அண்டம். காணப்படுகின்ற சரீரம் - பிண்டம். அண்டத்தில் அமைந்திருப்பவை பிண்டத்திலும், பிண்டத்திலிருப்பவை அண்டத்திலும் அமைந்துள்ளன என்பதே நமது சமய நூற்கொள்கைகள்.

> **''எண்டரும் பூதமைந்தும் எய்திய நாடிமூன்றும்**
> **மண்டலமூன்றுமாகி மன்னிய புணர்பினாலே**
> **பிண்டமும் அண்டமுமாகும் பிரமனேடைவராகக்**
> **கண்டவர் நின்றவாறும் இரண்டிலும் காணலாமே''**
>
> ஞானாச்சாரியார்.

## மண்டபங்கள்

சாதாரண அமைப்பு முறையில் ஆறு

| மண்டபங்கள் | | அங்கங்கள் |
|---|---|---|
| 1. கர்ப்பக்கிரகம் | - | சிகரம் மூலஸ்தானம் |
| 2. அர்த்தமண்டபம் | - | புருவநடு |

3. மகாமண்டபம் - கண்டம்
4. ஸருபன மண்டபம் - மார்பு
5. அலங்காரமண்டபம் - வயிறு
6. சபாமண்டபம் - ஆசனம்

''புல்லினால் ஒன்று கோடி, புதுமண்ணாற் பத்துக்கோடி
செய்துமாங்காலந்தன்னில் செங்கல்லால் நூறுகோடி
அல்லினுங்குழலாங் கேளாய் ஆலயமடங்கள் தன்னை
கல்லினாற் சமைத்தபேர்கள் கைலை விட்டகலாந்தாமே.''

***

*பிள்ளையார் சுழி*

இந்துக்கள் எழுதத் தொடங்குமுன் முதலில் இடுவது பிள்ளையார் சுழியாகும்.

பிள்ளையார் சுழி என்பது 'உ'கரம் நாதமும் விந்துவும் சேர்ந்த வடிவம்.

விந்து ' ' நாதம் ' '

இதுவே ஓங்கார வடிவாகிய ஆனைமுகத்தை நினைவூட்டுவது ஆகும்.

# விநாயகர்

உலகெலாம் நிறைந்து எங்கும் தானேயாய் பரப்பிரமமாய் விளங்கு பவர் சிவபெருமான். சிவபரம் பொருளின் வேறாகாது நெருப்பிற் சூடு போல ஒன்றுபட்டு விளங்குவதே சிவசக்தி. சிவம் இயங்குவதற்கு காரணம் சிவசக்தியே, அன்புப் பெருக்காய் அருள் வடிவாய் அமைந் ததே சிவசக்தி.

சிவமும் சக்தியும் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங் கருணையின் பயனாக மக்கள் உய்யும் பொருட்டு தோற்றுவிக்கப்பட்ட மூர்த்தமே விநாயக மூர்த்தமாகும். அகர, உகர, மகர என்னும் மூன்றும் ஒன்று பட்டு ஒலிக்கும் ஓம் என்னும் பிரணவப்பொருள் விளக்கமாகி அறிவு, இச்சை, தொழில் என்னும் மூன்று சக்திகளையும் மும்மதங்களாகச் சொரியும் யானையின் திருமுகத்தையுடையவராய் விநாயகப் பெரு மான் தோன்றியுள்ளார்.

அங்குச பாசமேந்தி அம்பிகை தனையன் முன்னோன்
ஐங்கரன் மூத்தோனொன்றை யணிமநப்ர பின்னேரம்பன்
கங்கை பெற்றோன் முக்கண்ணன் கணபதியீசன் மைந்தன்
வெங்கயமுகனே யாகுவாகனன் விநாயகன்போ

-நிகண்டு-

விநாயகர் என்பது எல்லாம்வல்ல ஒரு சக்தி. அந்தச் சக்திதான் எமக்கு கற்பனையில் வெவ்வேறு வடிவங்களில் காட்சியளிக்கிறது. ஞானத்தின் தோற்றமே கணபதி. அறிவின் முதிர்ச்சிதான் ஞானம். இந்த ஞான அறிவை ஊட்டுபவர் விநாயகராகும். இதனாலேதான் திருமூலர் ''ஞானக் கொழுந்தினைப் புந்தியில் வைத்து போற்றுகின்றே னே'' எனத் திருவாய் மலர்ந்தார். ஆன்மாக்கள் சகலரும் தம்மைச் சுற்றி வட்டமிட்டுள்ள, அறம், பொருள், இன்பம், வீடு என்னும்

நான்கு படிகளையும் தாண்டியே ஆக வேண்டும். ஆகவே அதற்குரிய கலைஞானம் நாம் பெறவேண்டும். இத்தகைய கலைஞானத்தைப் பெறுவதற்கு நாம் அந்த ஞானவள்ளலாகிய விநாயகரை வழிபட வேண்டும். அவரே நமது வினைகளையெல்லாம் தீர்ப்பவர்.

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்கவல்லான்**
**விநாயகனே வேட்கை தணிவிப்பான்- விநாயகனே**
**விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்**
**கண்ணிற் பணிமின் கனிந்து.**

மண்ணிற் பிறந்தவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் வினைகளில் ஈடுபடுகிறோம். பெரும்பான்மை தெரிந்தோ தெரியாமலோ தீவினையாகவே அமைகிறது.அத்தகைய வினைகளையெல்லாம் வேரோடு அகற்றுபவர் நமது விநாயகப் பெருமான். அவரே இந்த உலகத்திற்கும், மேலுலகத்திற்கும் தலைவர். ஆனபடியால் அவரை அனுதினமும் வணங்குவோம். எமது நாளாந்த சாதாரண வாழ்வில் ஒரு பெண் தன் கணவனை நாயகனாக கருதுகிறாள். அதே போல் ஒரு வேலைக்காரன் வேலைகொள்வோனை தன் நாயகனாக கருதுகிறான். இவ்வாறு கூறப்படுபவர்கள் எல்லோரும் உடல் பற்றிய நாயகம் செலுத்துபவர்களேயாவர். ஆனால் உயிரைச் செலுத்தும் நாயகம் விநாயகருக்கே .உரியது.ஒரு பாகன் யானையை மேடு, பள்ளம் பார்த்து எவ்வாறு செலுத்துகிறானோ அதேபோன்று விநாயகரும் உயிர்களை மேடாகிய விருப்பம், பள்ளமாகிய வெறுப்பு என்பவற்றைத் தவிர்த்து சமபூமியாகிய இருவினை ஒப்பின் வழி நடத்துகிறார்.

விநாயகருடைய உருவத்திருமேனியை உற்று நோக்கினால் பல அரிய உண்மைகள் புலனாகும். அவர் ஆணுமல்லர், பெண்ணுமல்லர், அலியுமல்லர். தலை யானைத்தலை, உடல் தேவ உடல், கால் பூதக் கால், ஒற்றைக்கொம்பு இவ்வுறுப்புகள் பற்றிய உண்மைகளை சிவ

ஞான சுவாமிகள் அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் காப்புச் செய்யுளில் விவரித்துள்ளார்.

''மணிகொண்ட கோடொரு மருங்குண்மையாற் பெண்மைவடி
வென்றும்ஃதின்மையோர்
மருங்குண்மையாலான் மைவடிவென் றுமீதுகீழ்
மாறிய திருக் காட்சியால்
அணிகொண்ட உயர்திணையதென்று மஃறிணையென்றும்
யார்க்கும் கிளக்க அரிதாம்
ஐங்கரச் சிந்துரத்தின் கழந் செஞ்சரணம்
அஞ்சலித்து துதிப்போம்''

யானைக்கு கன்னத்தில் மதஜலம் கசிவது வழக்கம். அதே போல் விநாயகருக்கும் கன்னத்தில் மதம் பொழிகின்றது. என்னமதம்– வலப் பக்கம் அறக்கருணையும் இடப்பக்கம் மறக்கருணையுமாகிய மதம். ''கருணை என்னும் வெள்ள மதம் பொழிசித்தி வேழத்தை நினைத்து வரு வினைகள் தீர்ப்பாம்'' என்று பரஞ்சோதி முனிவர் திருவிளையா டற் புராணத்திற் கூறுகிறார்.

### *காணபத்தியம்*

இந்துசமயத்தின் சிறப்பியல்புகளுள் அறுவகைச் சமயங்கள் பற்றிக் கூறப்பட்டிருப்பது வழிபடும் அடியார்கள் எல்லோரும் தத்தமது மனோபாவனைக்கு இயல்பாக குறித்த மூர்த்தியை பற்றுக்கோடாகக் கொண்டு இறைவழிபாடு செய்வதற்கு ஏற்புடையதாயிற்று.

இந்துக்களிற் பலர் விநாயகரையே பரம்பொருளாகக் கொண்டு வழிபடுகின்றனர். இவ்வாறு விநாயகரை தமது முழு முதற் கடவுளா கக் கொண்டு வழிபடுபவர்களுடைய சமயம் காணபத்தியம். இவர் களை காணபதர் என அழைப்பர்.

''கணபதி பூசை கைமேற் பலன்'' என்பது இந்து மக்களிடையே காணப்படும் பெருவழக்காகும். தாம் செய்ய முனையும் காரியங்க ளெல்லாம் எந்தவித இடையூறுமின்றி நிறைவேறவேண்டுமென்று கணபதியையே தமது கண் கண்ட தெய்வமாக கருத்தில் கொள்வர். கணபதி மூலாதார சக்தி உருவினர் என்றும் பிரணவமென்ற ஓங்கார வடிவினர் என்றும் அவருடைய துதிக்கை ஓங்காரத்தையே குறிக்கு மென்றும் காணபதர் கூறுவர்.

ஓங்கார நாயகனான விநாயகரை வழிபடுபவர்கள் அவருக்கு வழிபாடு செலுத்தும் மந்திரமாக **''ஓங்கார ரூபாயநம ''** என்பதைக் கைக்கொள்வர். இதன் பொருள் ஓம் என்ற பிரணவ மந்திரவடிவின ருக்கு வணக்கம் என்பதாகும்.

விநாயகப் பெருமானின் மகிமைகள் முதலில் பார்க்கவ புராணத் தில் சமஸ்கிரதத்தில் எழுதப்பட்டன. பிருகு முனிவரால் உபதேசிக்கப் பட்டதால் பார்க்கவ புராணம் என்று அதற்குப் பெயர் விளங்கலா யிற்று. பின்னர் அதைச் சுருக்கமாக விநாயகர் புராணம் என வெளி யிட்டனர். கச்சியப்ப முனிவர் விநாயக புராணத்தை தமிழில் கவிதை வடிவில் பாடியுள்ளார். இதில் உபாசனா காண்டம் என்றும் லீலாகாண் டம் என்றும் இருபகுதிகளாகப் புராணம் அமைந்துள்ளது. பிருகு முனிவர் சோமகாந்த ராசனுக்கு விநாயகரின் மகிமைகளை எடுத்து சொல்வது உபாசனா காண்டம் என்றும் விநாயகரின் அவதார மகிமை களை எடுத்துச் சொல்வது லீலா காண்டம் என்றும் அமைந்துள்ளன.

### *பிள்ளையார் சுழி*

நாதம் தண்ட வடிவம், விந்து வட்டவடிவம் இவ்விரு உறுப்புக்களும் சேர்ந்த வடிவம் ''உ'' பிள்ளையார் சுழி எனப்படும். ''உ'' என்னும் எழுத்து நாத விந்துக்களின் வரிவடிவமாகும். இது விக்னேஸ்வரரு

டைய துதிக்கை போலாகும். துதிக்கை நாதவிந்து வடிவம், ஏனைய எழுத்துக்கள் கசானனருடைய முகத்தில் அடங்கும் இக்காரணம் பற்றியே எக்கருமத்தை தொடங்கும் போதும், தொடங்கிய கருமம் செல்வனே நிறைவு பெற விநாயகரை முதலில் வணங்குவதும் எதை எழுதத்தொடங்கும் போதும் முதலில் பிள்ளையார் சுழி எழுதி எழுதத் தொடங்குவதும் இன்றும் அனுட்டிக்கப்படும் மரபாகும்.

பிள்ளையார் சுழி சிவமும் சக்தியும் சேர்ந்த சிவசதாக்கியமாக சிவலிங்கவடிவத்தையும், ஓங்காரவடிவமாகிய ஆனைமுகத்தையும் நினைவூட்டுவது. வித்தியாரம்பம் செய்யும் போது முதலில் ஓம் கணபதி துணைஎன்பதும், திருமணம் செய்வதில் மிகக்குறைந்த செலவில் செய்வதாக இருந்தாலும், பிள்ளையார்ப் பூசை பண்ணுவதும், வீட்டுக்கு அடிக்கல் நாட்டுதல், கதவுக்கு நிலை நிறுத்தல், கூரைக்கு வளை வைத்தல், வயலில் நாளுக்கு ஏர்பூட்டுதல், முதலிய எக்கருமமாக இருந்தாலும், முதலில் பசுச்சாணமும், அறுகம்புல்லும் அல்லது மஞ்சள் உருண்டை தேடிப் பிள்ளையார் பூசை செய்து வழிபடத் தொடங்குதல் இன்றும் வழக்கத்தில் உள்ளது.

### *பிரணவமும், பிள்ளையார் சுழியும்*

பிரணவம் ஐந்தெழுத்துக்களுடைய கூட்டம். முதல் உரு நட்சத்திர வடிவு, அதாவது வட்டப்புள்ளி, இரண்டாம் வடிவு தண்டம் போல படுக்கையாக் கிடக்கும் நேர்கோடு-மூன்று உருவ வட்டம். நான்காம் உருபிறைமதி, ஐந்தாம் உருவாகிய பிந்து புள்ளிவடிவு, இவற்றுள் வட்டமும் புள்ளியும் நேர்கோடும் சேர்ந்த "உ" பிள்ளையார் சுழி ஆகின்றது. இந்தச்சுழியை இட்டாலே போதும் பிள்ளையார் வணக்கம் வந்துவிடுகிறது.

பிரணவத்தின் ஐந்து கூறுகளுக்குமுரிய அதிதேவதைகள் இன்னார் இன்னார் என்று கூற வந்த சிவஞான போதம், அகரத்திற்கு பிரமனை யும் உகரத்திற்கு திருமாலையும் மகரத்திற்கு உருத்திரனையும் விந்து விற்கு மகேசனையும் நாதத்திற்கு சதாசிவனையும் அதிதெய்வமாகக் கொண்ட அகரத்தின் கூறாகிய '' '' இதனையும் தோன்றிய இலக்கியம் நின்று நிலவுதல் பொருட்டுத் திருமாலை அதி தெய்வமாகக் கொண்ட திருமாலை அதிதெய்வமாக கொண்ட உகரத்தின் கூறாகிய '' ''இத னையும் இணைத்து 'உ' பிள்ளையார் சுழியாக எழுதுகிறோம்.

இவ்வண்ணம் பிள்ளையார் சுழியை இடும் போது பசுபோதம்ம அடங்கியப்போக, பதிபோதம் மேற்பட்டிருக்கும். அப்போது இயற றப்பெரும் தொழில்கம் யாவும் சிவன் செயலே எனபதைக் காட்டும் அடையாளமாகும்.

* * *

## வேழ முகம்

''வேழ முகத்து விநாயகனைத் தொழ
வாழ்வு மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்
துள்ளியோடுத் தொடர்ந்த வினைகளே''

# விநாயகர் தோற்றம்

இந்து சமயத்தின் சிறப்பியல்புகளையும் ஏனைய தத்துவங்களை யும் உணராத ஒரு குழுவினர் தற்போதும் அவர்களுக்குப் பல கடவுள் கள் என்று பரிகாசம் பண்ணும் அவர்கள் விநாயகர் தோற்றத்தையும் பற்றி குழப்ப நிலையில் உள்ளனர்.

விநாயகரைப் பொறுத்தவரையில் அவர் உலகப்படைப்பின் முதல் தோற்றம். ஓங்காரத்தில் விளங்கும் முதல்வன், படைப்புக்கு முந்திய தோற்றமுடையவனும், ஹிந்து நாதச் சேர்க்கையால் விளைந்த முதல் ஓசையில் முனைந்து நிற்பவன்.

அன்பர்கள் பலர் புராணரீதியாக இவற்றிற்கு ஆதாரம் தேடக் கருது கின்றனர். புராணங்கள் எப்பொழுதும் கதைகளின் வாயிலாக மக் களை சிவவழிபாட்டிற்கு செலுத்தும் கருவிகள். இறைவனுடைய பொதுவியல்பு, சிறப்பியல்புகளைப்பற்றி அறிந்து கொள்ளும் ஆற்ற லில்லாத மக்களைத் தெளிவிப்பதற்காக இயற்றப்பட்ட சாதனம். நாம் இவற்றின் வாயிலாக கூறப்படும் தத்துவங்களையே கருத்திற் கொள்ள வேண்டும்.

இவ்வண்ணம் விநாயகப் பெருமானின் தோற்றத்தை விளக்கப் பல புராண வரலாறுகள் உண்டு.

## 1. சிவபுராணம்

உலக மாதாவாகிய உமாதேவி தாமும் ஒரு பிள்ளையைப் பெற் றுக் கொஞ்சிக் குலாவ வேண்டும் என எண்ணினார். உடனே மண்ணி னால் ஒரு உருச்சமைத்தார். அதற்கு உயிர் கொடுத்து தன்மடியில் வைத்து இன்புறுவதை கவனித்த சிவபெருமான் அவ்வண்ணமே திரு நோக்கம் செய்து புதல்வப் பேற்றைக் கொண்டாட சகல தேவர்களை

யும் அழைப்பித்தார். அத்தருணம் சனியனும் வந்திருந்தான். அவன் பார்வை அந்த குழந்தையின் மேல் விழுந்தது. அதனால் அதன் தலை அறுபட்டு போய் விட்டது. அன்னை வருந்தியதை உணர்ந்த சிவபெருமான் பூதகணங்களைப் பார்த்து வடக்கே சென்று முதல் காணும் விலங்கின் தலையை கொண்டு வாருங்கள் என்று கூற அவர்களும் அவ்வாறே ஒரு யானைத்தலையை கொண்டு வந்தார்கள். சிவபெருமான் அதனைப் பொருத்திக் குழந்தையை உயிர்ப்பித்து கொடுத்தார். உமையம்மை உள்ளம் மகிழ்ந்தார். இறைவன் யானை முகப் புதல்வரைக் கணநாதராக்கினார்.

## 2. மத்ஸ்ய புராணம்

ஒருக்கால் உமையம்மை தன் தோழியரான ஜெய விஜெயகளுடன் அந்தப் புரத்திலுள்ள திருமஞ்சன அறைக்கு நீராடச் சென்றார். அப்போது தோழி ஜெய உமாதேவியிடம் நாமும் நந்தியைத்தானே காவலாக வைத்திருக்கிறோம் நமக்கென்று தனியானைப் பெருமாட்டி ஏன் படைத்து வைத்திருக்கக் கூடாது. அதற்குச் செவிமடுத்த உமாதேவியார் தன் திருமேனியில் இருந்த அழுக்கைத் திரட்டி உருவாக்கி உயிர் கொடுத்து நாங்கள் குளிக்கச் செல்கிறோம் உள்ளே ஒருவரையும் விடவேண்டாம் என்று கட்டளை பிறப்பித்துச் சென்றார். அவ்வேளை சிவபெருமான் உமையம்மையாரைக் காண உள்ளே வந்தார். புதுக்காவலன் தடுத்தான். மீண்டும் உள்ளே செல்ல முனைந்தார்.அவர் விடவில்லை. தான் யாரென விளக்கியும் அவன் விடவில்லை. தான் சிவன் பார்வதியின் கணவன் என்று சொல்லியும் விடவில்லை. பின்னர் கடும்போர் மூண்டது. அவனது தலையை பரசினால் வெட்டினார். செய்தியறிந்த பிராட்டி மனவேதனையடைந்தார். காரணமில்லாமல் மகனைக் கொன்ற தேவர்களும் ஒழிந்து போகக் கடவதாக என்று சாபமிட்டார். பின்னர் ஒருவாறு தேவர்கள் மன்னித்தருள வேண்டும் என வேண்ட எனது மகன் உயிர்பெற்றெழுந்து உங்களைப் போன்ற

அந்தஸ்தைப் பெறுவானாகில் மன்னிப்பேன் என்றார். எல்லோரும் ஒப்புக் கொண்டனர். எவ்வாறு செய்யவேண்டும் என வினவ வடதிசைக்கு ஓடுங்கள் உங்கள் பாதையில் முதல்வரும் உயிரினத்தில் தலையைக் கொண்டு பாலகனின் உடலில் பொருத்துங்கள் உயிர்பெற்றெழுவான். அவ்வாறே செய்தனர். தேவியும் மகிழ்ந்தாள், தேவனும் மகிழ்ந்தார். பால்ய பருவத்திலே வீரனாக இருந்த நீ இன்று முதல் கணேசன் என்று அழைக்கப்படுவாய். என்னுடைய அடியார்க்கு நீயே தலைவன், இன்று முதல் நீயம் எனக்குச் சமனானவன் என இறைவன் திருவாய் மலர்ந்தார்.

## 3. சுப்பிரபேதம்

உமாதேவியாரும் சிவபெருமானும் ஒருகால் உய்யான வனத்திற்குச் சென்றனர். அங்கே களிறும் பிடியும் தம்முட் கலந்து நின்றன அவற்றைக் கண்ட இவர்களும் பிடியும் களிறுமாகினர். பிள்ளையார் பிறந்தார்.

இந்த வரலாற்றை திருஞானசம்பந்தப் பெருமான் ''பந்தத்தால்'' என்னும் கழுகு மலப்பதிகத்தில்

**பிடியதனுருவுமை கொளமிகுகரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே**

என்ற வலிவலப் திருப்பாடலில் தெளிவு படுத்தியுள்ளார்.

## 4. காஞ்சிப் புராணம்

திருக்கைலாயத்தில் சிவபெருமானும் உமாதேவியாரும் ''மந்திர சாலா'' என்னும் பூஞ்சோலைச் சித்திர மண்டபத்திற்குச் சென்றனர். அங்கே ஒரு பிரணவம் எழுதப்பட்டிருந்தது. இருவரும் அதனையே

ஊர்ந்து நோக்கினர். சமஸ்டிப் பிரணவமாகிய அதுபிரிந்து இறைவன் எழுத்தாகிய அகரம் களிறாகவும், அம்மை எழுத்தாகிய உகரம் பிடி யாகவும் ஆயிற்று. அவை இரண்டும் கூடி விநாயகர் தோன்றினார்.

## 5. கந்தப்புராணம்

திருக்கைலாயத்தில் உள்ள சித்திரமண்டபத்தில் ஒரு பிரணவம் எழுதப்பெற்றிருந்தது. அதனை உமாதேவியார் கூர்ந்து நோக்கினார். பிரணவம் பிடியும் களிறுமாகிப் புணர்ந்தன, விநாயகர் தோன்றினார்.

**'அக்கணத் தாயிடை ஐங்கரத் தவன் அருள்**
**முக்கணால் வாயினான் மும்மதத் தாறுபாய்**
**மைக்கருங் களிறெனும் மாமுகத்தவன் மதிக்**
**செக்கர்வார் சடைய னோர் சிறுவன் வந்தருளினான்'**

## 6. விநாயக புரணம்

1. பரமசிவன் உலகை புனருற்பத்தி செய்யத் திருவுளம் கொண்டு விநாயகராக உருவு கொண்டனர். முக்கணங்களையும் பிரம, விஷ்ணு, ருத்திரர்களாகப் படைத்தனர். அவர்கள் மூவரும் தத் தம் தொழில்கள் கைவர வேண்டும் என்று விநாயகரை நோக்கி தவம் செய்தனர். முன்போலவே விநாயகர் அவர்களுக்கு காட்சி கொடுத்தார்.

2. உமாதேவியார் சிவபெருமானிடம் விநாயக மந்திரமாகிய ஏகாட் ஷர மந்திரத்தை உபதேசங் கேட்டார். கணபதியை உபா சித்து வந்தார். விநாயகர் என்னும் திருநாமத்துடன் உமாதே விக்கு மகனாகத் தோன்றினார் அங்கனம் அவர் அவதரித்த நாள் ஆவணி மாசத்து பூர்வபட்ச சதுர்த்தியும் விசாக நட்சத்திரமும் கூடிய சோம வாரத்தில் சிங்க லக்கணமாகும்.,

இவ்வண்ணம் விநாயகர் பிறப்பைப் பற்றிய வரலாறு பலவுள்ளது. இந்த வரலாறுகள் மூலம் சிவனும் விநாயகரும் ஒருவர் என்பது புலனாகின்றது. பிறப்பு வரலாற்றில் இருந்து தெளிவாகின்றது. பிறந்தார் எனப்படுவதாலும் இறைவன் பிறப்பில்லாதவன் என்பத விநாயகா உபசார வழக்கு. திருமேனி கொண்டு எளுந்தருளியதை யாரும் அறியார். இதனையே உமாபதிசிவம் 'ஒளி!யான திருமான ' என்று அருளியற்று.

மேலும் சிறப்பாக தேவ உடலையும் விலங்கு தலையையும் ஒன்றவைத்து சகல வல்லமைக்கும், அளவில்லாத ஆற்றலுக்கும் தாமே தலைவன் எனத் திருநாமங் கொண்டார் விநாயகர்.

***

**கணபதி அஞ்சலி**

ஐயனே போற்றி போற்றி! யமலனே போற்றி போற்றி!
துய்யனே போற்றி போற்றி! சோதியே போற்றி போற்றி!
மெய்யனே எனை ஆட்கொண்ட செழுமலரே போற்றி!
பூங்கையனே கயிலை வாழும் கணேசனே போற்றி!

# விநாயகர் திருவுருவ விளக்கம்

## 1. பெருவயிறு

எல்லாப் பொருள்களும் தன்னகத்து ஒடுங்கவும் உண்டாக வும் இடம் தந்திருப்பது போலப் பெருவயிறாகிய எல்லா உலகங்க ளும், உயிர்களும் தம்முள் அடங்கியிருக்கின்றன என்பதை குறிப்பிடு வது. விநாயகர் விஸ்வரூபராகையால் அவரிடம் எல்லாம் அடங்கும் இயல்பேயாம். - பேழை வயிறு.

## 2. ஐங்கரம்

விநாயகருக்கு ஐந்து கரங்கள், ஐந்து கிருத்தியங்களுக்கும் தாமே கர்த்தர் என்பதைக் குறிப்பதாகும். ஒரு கரத்தில் பாசம் ஏந்நியி ருக்கிறார். பாசத்தை தரித்த கரம் அவரது படைத்தற் தொழிலைக் குறிப்பதாகும். ஒரு கரத்தில் அங்குசம் ஏந்தியிருக்கிறார். அங்குசம் அழித்தற் தொழிலை அறிவிப்பது. அடுத்தது அபயகரம் பிறவிக்கட லில் அல்லலுறும் உயிர்களுக்கு ஆறுதல் அளிக்கும் கரம். இதுவே 'திதி' வன்மையை அறிவிப்பது. அடுத்தது அருளலைச் செய்கின்ற கரம். இக்கரத்தில் வரதமும் மோதகமும் ஏந்தியிருக்கும். ஞானத்தின் அறிகுறியாகவும் இது நோக்கப்படுகிறது. அடுத்தது முத்திறங்களையு டைய துதிக்கையாகும். இது திரோதானமாகிய மறைப்புத் தொழிலை உணர்த்தும் கரமாகும்.

## 3. தாழ் செவி

இரண்டு பெரிய செவிகள் உண்டு. இரண்டும் உயிகளுக்கு மலவாதனை தாக்காமல் காத்து, வினை வெப்பத்தை போக்கியருள் வன. எப்பொழுதும் எல்லோரது கோரிக்கையையும் கேட்பதற்கு விருப்பமாயிருப்பவர் என்பது கருத்தாகும்.

## 4. கொம்புகள்

இரு கொம்புகள். ஒன்று ஒடிந்த கொம்பு. இது ஒருவருக்கு எவ்வளவு அழகாகவும் அருமையாக இருந்தாலும் நியாயம், தர்மம், வித்தை முதலிய நற்பணிகளுக்கான தியாகம் செய்யலாம் என்னும் கருத்தை வலியுறுத்துகின்றது. இது பாசஞானமாகவும் கருதப்படுகி றது. ஆயுதம் ஆகவும் பயன்பட்டது. ஆயுதம் பயன்பட்டது. அதனா லேயே இது பாரதம் எழுத எழுத்தாணியாக இருந்தது. பின் ஒருக்கால் இக்கொம்பே மாயை உருவினனாகிய கஜமுகன்மேல் ஏவப்பட்டது. மற்றக் கொம்பு இறைவனை நினைவுகூருவதற்கு ஏதுவாக அமைந் துள்ளது இது பரஞானத்தை உணர்த்துவதாகும்.

## 5. முக்கண்

'இறைவதற்கு கண்மூன்றும் முச்சுடர்' என்பது இறைவனு டைய இயல்பை காட்டும் இலக்கண நூல்கள். ஆகவே சிவபெருமா னைப் போல் முத்தொழிலையும் செய்யும் சூரியன், சந்திரன், அக்கினி இயல்பை உடையவர் என்பதாகும்.

## 6. மும்மதம்

கலைஞானம், மெய்ஞானம், சிவஞானம் ஆகிய மூன்றும் மதங்கள் 'ஞானமதம்' என்று உமாபதி சிவத்திலும் குறிக்கப்பட்டுள் ளது. இவை சத்து, சித்து, ஆனந்தம் சச்சிதானந்தமுடையை உணர்த்து வன.

## 7. யானை முகம்

விநாயகப் பெருமான் யானை முகங்கொண்டவர். இதற்கான காரணம் பலவுண்டு. வடிவம் விலங்கு, யானை விலங்குகளில் மிகப்

பெரியது, ஆற்றல் மிக்கது, அஞ்சாது, அழித்து வெற்றி காணும் தன்மையுடையது. உடலமைப்பு எவ்வாறிருப்பினும் உயர்ந்த பண்பு குணம் இருக்குமாயிருந்தால் உயர்ந்த பிறப்புடையதாக மதிக்கப்படும். மக்களிடம் இருக்க வேண்டியது பகுத்தறிவாகிய உயர்ந்த பண்பே. இப்பண்பு மக்களிடம் இல்லையாயின் விலங்காவர். விலங்குகளிடம் இப்பண்பு உளதாயின் மக்களாவர். இத்தத்துவத்தையே யானைமுகம் விளக்குகிறது.

குழந்தைகளுக்கு யானையைப் பார்ப்பதற்கு மிகுந்த ஆசை. யானையின் உருவத்தைப் பார்த்தால் எளிதில் மனதை விட்டகலாது. பிள்ளையாரைக் குழந்தைச்சாமி என்பர். பார்க்கப் பார்க்க அலுக்காத தெவிட்டாத மூர்த்தி மிக உயர்ந்த ஆனந்தத் தத்துவம் ஆராத ஆசை இன்பத் தத்துவம்.

## 8. திருவடி

ஞானம் பொருந்தப் பெற உயிர்கள் நல்விளக்கம் பெறுகின்றன. அந்த ஞானமே விநாயகப் பெருமானுடைய திருவடிகள். இத்திருவடிகள் வினையும்,இன்னலும் வலிகுன்றிப்போக வருவினையும் செய்வினையும் சீர்செய்து இன்பம் பெறச் செய்கின்றன.

## 9. பிறை முடி

தவவிரதங்களால் அறியாமை அகன்று உண்மை ஞானம் பெற்ற உயிர்களே சிரத்தான எய்துதற்குரியவர் என்பதையும், உண்மை அடியவர்கள் உயர்நிலைக்கு உயர்த்தி வைப்பவர் தாமே என்பதையும் குறிப்பதாகும்.

## 10. அங்குசம்; பாசம்

இவை யானைப்பாகன் கையில் இருக்கவேண்டியவை. விநா யகர் கையில் அவை இருப்பதால் அவரை அடக்கி ஆளும் பாகன்த லைவன் வேறு யாரும் இலர் என்பதும், மும்மத யானைகளைப் போல், ஆணவம், கன்மம் ,மாயை ஆகிய மும்மலங்களால் கட்டுண்ட மக்களாகிய நம்போலியரை அடக்கி ஆண்டு நல்வழி நடத்தும் பாகன் தானே என்பதும் கருத்தாம்.

பாகன் யானையை அங்குசத்தைக் கொண்டு குத்தி அடக்கி வேண்டிய வாறு நடத்துகிருன். வேலையில்லாத போது பாசத்தால்-கயிற்ருல் கட்டி வைக்கின்ருன். விநாயகரும், சீவர்களை நடத்துகின்ருர். அதை அங்குசம் காட்டும். தீயவரைத் துன்பத்தில் பாசம் கொண்டு கட்டுகி ருர். இப்படி இருவித செயல்களாலும் விக்னேசுவரன் ஆகின்ருன்.

## 11. மோதகம்

பிண்டமாகிய சரீரங்களுக் கெல்லாம் காரணமாய் இருப்பவன் தானே என்பதும், எண்ணிறந்த அண்டங்களெல்லாம் மோதகம் போல் உருண்டையாய் உள்ளன. அவைகளுக் கெல்லாம் ஆதாரமாய் உள்ளவன் தானே என்பதும், மேலும் சத்துள்ள நல்ல உணவுகளை உண்டு அறிவைப் பெருக்கி, ஆனந்த முற வேண்டும் என்பதும் பொருளாகும்.

## 12. அமுத கலசம்

குடம் செபமாலை என்னும் மூன்று விதமாய்க் கூறுவர்.அமுத கலசம் அழிவற்ற தன்மையைத் தருவது. குடமாயின் துதிக்கையில் கொண்டு நீர் திரட்டி அம்மை அப்பரை அபிஷேகம் செய்வதைக் கருதுவது. செபமாலையாயின் கல்வி அறிவைப் பெறுவது மாத்திர மல்ல, மந்திர செபங்களும் கேட்ட கற்றவைகளைச் சிந்தனா சக்தி யைக் கொண்டு வளர்த்தலும் வேண்டும் என்பதைக் காட்டுவது.

# விநாயகரை எளிய முறையில் வழிபடலாம்

உலகில் விநாயகரின் அனுக்கிரகத்தால் எல்லாக் காரியங்களும் விக்கினங்கள் இல்லாமல் நடைபெறுகின்றன. எந்த சுவாமியை உபாசிப்பவராயினும், முதலில் விநாயகருடைய அனுக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டால் தான் அந்தக் காரியம் விக்கினம் இல்லாமல் நடைபெறும்.

மக்களின் எளிமையான வழிபாடுகளுக்கேற்றவாறு விநாயகர், ஆற்றங்கரையிலும், அரச மரத்தடியிலும், நாற் சந்தியிலும், முற்சந்தியிலும், வீற்றிருந்து வினைகள் தீர்த்தருளுகின்றார்.

எதுவும் இல்லாமல் புனித சிந்தனையுடன், விநாயகரை வழிபடக் கூடிய எளிய இனிய முறைகளில் ஒன்று தோப்பிக்கரணம் போடுதல். முன்னொரு போது கஜமுகாசூரன் தேவர்களையெல்லாம் தான் பெற்ற வரத்தின் மகிமையால் சிறைப் பிடித்து அவர்களையெல்லாம் பலவித இன்னல்களுக்கு உட்படுத்திய வேளையில், அவன் முன் தேவர்கள் போகும் போதும் வரும் போதும் இரு கைகளாலும் நெற்றியில் மும்முறை குட்டி, காதுகளை மாறிப்பிடித்துக் கொண்டு மும்முறை குந்தி எழுந்து வணக்கம் செய்தல் வேண்டும். இந்தச் செயலை விநாயகர் அவனைச் சங்கரித்த பின் கஜமுகாசூரனுக்குச் செய்ததை மகிழ்ச்சியினால் விநாயகருக்குச் செய்து வரலாயினர். இது விநாயகருக்கு பிரியமானதொரு முறையாகும்.

தோப்பிக்கரணம் போடுதல் சம்பந்தமாக இன்னுமொரு வரலாறு உண்டு. ஒரு சமயம் மகாவிஷ்ணுவினுடைய சக்கரத்தைப் பிடுங்கிக் கொண்டு அவரது மருமகனான பிள்ளையார் தம் வாயில் போட்டுக் கொண்டு விட்டாராம். பிள்ளையாரிடமிருந்து அதை மீளப் பெறுவது மிகக் கடினம். அதட்டி, மிரட்டி வாங்கவும் முடியாது. அவர் மிகவும் பலம் வாய்ந்தவர். மாறாக அவரைச் சிரிக்க வைத்து சந்தோஷத்தில்

ஆழ்த்தினால் அதைப் பெறலாம் என்று விஷ்ணுவிற்கு தோன்றியது. உடனே தனது நான்கு கைகளாலும் காதுகளைப் பிடித்துக் கொண்டு விநாயகருக்கு முன்னே நின்று குந்திக்கொண்டு எழும்பி ஆடினாராம். விநாயகருக்கு நன்றாகச் சிரிப்பு வந்து, வாயைத் திறந்து விழுந்து விழுந்து சிரித்தார். சக்கரம் கிழே விழுந்தது. அதேசமயம் விஷ்ணு சக்கரத்தை எடுத்துக் கொண்டு விட்டார்.

''தோப்பி கர்ணம்'' என்பது தோட்டிக்கரணம் என மாறியது. 'தோப்பி' என்றால் கைகளினால் என்பது அர்த்தம் 'கர்ணம்' என்றால் காது, 'தோப்பி கர்ணம்' என்றால் கைகளினால் காதைப் பிடித்துக் கொள்வது என்பதாகும்.

அடுத்து எளிய முறை தேங்காய் உடைப்பது. எங்கு தேங்காய் தெய்வச் சித்தமாக உடைக்கப்படுகின்றதோ அங்கெல்லாம் அது விநா யகர் வழிபாடாகவே அமைகின்றது.

இந்து சமய உலகில் தேங்காய் உடைப்பது ஒரு பெரிய மரபை வலியுறுத்தி வருகிறது. அலங்கார உற்சவங்கள் நடைபெறுகின்ற எல்லா ஆலயங்களும், திருவிழாக் காலங்களில் சுவாமி வீதியுலா விற்கு சபா மண்டபத்தில் இருந்து வெளியே வருமுன் படிக்கட்டில் தேங்காய் உடைத்து வழிபடும் முறையினைக் காண்கிறோம். இது ஒரு அர்ப்பணக் கிரியையாகும்.

சிவபெருமானுடைய திருச்சிரம் மூன்று திரு நேத்திரங்களையு டையது. முக்கண்ணன் - விநாயகருக்கும் இவ்வாறே - அவரும் முக் கண்ணன்.

ஒரு போது தன் தந்தையேயான ஈசுவரனைப் பார்த்து ''உன் சிரசையே எனக்கு பலி கொடு'' என்று கேட்டு விட்டாராம். எல்லாவற் றையும் விட உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் பண்ணினால் தான் விநாயகருக்கு பிரீதி ஏற்படும். அவ்வளவு பெரிய தியாகம் பண்ணுவ தற்கு தயார் என்ற அறிகுறியாகத்தான், ஈசுவரனைப் போலவே மூன்று

கண்கள் உடைய தேங்காயை சிருஷ்டித்து அந்தக்காயை அவருக்கு நாம் அர்ப்பணம் பண்ணும் படியாக ஈசுவரன் அநுக்கிரகத்தையும் விநாயகர் அதை, தமக்கு மிகப் பிரியமான முறையாக ஏற்றுக் கொண் டதையுமே இந்த மரபு முறை வழிபாடு காட்டுகிறது.

விநாயகரின் விருப்பு நிறம் சிவப்பு. சில கோயில்களில் சிவப்பு பொடி பூசிய விநாயகரைக் காணலாம். சிவப்பு புஸ்பம், சிவப்பு வஸ்திரம் விநாயகருக்கு மிகவும் பிரியமானவை.

விநாயகருக்குரிய நைவேத்திய வகைகளை அருணகிரிநாதன்.

**''இக்க வரை நற்கனிகள் சர்க்கரை**
**பருப்புடன் நெய்,எள் பொரியல்**
**துவரை இளநீர் வண், டெச்சில்**
**பயறப்பவை, மிக்க அடிசிற்கடலை**
**முப்பளம் அப்பமும் நிகழ்பால்தேன்**

என விளக்குகிறார்.

## தேங்காய்

முழுமட்டை, உள்ளே சிக்கலான நார் அதனுள் கடினமான ஓடு அதற்குள் வெண்மையான தேங்காய் மடை ஓடு. சாக்கடை நீரில் அல்லது சுத்த ஜலத்தில் விழுவதால் உள்ளிருக்கும் நிர்மலமான தேங் காய்க்கு எந்தவித மாறுதலும் ஏற்படுவவதில்லை. அதுபோல் ஆத்மா என்றும் எந்த சரீரத்தில் இருந்தாலும் பரிசுத்தமே. தேங்காயின் மேல் மட்டை, நார், ஓடு நீக்கி இறைவனுக்கு அர்பணிப்பது போல் பற்று, பந்தம், பாசம் என்ற களைகளை நீக்கின்ல் பரிபூரணமான நித்ய சுத்த வஸ்து பிரகாசிக்கும் என்பதே தேங்காய் உடைப்பதின் தத்துவம்.

## ஸ்படிகம்

இது மாதிரியே ஸ்படிகம் என்ற நிறமற்ற கல்லில் சிவலிங்கம் அமைப்பது வழக்கம். தனக் கென்று ஒரு நிறம் இல்லாத ஸ்படிகம்

எந்தவர்ணப் புஸ்பங்கள் உள்ளனவோ அதனால் அந்த நிறமாகக் காணப்படுகிறதே ஒழிய உண்மையில் ஸ்படிகத்திற்கு நிறம் இல்லை. அதுபோலப் பரிசுத்தமான ஆத்மா பஞ்ச கோசங்களின் சேர்க்கையால் தோன்றுகிறதே ஒழிய ஆத்மா தேகமில்லை என்று தெரிவிக்கின்றது.

## கற்பூரம்

ஸ்தூலமாக இருந்த கற்பூரம் எரிந்தபின் ஜோதிஸ்வ ரூபமாக ஆகிவிடுகிறது. எஞ்சி நிற்பது எதுவுமில்லை அப்படியே இந்த ஸ்தூல சூக்கும காரண சரீரம் தாண்டி அதீதமான பரத்தில் லயம் அடைய வேண்டும் என்றும், உருவாக எரியும் போது தோன்றினும், இவ்வடிவம் என்று எரியும் நெருப்பிற்கு கூறமுடியாதோ அப்படியே இவ்வாத்மா உருவாகத் தோன்றினும் உண்மையில் அருவமாகும் என்று உணர்த்துகிறது கற்பூர வழிபாடு.

***



# விநாயக வழிபாட்டின் தொன்மை

இன்றைய உலகின் அறிவு பற்றிப் பலராலும் பேசப்படுவதொன்றாகும். அறிவு என்னும் போது அது என்றும் உள்ளது என்பதில் சந்தேகமே எழுவதில்லை. அது போலவே அந்த அறிவே உருவாகிய கடவுளும் என்றும் உள்ளவர் என்பதில் ஐய்மிருக்க வேண்டியதில்லை. இருந்தும் உருமேனி தாங்கிய நிலையில் இறைவன் ஒரு காலத்தை ஒட்டியே வந்திருக்க வேண்டும். அதை அறிந்து கொள்ளும் வண்ணம் இன்றைய ஆராய்ச்சியாளர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். இறைவன் கொள்ளும் திருமேனி அவர் திருவுள்ளக் குறிப்பால் அவர் விரும்பிய வண்ணம் எய்தப்பெறுவதாகும். ஆகவே எந்தக் காலத்தில் நினைவு கொண்டார், எவ்வடிவம் கொண்டார், என்பது சொல்ல முடியாது. ஆனாலும் சாஸ்திர தோத்திரங்களில், இதிகாச புராணங்களில், இலக்கியங்களில் கடவுளர் கொண்ட திருவுருவப் பெயர்கள் எவ்வாறு கூறப் பெற்றுள்ளன என்பவற்றைக் கொண்டு அதன் தொன்மை நிலையை அறிய முடிகின்றது.

இருக்கு வேதத்தில் கணபதி என்னும் சொல்லாட்சி பாவிக்கப்பட்டுள்ளது. ''கணபதி என்னும் பொழுது கணங்களுக்கெல்லாம் அதிபதி'' வேத காலத்தில் கணங்களுக்கெல்லாம் தலைவனாக இந்திரன் இருந்தமை குறிப்பிடப்படுகின்றது. ஆனாலும் இந்திரன் கணபதி என்ற பெயரால் அழைக்கப்படவில்லை. ஆகவே 'கணபதி' என்பது விநாயகரையே குறிப்பிட்டிருக்க வேண்டுமென்பது தெளிவாகும்.

உலகத் தோற்று வானயபிட்டு நினைவு கூறும் போது முதன் முதலில் தோன்றிய ஒலி'ஓம்' என்னும் ஒலியாகும். 'ஓம் என்னும் பொருளிலே உற்றோய் போற்றி' என்பது விநாயகறை குறிப்பதாகும். ஆகவே மனிதன் உலகில் எப்போது தோன்றினானோ அப்பொழுதே விநாயக வழிபாடும் தோன்றியிருக்கலாம் என நினைப்பதற்கு இடமுண்டு.

யசூர் வேதத்திலும் விநாயகர் பற்றித் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் சால, கடங்கர், கூஷ்மாண்டராஜ புத்திரர் உஸ்மிதல் தேவயயனர் ஆகிய நான்கு வகையான விநாயகர்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதாக அறியக்கிடக்கின்றது.

சமய ஆராய்ச்சியில் ஈடுபட்ட செல்வி கற்றி என்பவர் கி.பி. 6ம் நூற்றாண்டு வரை கல்வியறிவு குறைந்தவர்களாக கருதப்படுகின்ற ருத்திரர்கள் கூட கணபதியை தெய்வமாக கொண்டுள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

வியாசர் மகாபாரதம் இயற்றிய காலத்தில் விநாயகர் எழுதினார் என்பது வரலாறு. விநாயகர் எழுதிய மகாபாரதம் எண்ணாயிரத்து எண்ணூறு சுலோகங்களைக் கொண்டுள்ளது. வியாசர் சொல்ல விநாயகர் எழுதினார். ஆகவே பாரத காலத்தில் விநாயகர் வழிபாடு இருந்தமை தெட்டத் தெளிவாகின்றது. இந்த வியாசரின் வழிபடு தெய்வம் விநாயகர் முரஞ்சியூர் முடிநாகராயர் செய்த புறப்பாட்டு, பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதன் பாரதப் போரில் இருதிறத்தாருக்கும் பெருஞ் சோறிட்டான் என்று தெரிவிக்கிறது. இச் சேரலாதன் காலம் கி.மு. 5ம் நூற்றாண்டு, ஆதலால் விநாயகர் அக்கால மக்களாலேயே அறியப்பெற்ற தெய்வம் என்பது தெளிவு.

கல்லாடத்தில் கணபதி வழிபாட்டுச் செய்யுள் காணப்படுகிறது. ஆகவே 5ம் நூற்றாண்டிற்கு முதலும் கணபதி வழிபாடு இருந்தமை புலனாகிறது.

மணிமேகலையில் "கரகங் கவிழ்த்த காவிரிப்பாவை என்று குறிப்பிடப்படுகின்றது. இதிலடங்கியுள்ள வரலாறு விநாயகர் காக வடிவங்கொண்டு கமண்டலத்தை கவிழ்த்ததைக் கூறுகின்றது. இதனாலும் விநாயகர் சங்க இலக்கியத்திலும் இடம் பெறுகின்றார்.

சம்பந்தர் காலத்தில் கணபதி பற்றி பேசப்பட்டுள்ளது. சீர்காழிப்பதிகமாகிய "பொங்கு பெண்" பிரமபுரப் பதிகமாகிய "காடதணி"

கழுமலப்பதிகமாகிய பந்தத்தால் இராமன் தீச்சரப்பதிகமாகிய "கங் கொளிர்" வலிவலப் பதிகமாகிய "பிடியதனுரு" போன்ற தேவாரங்க ளில் விநாயகரைப்பற்றி விசாலமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகவே விநாயக வழிபாடானது, கல்வெட்டுக்களை இலக்கியங் களை கருவிகளாகக் கொண்டு அளக்க முடியாத அளவிற்கு தொன்மை வாய்ந்தது. பிரணவம் அநாதியானது. அதனை அறிவிக் கும் திருவுருவம் மிகமிகத் தொன்மையானவை என்பது கண்கூடு.

* * *

## திருமந்திரம்

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்தின் இளமபிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

# விநாயக நாமங்களும் விளக்கங்களும்

## 1. விக்கினேஸ்வரன்

விநாயகப் பெருமான் தனக்கு மேல் ஒரு தலைவர் இல்லாத தனிமுதற் கடவுள். இப்பெருமான் தன்னை அன்புடன் வணங்கி வழிபடுவோரின் விக்கினங்களையெல்லாம் போக்கியருளுபவர். ஆகையால் இவர் **விக்கினேஸ்வரர்** என்னும் திருப்பெயர் பூண்டார்.

விநாயகப் பெருமான் தன்னை வழிபடுவோரின் விக்கினங்களையெல்லாம் போக்கியருளுவதால், எந்த ஒரு செயலைத் தொடங்குவோரும், செயலைத் தொடங்குமுன், தமது காரியம் எவ்வித குற்றமும் இன்றி நிறைவேறுதல் வேண்டும் என்று வணங்கி வேண்டுவது வழக்கம். இவ்வாறு வழிபடுவோரின் காரியமும் விநாயகர் திருவருளால் குற்றமின்றி நிறைவேறிப் பயனுண்டாதல் உண்மை. எனவே புனித கோயில்களை வழிபடச் செல்வோர், முதலில் விநாயகர் திருச்சந்தியில் வணங்க வேண்டியது அவசியமாகும். அவரே வருகின்ற விக்கினங்களைத் தடுக்கின்ற விக்கின ஈஸ்வரனாக இருக்கின்றார்.

தன் தந்தையாகிய சிவபெருமான் முப்புரம் எரிக்க நினைத்தபோது, அவருக்கே இடையூறு விளைவித்தவர் விநாயகர்.

''முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா''.

ஆகவே எமக்கு வரும் விக்கினங்களை போக்குபவர் நம் விநாயகரான விக்கினேசுவரரே.

## 2. வலம்புரி விநாயகர்

விநாயகப் பெருமானின் வியன்கரமாகிய துதிக்கை வலமாகச் சுழித்திருந்தால் அவர் **வலம்புரி விநாயகர்** என்னும் திருப்பெயர் கொண்டு அழைக்கப்படுவார்.

### பிரணவசொரூபி

விநாயகர் பிரணவசொரூபியாக இருத்தலை அவரது துதிக்கை உணர்த்தும் பிரணவம், நாதம், விந்து, அகரம், உகரம், மகரம் ஆகிய ஐந்து உறுப்புக்களையும் தன்னகத்து அடக்கியுள்ளது.

வேதங்கள் எல்லாம் ஓம் என்றே ஆரம்பிக்கப்படுகின்றன. ஓம் என்ற பிரணவப் பொருளுக்கு அர்த்தம் தெரியாத பிரமனுக்கு முருகப் பெருமான் அவன் தலையிலே குட்டி, சிறை வைத்து பிரணவப் பொருளை உணர்த்தினார். சிவபெருமானும் அப்பிரணவப்பொருளை முருகனிடமிருந்து உபதேசமாகப் பெற்றுக் கொண்டார். முனிவர்களும், தலைவரான அகத்தியரும் முருகப்பெருமானிடம் உபதேசம் பெற்றனர். மானிடர்களில் சிறந்த அருணகிரிநாதரும் முருகப்பெருமானிடமே உபதேசம் பெற்றார். இத்தகைய சிறப்புப் பொருந்திய பிரணவப் பொருளின் சொரூபமாக விளங்கின்றவரே விநாயகப் பெருமான். அவரே ஓங்கார நாயகன்.

## 3. ஐங்கரன்

**"அஞ்சு கரமும் அங்குச பாசமும்"**
என்பது ஔவையார் திருவாக்கு.

பொதுவாக விநாயகர் தும்பிக்கையுடன் சேர்த்து ஐந்துகைகளுடன் காணப்படுகிறார். கைதளில் மோதகம், பாசம், அங்குசம் ஆகியவை உள்ளன.

## 6. ஏரம்பர்

சலித்தவர்களையெல்லாம் இடையூறுகள் நீக்கி பாதுகாப்பவர்.

## 7. லம்போதரர்

எல்லா உலகங்களையும் தாமே தாங்கிக் கொண்டிருப்பதைக் குறிப்பது.

## 8. கஜானனர்

சூர்ப்பகர்ணர் என்பன அன்பர்களின் இடையூறுகளை நீக்கி, கருணைக்காற்றை அளித்து மேனோக்கும் உண்மை ஞானத்தை உதவுபவர்.

## 9. ஏகதந்தன்

ஒரு கொம்பை ஒடித்த தியாகம் செய்து எஞ்சிய ஒரு கொம்பை உடையவர்.

## 10. பிள்ளையார்

என்றென்றும் செல்வப் பிள்ளையாக இருப்பவர்.

## 11. வேழமுகத்தோன்

பார்க்கப் பார்க்கப் பரவசமூட்டும் யானையின் திருமுகத்தை உடையவர்.

ஒரு கையில் உள்ள பாசம் ''புலன் ஐந்தும் மயங்கிஅகங்குழைய பெருவேலோர் நமன் தமரின்'' பாசத்தைக் குறிப்பிடுவதாகக் கொள்ளலாம். எவ்வாறு நமன் தமர் எம பாசத்துடன் அணுகுமுன் தன் திருவடி நிழலை அடைந்தால் உய்யலாம் என்று சொல்வதுபோல் கையில் பாசம் உள்ளது. அல்லது பாசத்தைக் குடும்பப்பாசம் உலகப்பற்று என்று கொண்டார், வாழ்க்கையில் உள்ள பாசம் ஒருநாளைக்கு எம பாசமாக மாறும். எனவே மறுமை இன்பத்தை அடைவதினை ஒழித்து விட்டு பற்றானைப் பற்றவேண்டும் என்று பொருள் கொள்ளலாம்.

அடுத்தகையில் உள்ள அங்குசத்தை அறிவாகக் கொள்ளவேண்டும். மனிதமனம் பல்வேறு ஆசைகளில் சிக்குண்டு தட்டுத்தடுமாறி அல்லல் அடைகிறது. அதை ஒரு நிலையில் நிறுத்தினாலன்றி இறையருளை அடைய இயலாது. அல்லலுற்று அவதியுறும் மனமாகிய யானையை அறிவு என்னும் அங்குசத்தைக் கொண்டு அடக்கித் தன் திருவடியிலே ஒன்ற வேண்டும் என்ற தரத்தின் அங்குசத்தைத் தன்கையில் கொண்டுள்ளார் எனவும் பொருள் கொள்ளலாம்.

## 4. கணபதி

கணங்களுக்கெல்லாம் அதிபதியாக கருதப்படுவது.'க' - போதல் அதாவது ஞான நெறியில் எழுதல். 'ந' - மோட்சம். பதி - பரம்பொருள். ஞானநெறியில் நின்று எய்தப்பெறும் பரம்பொருள் என்பது பொருள்.

## 5. கணேசர்

கணங்களுக்கெல்லாம் ஈசராக விளங்குபவர்.

*12. முதல்வன்*

எல்லோருக்கும் முதல்வனாக இருப்பவர்.

**ஓங்கார வடிவினன்**

விநாயகன் என்னும்போது தனக்குமேல் நாயகன் அற்றது என்பது பொருள். வெட்ட வெளியில் இருந்து ஓங்கார நாதத்திலிருந்து உலகம் உண்டானதாகக் கூறப்படுகிறது. யானை வடிவு ஓங்காரத்தினை நினைவூட்டுவதால் விநாயகரின் யானை வடிவு விநாயகர் ஓங்கார வடிவினன் என்பதனைப் புலப்படுத்துகிறது. இதுபற்றி விநாயகரின் அட்டோத்திர சதநாமங்களில் ''ஓம் ஓங்காரயாய நம'' என்று கூறப்படுகின்றது. நான்கு கைகள், வானவர் இயல்பையும், தும்பிக்கை விலங்கு இயல்பையும், ஏனைய வடிவு மனித இயல்பையும் குறிக்கின்றன.

## பலவடிவங்களில் விநாயகர்

விநாயகர் பல வடிவங்களில் வணங்கப்படுகிறார். குழந்தை வடிவினன், பாலகணபதி. இளைஞனாக உள்ளவன் தருண கணபதி. பிங்கள கணபதிக்கு (6) ஆறுகைகளும், புவனேச கணபதிக்கு 8 கைகளும், மகா கணபதிக்கு 10 கைகளும் ,வீர விக்கினேசுவரருக்கு 16 கைகளும் இருக்கும். தேவியை ஒரு கையால் அணைத்துக் கொண்டிருந்தால் சக்தி கணபதி என்றும், நின்ற நிலையில் இருந்தால் பிரசன்ன கணபதி என்றும், நடன நிலையில் இருந்தால் நிருத்திய கணபதி என்றும் வழங்கப்பெறும். சிங்கத்தின் மீது 5 யானைத் தலைகளுடன் இருந்தால் ஹேரம்ப கணபதி எனவும் வழங்கப்படும்.

* * *

# முதல்வன் விநாயகன்

''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்பது இந்துமதக் கொள்கை. பார்க்கும் இடமெங்கும் நீக்கமற நிறைந்திருப்பவர் இறைவனாகிய சிவபெருமான். சர்வேஸ்வரரான சிவபிரானுக்கும், சர்வசித்தி விநாய கருக்கும் வித்தியாசங்கள் இல்லை. சிவபெருமானை முக்கண்ணன் என்று கூறுவர். அதே நாமம் விநாயகப் பெருமானுக்கும் உண்டு. பிறை சூடிய பெருமான் என்று சிவபிரானை அழைப்பர். பாலச்சந்திர விநாயகர் என்று விநாயகரை அழைப்பதும் உண்டு.

இந்துசமய வரலாறுகளை ஆராயுமிடத்து மூர்த்திகளின் தோற்றம் மற்றும் வழிபாட்டு முறைகளில் விநாயகர் வழிபாடானது அதியுன்னத உச்சிநிலையில் உள்ளது. எல்லாப் புராணங்கள் வரலாறுகளிலும் விநாயகருக்கு சிறப்பான இடம் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லா மூர்த் திகளும் ஏதோ ஒரு வகையில் சாபத்திற்குள்ளாக்கப்பட்டு வேதனை அடைந்திருக்கிறார்கள். ஆனால் விநாயகப் பெருமானுக்கோ அப்படி ஒரு இடர்பாடும் ஏற்படவில்லை. ஒருகணம் மக்களையும் தேவர்க ளையும் காப்பாற்றுவதற்கு அனாலாசூரனாகிய அந்த அனலை தம் கையோடு சேர்த்துக் கொண்ட போதும், தமக்கு விருப்பமான அறுகம் புல்லால் இறைவனாக்கி கொண்டார். இதற்கு மாறாக நாம் வழிபடு கின்ற எல்லா மூர்த்திகளுமே சாபத்தால் மற்றும் இடர்பாடுகளால் கவலை அடைந்தபோது அத்தகைய கவலைகளிலிருந்து மீட்சி பெறு வதற்கு விநாயகப் பெருமானே உதவியுள்ளார்.

இந்துமத உலகில் விநாயகப் பெருமானுக்கு முதலில் வணக்கம் செய்வது மரபு. சகல கிரியை முறைகளிலும் அவ்வாறே இத்தகைய சிறப்பியல்பை உள்ளார்ந்த ரீதியாக ஆராயுமிடத்து மேலும் தெளிவா கின்றது.

* * *

சிவ பரம்பொருள் ஒருமுறை உமாதேவியாருக்கு வேதத்தின் உட்பொருளை உபதேசித்துக்கொண்டிருந்தார். உமாதேவியார் அதைக் கேட்டலில் கவனம் செலுத்தாதொழிய, சிவபெருமான் உமாதேவியாரைப் பார்த்து பரதவர் மகளாகுமாறு சபித்தார். இக்கலவரத்தை அறிந்த விநாயகப்பெருமான் உள்ளே சென்று அங்கிருந்த வேதநூல்களையெல்லாம் எடுத்து கடலில் வீசினார். முருகப்பெருமான் சிவபெருமானின் திருக்கரங்களிலிருந்த வேதநூல்களை பறித்து வீசினார். இச்செயலால் கோபங்கொண்டார் சிவபெருமான். சிவபெருமான் விநாயகருக்குச் சாபமிட்டால் அது தம்மையே வந்துசாரும் என்ற காரணத்தால் அவருக்கு சாபமிடாமல் முருகப்பெருமானுக்கு, மதுரையிலே வணிகர் குலத்திலே உருத்திரசர்மா என்னும் பெயரோடு ஊமைப்பிள்ளையாகப் பிறக்குமாறு சாபமிட்டார். இதிலிருந்து சக்தியும், சத்தையுள்ளடக்கிய சிவபரம்பொருளே விநாயகப் பெருமான் என்பது தெளியப்படும்.

"வெருவரு செலவின் வேழமுகத்தனை விதித்த சாபம்
பெருவலி தன்னைச் சாரும் பெற்றியாற் சாபம் கூறான்"
என்பது திருவிளையாடற் புராணம்.

## 1. *சிவன்*

சிவபெருமான் விநாயகரின் தந்தை. தமது மூத்தபிள்ளையாகிய விநாயகரை முன்னிட்டுக் கொள்ளாமல் திரிபுரசங்காரத்திற்கு புறப்பட்டுவிட்டார். தேர் அச்சு முறிந்தது. இதனை வேடிக்கையாகவும், விநயமாகவும் மணிவாசகப் பெருமானார்

"தச்சு விடுத்ததும் தாமடி யிட்டலும் அச்சு
முறிந்தது என்றும் தீபற" என்று அருளினார்.

அருணகிரிநாதர்

''முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடி செய்த அதிதீரா''

என்று திருப்புகழ் பாடினார்.

எல்லா ஆலயங்களிலும் திருவிழாக்காலங்களிலும் உற்சப மூர்த்தி வீதியுலா வரமுன் சபாமண்டபத்தினுள்ளே பூசைமுடிவுற்றதும் மூர்த்தி வெளியேறும்போது தேங்காய் உடைப்பது வழமை. இந்த நிகழ்ச்சி சிவனும் முக்கண்ணன் விநாயகரும் முக்கண்ணன் என்பதனையும், விநாயகப் பெருமான் செல்வதற்குச் சமமாக மூன்றுகண்களையுடைய தேங்காயை உடைத்து விநாயகருக்கு வழிபாடு செய்து அவரின் அனுமதியைக் கோருவது போலாகும்.

## 2. விஷ்ணு

சிவபெருமானை வேண்டி பல ஆண்டுகள் தவமிருந்து அழியாவ ரங்கள் பெற்ற இரணியகசிபன், அவ்வரங்களால், தேவர்களையும், மண்ணுலகமன்னர்களையும் துன்புறுத்தத் தொடங்கினான். வேதனை தாங்காது அஞ்சிய தேவர்களும் முனிவர்களும் திரண்டு சென்று பாற்கடலில் பள்ளிகொள்ளும் பரந்தாமனின் பாதங்களில் பணிந்து தங்கள் குறைகளை முறையிட்டனர்.

ஸ்ரீமத் நாராயணன் மண்ணுலகத்திற்கு எழுந்தருளினார். வன்னிம ரத்தடியில் விநாயகப் பெருமானை பிரதிஷ்டை செய்தார். சடாக்ஷர மந்திரத்தை ஜபம் செய்தவாறு விநாயகப் பெருமானை வேதநெறிப் படி வழிபட்டார்.

வன்னிமரத்து விக்கினேசுவரர், பெருமானின் திருமுன் காட்சி கொடுத்தார். திருமால் விநாயகரைப் போற்றி ''விக்கினேஸ்வரா அசுர குணம் தழைக்கச் செய்யும் இரணியகசிபனை சம்ஹாரம் செய்வதற் கான மார்க்கத்தைச் சொல்லுதல் வேண்டும்'' என்று வரம் கேட்டார்.

அதற்கு விநாயகப் பெருமான் ஒரு உபாயம் கூறுகிறார். நரசிம்ம அவதாரம் எடுத்து அந்திப்பொழுது வாசற்படியில் இருந்து உன்மடியில் அக்கொடியவனை இருத்தி, உன் கூரிய நகங்களால் அவனது மார்பகத்தைப் பிளந்து பெருகும் உதிரத்தை நிலத்தில் சிந்தாதவாறு உறிஞ்சி அவனை சம்ஹாரம் செய்வாயாக, இத்தகைய உருவத்தைப் பெறத்தக்க ஆற்றலை உனக்கு அளித்தோம் என்று திருவாய் மலந்தருளினார்.

மேலும் இராம அவதாரத்தில் சீதையை மீட்க விநாயகப் பெருமானை வேண்டி வெற்றி பெற்றார்.

## 3. முருகன்

சிவபெருமானின் திருக்குமாரர்கள் விநாயகரும் முருகனும் அண்ணன் தம்பி நல்லுறவில் இருந்தாலும் நாரதர் சிலவேளைகளில் அவர்கள் நல்லுறவைக் குழப்பிவிடுவார். அதிசய மாங்கனியை பார்வதி பரமசிவனிடம் கையளித்தவேளேயில் இரு குமாரர்களும் அதை நோக்க நாரதரே உபாயம் சொல்கிறார். இந்த உலகத்தை யார் முதலில் சுற்றி வருகிறார்களோ அவருக்குத்தான் மாங்கனி என்று கூற போட்டியும் ஆரம்பித்தது. ஞான நாயகன் அல்லவா? பொருள் விளங்கியது. அம்மை அப்பரை வலம்வந்து கனியைப் பெறகிறார் விநாயகர். காண்கிறார் மயில்வாகனனார். உடனே கோபம் மேலோங்கியது. போகிறார் வெளியே. 'நீயே பழமப்பா' என்று ஔவை சாந்தப்படுத்துகிறார். இவ்வண்ணம் அண்ணன் தம்பி உறவு குழம்பியிருந்தது. ஆனால் பின்னே பல சந்தர்ப்பங்களில் அண்ணனுதவி தம்பிக்குத் தேவையானது.

கந்தபுராணத்திலே வள்ளி திருமணப் படலத்திலே இந்த உதவி தெளிவாக விளக்கப்படுகின்றது. வள்ளியைத் திருமணம் செய்ய

நினைக்கின்றான் முருகன். ஆனால் வள்ளியோ தினப்புனத்தில் முருக னுக்கு எதுவித இடமும் கொடுக்கவில்லை. பலவகையான கலந்துரை யாடல் நடிப்புகள் விட்டும் சரிவராது என நினைத்த முருகன் தனது அண்ணனை அழைத்து வள்ளியைப் பயமுறுத்தித் தான் திருமணம் செய்ய வேண்டும் என நினைத்து அண்ணன் விநாயகனை நினைக் கின்றார்.

"பொன்னே அனையாள் முன்போகும் திறன்நோக்கி
என்னே இனிச் செய்வ தென்றிரங்கி எம்பெருமான்
தன்னேரிலாதமரும் தந்திமுகத் தெந்தனை
முன்னே வருவாய் முதல்வா வென நினைத்தான்"

தம்பி முருகனின் தாகத்தை உணர்ந்த அண்ணன் விநாயகர் தம் பிக்கு அவ்வேளை உதவ நினைத்து தினப்புனத்திலே தனிமையில் நின்ற வள்ளி முன்பு பெரியதோர் யானை வடிவம் கொண்டு, காட் டின் ஊடாக கட கட என்று வர, வள்ளி உடனே பயந்து மாறுவேடத் தில் நின்ற முருகன் அருகில் சென்று அணைத்துக்கொண்டாள். பின் னர் தெளிவு ஏற்பட்டது. திருமணமும் நடந்தது. இந்தச் செயல் விநாய கப் பெருமானாலேயே நிகழந்தது.

### 4. நான்முகன்

படைக்கும் தொழிலைப் புரிபவர் பிரமதேவர். தாம் மகாகணப தியை வழிபடாமல் படைப்புத் தொழிலைத் தொடங்கினார். ஆனால் அத் தொழிலைச் செவ்வனே செய்ய முடியாது போய்விட்டது. உயிர் பெற்ற உருவங்கள் அனைத்தும் விகாரத்தோற்றத்துடன் தென்பட்டன.

இரண்டு முகங்கள், மூன்று கண்கள், நான்கு தலைகள், ஐந்து காது கள், ஆறு கால்கள், ஏழுகைகள், பெருத்த உடல்கள் இப்படியாக சகல

உயிர்களும் விகாரமாகத் தோன்றியதோடுமல்லாமல் நான்முகனைப் பார்த்து ஏளனமாக சிரித்தன.

இத்தகைய கொடிய துன்பத்திற்கான காரணமென்ன என்று நிஷ்டையில் ஆழ்ந்தார். பின்னர் தாம் விட்ட பிழையை அறிந்து கொண்டார். எங்கும் நிறைந்தவரும் மும்மூர்த்திகளைத் தோற்றுவித்தவருமான எக்காரியத்தை தொடங்குமுன் விக்கினங்கள் எதுவுமில்லாமல் காப்பாற்றுபவருமான விநாயகப் பெருமானைத் தியானிக்கத் தவறியதால் தான் இந்த விளைவுகள் வந்தன என்பதை உணர்ந்தார். பின்னர்தான் நிஷ்டை கலைந்து, தூய நீராடி வெண்ணீறணிந்து விநாயகரை நினைந்து யோகத்தில் ஆழ்ந்தார். அப்போது விநாயகர் குழந்தை வடிவில் காட்சி கொடுத்தார்.

நான்முகன் தோத்திரம் செய்தவாறு ''விக்கினேஸ்வரா, எழியேனின் பிழையைப் பொறுத்தருள்வீராக'' தேவரீரைக் கவனிக்காமல் படைப்புத் தொழிலைத் தொடங்கிய நான் பல இன்னல்களுக்கு ஆளானேன். என் தவறை உணர்ந்துவிட்டேன். மீண்டும் படைப்புத்தொழிலை விக்கினம் இன்றி நடத்த வல்லமையைத் தந்தருளவேண்டும்''. என்று மெய்யுருகப் பிரார்த்தித்தார்.

குழந்தை விநாயகர் நான்முகனைப் பார்த்து ''கமலோற்பவா இனிமேல் நான் எனது என்னும் கர்வம் கொள்ளாதே, உனக்கு எம்மைப் பிரீதிப்படுத்தும் ஏகாசதி மந்திரத்தை உபதேசிப்போம். அதை நீ முறையோடு பத்துலெட்சம் தடவை ஜெபம் செய்ய வேண்டும். முடிவில் நான் உன் முன் தோன்றி மற்ற விபரங்களை சொல்வோம் என்று திருவாய்மலர்ந்தார். அவ்வாறே நான்முகன் செயல்பட்டார். அவரின் ஜெபத்திற்கு திருவுள்ளங்கனிந்த வேழமுகத்தோன் ''நான்முகனே உமது தவத்தை மெச்சினோம் எம்மிடமுள்ள ஞானசக்தி, கிரியா சக்தி என்னும் இரு சக்திகளையும் வழங்குகின்றோம். அவைகளை மனதில்

தியானித்துப் படைப்புத் தொழிலைச் செய்யவும் எனத் திருவாய் மலர்ந்தார். பின்னர் நான்முகன் விநாயகப் பெருமானை மனதில் நினைத்து நிஸ்டையில் அமர்ந்து படைப்புத்தொழிலை ஆரம்பித்தார். பின்னர் விநாயகப் பெருமானின் பேரருளால் ஞானசக்தி கிரியாசக்தி என்ற இரு சக்திகளும் சித்தி, புத்தி என்னும் திருப்பெயர்கொண்ட தெய்வ மகளிராய் நான்முகன் முன்னே தோன்றினார்.

## 5. ஆதிசேடன்

ஆதிசேடன், ஒருசமயம் தான் பரமேஸ்வரனின் முடியில் இருப்ப தால் சகல தேவர்களும் வணங்கத்தக்க கௌரவத்தை அடைந்துள்ள தாக மமதை கொண்டான். ஆதிசேடனின் கர்வத்தை அடக்க ஈசனும் எண்ணங்கொண்டு தன் முடியிலிருந்த ஆதிசேடனைப் பிடித்து இழுத்து தரையில் அடித்தார். சகலவல்லமையும் இழந்த ஆதிசேடன் தான் கர்வங்கொண்டதால்தான் இந்தத்துன்பம் வந்தது என்று துக்கித் தான். ஈஸ்வரனின் திருவருள் பெற்று இழந்த கௌரவத்தை அடைய வழி தெரியாது தரையில் கிடந்தான்.

அவ்வேளை நாரதர் அங்கு தனது ஞான சிருஷ்டியால் நடந்ததைய றிந்து ஆதிசேடா இறைவனின் திருமுடியில் இருப்பது பெரும் பாக்கி யம் என்று நினைக்காமல், நீ மாறாக கர்வம் கொண்டாய். அதனால் இத்துன்பம் வந்தது என்று கூறி நீ சர்வலோக நாயகனான விநாயகப் பெருமானின் சடாக்ஷர மந்திரத்தை உபதேசம் பெற்று அவரைத் தியா னித்து வருவாயானால் உனக்கு அவரது அனுக்கிரகம் கிட்டும் என்று கூறி அம்மந்திரத்தை உபதேசித்தார்.

அவ்வண்ணம் செய்து துயரம் நீங்கிய ஆதிசேடன் கருணாமூர்த்தி யைத் தியானித்து சதுர்த்திவிரதம் அனுட்டித்தான். பின்னர் சித்தி,

புத்தி சகிதம் சிங்கவாகனத்தில் காட்சி கொடுத்தார். தேவ தேவ என்னைக் காத்தருளவேண்டும் எனப் பிராத்தித்தான்.

''பக்தனே கர்வத்தால் நீ இழந்த சக்திகள் திரும்பவும் உன்னை வந்து அடையும். முன்னைப் போலவே ஆயிரம் தலைகளோடு இப்புவனம் முழுவதையும் தாங்கிவர ஐந்து முகங்களோடு பரமேஸ்வரனின் முடியிலிருந்து வரும் பாக்கியம் உனக்குக் கிட்டட்டும். இப்போதைய நிலையில் நீ எனக்கு உதர பந்தமாகக் கடவாய்'' என்று வரம் அருளிய விக்கினராஜர் விசுபரூபம் கொண்டு ஆதிசேக்ஷனை எடுத்து தனது வயிற்றிலே சுற்றி அணிந்து கொண்டார்.

ஆதிசேக்ஷனும் ஆனந்த பரமனாகி தனது அம்சத்தில் ஒரு பகுதியை விநாயகனின் உதரபந்தனமாக இருக்கச்செய்துவிட்டு விக்கினேஸ்வரரின் அருளால் இழந்த சக்தியை மீண்டும் பெற்றுத் திரும்பினான்.

## 6. உமை

முன்னொருபோது பண்டாசூரன் போர் நிகழ்ந்தது. அசுரனாகிய பண்டாசூரன் உமையம்மையாருக்கு பல துன்பங்களைச் செய்தான். அந்த அசுரனால் ஏற்படுத்திய விக்கினங்களையெல்லாம் நீக்குவதற்கு விநாயகரை வேண்ட விநாயகரே அவ்விக்கினங்களை விலக்கியருளினார்.

பார்க்கல புராணத்தில் உமாதேவியார் தமக்கு ஏற்பட்ட துன்பங்களை நிவர்த்திப்பதற்கு பல இடங்களில் விநாயகரை வேண்டி விரதம் அனுட்டித்து அதில் இருந்து மீட்சி பெற்ற வரலாறுகள் பல உண்டு.

**''தேவர்கடேவன் சிந்துரமுகத்தனன்**
**மூவர்கண் முதல்வன் முத்தொழிற்குங் காரணன்**

மேவா மகிழ்வது விளம்பு நாமமும்
தாவறு விநாய சதுர்த்தி யென்பால்''

தாயே மிகச் சிறப்புடையதும், விரைவில் நற்பயன்களை அளிப்பதும், இந்திரன் சாபத்தை நீக்கியதும், நான்முகனாதியர்க்கும், கிருட்டியாதி தொழில்களைத் தந்ததும், சகல விடயங்களையும் நீக்கித் தந்ததும், இன்று இவைமுதலான அளவற்ற மகிமைகளையுடைய விரதம் இருக்கிறது. அவ்விரதம் மூவர் முதல்வராகியும், முத்தொழிற்கும் காரணமாயிருக்கின்ற யானை முகக் கடவுளுடைய சதுர்த்தி விரதமாகும்.

இதன் மகிமையை உணர்ந்த உமாதேவியார் இவ்விரதத்தை அனுட்டித்து தக்கன் மகளாப் பிறந்து அடைந்த துன்பத்திலிருந்து மீட்சி பெற்று மீண்டும் சிவனை அடைந்தார்.

இவ்வாறு எல்லா மூர்த்திகளுக்கும், முனிவர்களுக்கும், தேவர்களுக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைத்திருப்பதை ஒவ்வொரு புராணங்களையும் ஆராயும் போது தெளிவாகின்றது. கந்தபுராணத்தில் பல இடங்களில் முதல்வன் விநாயகன் என்று கூறப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

* * *

# வெளி நாடுகளில் விநாயகர்

சமய இலக்கியங்களையும் மற்றும் இந்திய, இலங்கை சிற்ப வரலாற்றுச் செய்திகளையும், ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்போது விநாயகர் வழிபாடு மிகத் தொன்மையான காலம் தொடங்கி இடையீடு இன்றி பல நாட்டிலும் நிலவி வந்திருக்கின்றது.

நாட்டுக்கு நாடு விநாயகவடிவங்கள் வேறுபட்டுள்ளன. பம்பாயில் இரண்டு முகங்களோடும், ஜப்பானில் மூன்று முகங்களோடும், சீனாவில் நான்கு முகங்களோடும், நேபாளத்தில் ஐந்து முகங்களோடும் விநாயகர் வணங்கப்படுகிறார்.

1. பர்மா தேசத்தில் அம்மக்கள் கணபதியை அவர்களுடைய மொழியில் ''மகாபிணி'' என்று அழைப்பர்.

2. மங்கோலிய மக்கள் ''தோக்கார்'' என்று அழைப்பர். சிலபகுதிகளில் ''அபுன் காகரம்'' எனவும் வழங்குவர்.

3. திபெத் தேசத்து மக்கள் விநாயகரை அவர்களுடைய மொழியில் ''ட்ஸா கஸ்புடார்'' என்றும் ''ப்செக்ஸ் மெம்-பேய்ப்டாக்பே'' என்றும் வணங்குவர்.

4. கம்போடியாவில் ''பிரஹகணேஸ்'' என்று அம்மக்கள் அவர்கள் மொழியில் வணங்குவர்.

5. சீனமொழியில் அவர்கள் ''குவான்ஷியிக்'' என்று அழைப்பர்.

6. யப்பானியர்கள் அவர்கள் மொழியில் ''வினாயக்ஷா'' என்று விநாயகரை அழைப்பர்.

7. நேபாளத்தில் ''எதிர்முக கணேசன்'' என்று வணங்குவர்.

8. இந்து சீனாவில் ''பஞ்சமுக கணபதி'' என வணங்குவர்.

9. பம்பாயில் ''கணேசஜெயந்தி'' இருமுக கணபதியை வணங்குவர்.

10. அமெரிக்காவில் பலதரப்பட்ட வினாயக உருவங்களும் கணபதி கோயில்களும் உள்ளன. மேலும் சிறப்பாக இந்த நூற்றாண்டில் கூட சுவாமி விவேகானந்த அடிகள், அமெரிக்காவில் விநாயகர் கோயில் கட்டி அவர்களை வழிபடச் செய்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

11. சிங்களவர் ''கணதெய்யோ'' என்பர். அவரே விளைவை எலி முதலிய விலங்குகளிலிருந்து காப்பார் எனக்கருதுவர்.

* * *

அருணகிரி யந்தாதி

சித்தி தரும் புத்தி தருஞ் செந்திருவைச் சேர்விக்கும்
பத்தி தரு மெஞ்ஞானம் பாலிக்குங் கொத்தி
யரி முகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கைகொழுதக் கால்

# ஞானக்கொழுந்து

சைவத்திருமுறைகளுள் பத்தாவதாக வருவது திருமூலர் இயற்றிய திருமந்திரமாகும். திருமூலர் திருவாவடுதுறை திருக்கோயிலை தமது நினைவை செயற்படுத்த புனித இடமாக அடைத்துக் கொண்டார். அத்தலத்துக்குரிய மரமாகிய அரசினடியில் யோக சமாதியில் இருக்கத் தொடங்கினார். ஓராண்டு யோகத்தில் இருந்து விழிப்பார். விழித்தவுடன் ஒரு செய்யுள் திருவாய் மலர்வார். இப்படி மூவாயிரம் ஆண்டுகள் யோகத்தில் அமர்ந்திருந்து மூவாயிரம் பாடல்களைப் பாடி அருளினார். அப்பால் மீண்டும் கைலாயம் சென்று இறைவனைப் பிரியாமல் வாழும் வாழ்வு பெற்றார்.

இவ்வண்ணம் மூவாயிரம் ஆண்டுகள் செலவு செய்து மூவாயிரம் திருமந்திரங்களைப் பாடி அருளிய திருமூலர் வினாயகப் பெருமானை ஞானக் கொழுந்தாகக் காண்கிறார்.

''ஐந்து கரத்தனை ஆனைமுகத்தனை
இந்து இளம்பிறைபோலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!''

விநாயகரின் திருவுருவத்தை நோக்குகின்ற ஒவ்வொருவருக்கும் யானை முகந்தான் முதலில் நினைவில் வரும். அந்த முகத்தில் சிறப்பிலக்கணம் துதிக்கையாகும். யானை முகவனாகிய விநாயகருக்கு தெய்வ நிலைக்கேற்ப அமைந்த திருக்கரங்களும், யானை முகத்திற்கு ஏற்ப அமைந்த நெடுங்கையாகிய துதிக்கை ஒன்றுமாக ஐந்து கரங்கள் உண்டு. துதிக்கையைப்பற்றி ஆராயும் போது அது அன்பர்கள் உள்ள இடத்திற்கு நீண்டு சென்று வணங்கும் ஆற்றல் உடையதைக் குறிப்பதாகும்.

இறைவனின் திருவருளைப் பெற நாம் எமது மனத்தை பொறி போகாமல் பாதுகாக்கவேண்டும். நம்மை மலத்தில் மயக்கி வைத்திருப்பது நம்முடைய பொறிகளாகும். இந்த பொறிகளின் விளைவால் மக்கள் பிறந்து உழல்கிறார்கள். நாம் ஐம் பொறிகளின் விளைவால் மக்கள் பிறந்து குறும்பு நிலைகளிருந்து விடுதலை பெறுவதற்கு ஞானம் உண்டாக வேண்டும். இறைவனுடைய திருவருளால் ஞானம் உண்டாகும். ஞானநாயகனாகிய விநாயகன் ஐம்பெறிகளையும் அடைத்து அருள் செய்ய, ஐந்து கரங்களைப் பெற்றிருக்கிறார். ஐம் பொறிகளாகிய மத யானையை அடக்கும் அங்குசத்தையும், பாசத்தையும், வைத்திருப்பவர் விநாயகர். ஐம் பொறிகளாகிய யானைகளைக் கட்டுப்படுத்தி அவற்றால் அஞ்சி கட்டுப்பட்ட உயிர்களை பாசத்தில் நின்றும் விடுவிப்பவர். ஐந்துகைகள் உடையவர் என்பது ஐந்து தொழிலை உடையவர் என்பதற்குரிய அறிகுறி ஆகும். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல், என்னும் ஐந்திற்கும் தலைவன் ஐங்கரன்.

## ஏக தந்தன்

விநாயகருக்கு யானையைப்போல் இரண்டு கொம்புகள் இருந்தும் அதில் ஒன்றை ஒடித்துவிட்டார். இதுதான் எப்போதும் தியாகம் செய்வதற்கு சித்தம் என்பதைக் காட்டுகிறது. ஒற்றைக் கொம்புடன் விளங்கும் விநாயகர் அக்கொம்பு மூன்றாம் பிறைச்சந்திரனைப்போல மாசு மறுவற்று வெண்மையாய், வளைவை உடையதாய் விளங்குகின்றது. விநாயகர், தன் கொம்புகளில் ஒன்றை ஒடித்து, கயாமுகாசூரனை சங்காரம் செய்தார். மேலும் மேருமலையில் பாரதத்தை எழுதினார். நல்லோருக்கு தீங்கு பயக்கும் அசுர சக்திகளை ஒடுக்கி கல்லையும் கனியச் செய்யும் ஆற்றல் அக்கொம்புக்குண்டு, விக்கிரகம் அனுக்கிரகம் ஆகிய இரண்டு அருட்செயலையும் அவை செய்யும். அடித்தலுக்கும், அணைத்தலுக்கும், காரணமாய் இருக்கின்ற விநாயகருடைய

கொம்புகள் இரண்டில் ஒடித்த கொம்பு மறக்கருணையையும் ஒடிக் காத கொம்பு அறக்கரணையையும் குறிப்பனவாகும்.

## போற்றுதற்குரிய பெருமான்

''அகத்தின் அழகு முகத்தில் தெரியும்'' என்பார்கள். ஞானநாயக னாக கற்பக மரத்தின் கொழுந்து போன்ற விநாயகப் பெருமானை பார்க்கும் போது இயல்பாகவே உள்ள சக்திகள் புந்தியில் வைத்து போற்றுகின்ற அளவிற்கு திருமூலர் தெளிவு படுத்துகின்றார். முதலில் துதிக்கையும், மற்றைய கைகளும் தெரிகின்றன. ஐந்துகரத்தனை என்று போற்றுகின்றோம். ஆனைமுகக் காட்சியையும், ஒற்றைக் கொம்பையும் காண்கின்றோம். ஐம்பொறிகளை அடக்கும் ஞானத்தை வழங்கும் வள்ளலாக அனுக்கிரக சக்தி உடையவனாக ஞானசொரூபி யாக பார்க்கின்ற போதெல்லாம், எமக்கு தாமகவே விநாயகப் பெரு மானை பணிந்து போற்றக்கூடிய ஒரு உணர்வு நிலை எழுகின்றது.

இத்தகைய இயற்கைச் சிறப்பியல்புகளை உடைய கணபதியை அணுகுவதால் எமக்கு அவர் அருளுவார் என்ற நம்பிக்கை ஏற்படு கின்றது. அத்தகைய நம்பிக்கையை அருளும் ஐங்கரங்களின் சிறப்பி யல்புகளை இதன் மூலம் அறிகின்றோம். 'ஆனைமுகத்தான் என்று கூறும் பொழுதே பிறருக்கு அளிக்கும் பொருளாகிய அறிவு நிரம்பப் பெற்றவர் என்பது கருத்தாகும். கை என்பது செயலுக்கு அறிகுறி. கையறல் என்ற தொடரால் அது விளங்கும். ஐந்து கரங்கள் உடையவர் என்பது ஐந்தொழிலை உடையவன் என்பதற்குரிய அறிகுறியாகும். ஆகவே இத்தகைய சிறப்புமிக்க விநாயகப் பெருமானின் கரமும், முகமும், உடலும் அப்பெருமானின் பெருமைகளை உணர்ந்து பணிந்து போற்றுவதற்கு எம்மைத்தூண்டுகிறது என்பது தெளிவாகின் றது.

* * *

# மஹா கணபதியின் முப்பத்திரெண்டு திவ்ய தரிசனம்

## 1. பால கணபதி

திருக்கரங்களில் வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம், கரும்பு, மோதகம் இவைகளோடு அவதரிக்கின்றார். இளம் சூரியனைப் போன்ற பொன்நிறமுள்ள திருமேனியைப் பெற்று பிரகாசிக்கின்றார்.

## 2. தருண கணபதி

பாசம், அங்குசம், அபூபம், விளாம்பழம், நாவற்பழம், தன் ஒடித்தற் கொம்பு, நெற்கதிர் இந்த எட்டு வஸ்துக்களையும் கைகளில் ஏந்தியுள்ளார். மத்தியான சூரியன் போன்ற சரீர காந்தியைக் கொண்டுள்ளார்.

## 3. பக்தி கணபதி

தேங்காய், மாம்பழம், வெல்லம், பாயஸம் இவைகளைப் பெற்றுள்ளவர். சரத்சந்திரனைப் போன்ற வெண்மையான சரீர காந்தியை உடையவர்.

## 4. வீர கணபதி

வேதானம், சக்தி, வில். அம்பு, சக்கரம், கத்தி, கட்வாங்கம் என்னும் ஆயுதம் முத்தாரம், கதை, அங்குசம், பாம்பு, சூலம், வெண்மழு, தீவஜம், தந்தம் இவைகள் விளங்கும் பதினாறு கரங்களை உடையவர். சிவப்பு நிறமான திருமேனியை உடையவர்.

## 5. சக்தி கணபதி

மஞ்சள் நிறமான தேவியை ஆலிங்கனம் செய்து கொண்டிருப்பவர். சந்தியாகாலம் போன்ற சிவப்பு நிறமான சரீர காந்தியை உடையவர். நமது பயத்தைப் போக்குபவர்.

## 6. துவிஜ கணபதி

புஸ்தகம், அஷமாலை, தண்டம், கமண்டலம் ஆகியவைகளோடு சோபிக்கும் நான்கு கரங்களை உடையவர். கரங்களில் ஆபரணங்களை அணிந்திருப்பவர், சந்திரனைப் போன்ற வெண்மையான நிறத்தை உடையவர். நான்கு யானை முகத்தையுடையவர்.

## 7. சித்தி கணபதி

பக்குவமான மாம்பழம், பூங்கொத்து, கரும்பு, எள்ளுக்கொழுக்கட்டை, பரசு இவைகளைத் தரிப்பவர். தங்கம் போன்ற மஞ்சள் வர்ணமான சரீர காந்தியை உடையவர். சித்தி, புத்தி என்னும் இரு சக்தியரை உடையவர்.

## 8. உச்சிஷ்ட கணபதி

நீலோத்பலம், மாதுளம்பழம், வீணை, நெற்கதிர், குன்றுமணி மயமான அகஷ மாலை இவைகளைத் தரித்திருப்பவர், நீல நிறமானவர்.

## 9. விக்கின கணபதி

சங்கு, கரும்புவில், புஸ்பபாண், கோடாரி பாசம், சக்கரம், தன்கொம்பு, பூங்கொத்து, அம்பு இவைகளை விளங்கும் கைகளை உடையவர். கைகளில் அணிந்திருக்கும் நகைகளின் சோபையால் விளங்குபவர்.

## 10. சக்ஷிப்ர கணபதி

தந்தம், கற்பலகை, பாசம், ரத்தினகவசம், அங்குசம் இவைக ளைத் தரித்துக் கொண்டிருப்பவர். பந்தூகம் என்னும் புஷ்பத் தின் நிறம் போன்ற சரீர காந்தியையுடையவர்.

## 11. ஹேரம்ப கணபதி

அபயம், வரதம், பாசம், அங்குசம், தன்கொம்பு, ஜெப மாலை, வெண்மழு, இரும்பு உலக்கை, கொழுக்கட்டை, வாழைப்பழம் இவைகளைத் தரிப்பவர். சிங்க வாகனத்திலி ருப்பவர். ஐந்து யானை முகங்களை உடையவர். அதிகமான மஞ்சள் நிறமுடையவர்.

## 12. லக்ஷ்மீ கணபதி

கிளி, கும்மட்டி மாதுளை, மாணிக்கமயமான கலசம், அங்கு சம், பாசம், கற்பலகை, மிகப்பிரகாசமான கத்தி, இவைகளைத் தரிப்பவர். அமிர்த் பிரவாகம் போன்றவர். இரண்டு கைகளி லும் நீலோத்பலங்களை ஏந்தியுள்ள இருதேவிகளால் விளங் குபவர். இரு பார்ச்வபாகங்களையுடையவர். வெளுப்பு நிற மாக இருப்பவர் .வரத்தை அளிப்பவர்.

## 13. நிருத்த கணபதி

பாசம் அங்குசம், அதிரசம், கோடாரி, விரல்களில் மோதிரங் களை அணியப்பெற்றவர். மஞ்சள் நிறமானவர். கற்பக விருட் சத்தின் கீழ் நிருத்தியத்தில் ஈடுபட்டவர்.

## 14. ஊர்த்தவ கணபதி

செங்கழு நீர்ப்பூ, நெற்கதிர், தாமரைப்பூ, கரும்புவில், அம்பு தந்தம், கதை இவைகளை தரிப்பவர். தங்க நிறம் போன்ற அங்கங்களை உடையவர். பச்சை நிறமான தேவியால் ஆலிங்கனம் செய்யப்பட்டவர்.

## 15. மகாகணபதி

யானைமுகம் போன்ற முகத்தை உடையவர். சந்திரனை சிரசில் அணிந்தவர். உதய சூரியன் போன்ற சரீரக் காந்தியை உடையவர். மூன்று கண்களை உடையவர். கையில் தாமரைப் பூவைத் தரித்த சக்தியால் ஆலிங்கனம் செய்யப்பட்டவர். மாதுளை, கதை, கும்மட்டி, கரும்புவில், திரிசூலம், சக்கரம், தாமரைமலர் பாசக் கயிறு நீலோத்பலம், நெற்கதிர், தனது ஒடிந்த கொம்பு, ரத்தினக் கலசம் இவைகளைப் பெற்றுள்ள கைகளை உடையவர்.

## 16. விஜய கணபதி

பாசம், அங்குசம், தன்கொம்பு, மாம்பழம் இவைகளைத் தரித் திருப்பவர், மூஷிக வாகனத்திலிருப்பவர், பலசாலியானவர். சிவப்பு நிறமானவர்.

## 17. ஏகாசஹர கணபதி

சிவப்பு நிறமான சந்தன வஸ்தரம், புஸ்பம் இவைகளைத் தரிப்பவர். பெருத்த வயிறையுடையவர் பிறையைத் தரித்த வர். மூன்று கண்கள் உடையவர், குட்டையான கைகால்களை உடையவர், கும்மட்டி, மாதுளை, பாசம், அங்குசம், கொம்பு வரம் இவைகளைத் தரித்தவர். யானை முகமானவர், பாம்பு களை ஆபரணங்களாகத் தரித்தவர். பத்மாஸனத்தில் வீற்றி ருப்பவர்.

## 18. வர கணபதி

செந்தூரம் பொன் போன்ற நிறமுடையவர், யானை முகமான வர். மூன்று கண்களை உடையவர். கைகளில் பாசம், அங்கு சம் மதுவுடன் கூடின பாத்திரம் இவைகளைத் தரிப்பவர், பிறைச்சந்திரனை சிரசில் தரிப்பவர். த்வஜம், பத்மம் இவைக ளுடன் கூடின கரங்களையுடையவர். புத்தி தேவியால்

ஆலிங்கனம் செய்யப்பட்டவர். அந்தப் புத்திதேவியின் உடலில் வைத்த கரத்தைத் தாங்கியவர், சகல நிதிகளும் நிறைந்த பாத்திரத்தை தாங்கிய துதிக்கை உடையவர்.

## 19. திரயாகக்ஷர கணபதி

யானை முகமுடையவர். எப்போதும் அசைந்து கொண்டிருக்கும் காதுகளாகிய சாமரங்களை உடையவர். தங்க நிறமானவர். நான்கு கைகளை உடையவர், பாசம், மாம்பழம் விளங்கும் வலக்கரங்களை உடையவர். துதிக்கையில் மோதகத்தைத் தரிப்பவர். மூன்று அக்ஷரமாகின்ற மூல மந்திரத்தையுடையவர்.

## 20. க்ஷிப்ர கணபதி

பாசம், அங்குசம், கற்பகமரத்தின் கொடி, தன்கொம்பு, கும்மட்டி, மாதுளை இவைகளை கைகளில் தரிப்பவர். சந்திரக்கலையை சிரசில் தரிப்பவர். மூன்று கண்களை உடையவர். சிவப்பு நிறமானவர், யானை முகத்தை உடையவர். சிறந்த நகைகளால் பிரகாசிப்பவர். பெருத்த வயிற்றை உடையவர். தாமரைப் புஸ்பத்திலிருப்பவர். விக்னங்களை விளக்குகின்றவர். தாமரைப் புஷ்பத்தைத் தரித்திருப்பவர்.

## 21. ஹரித்ரா கணபதி

மஞ்சள் நிறமான முகத்தை உடையவர். மஞ்சள் நிறமான நான்கு கைகளை உடையவர். நான்கு கைகளிலும் பாசம், அங்குசம், கொழுக்கட்டை, கொம்பு, இவைகளைத் தரித்திருப்பவர். பக்தர்களுக்கு அபயம் அளிப்பவர்.

## 23. சிருஷ்டி கணபதி

பாசம், அங்குசம், தன்கொம்பு, மாம்பழம் இவைகளைத் தரிப்பவர். மூஷிக வாஹனமும் உடையவர். சிவப்பு நிறமாக இருப்பவர். படைப்புத் தொழிலை புரிபவர்.

## 24. உத்தண்ட கணபதி

செங்கழு நீர், புஸ்பம், சங்கம், கும்மட்டி, மாதுளை, கதை, நெற்கதிர், கொம்பு, கரும்பு, வில், நீலோற்பலம், பாசம், அங்குசம், தாமரைமலர், ரத்தினகலசம் இவைகளைத் தரிப்பவர். கையில் தாமரை மலரைத் தரித்து வெளுப்பு நிறமான காந்தியுடன் கூடிய தேவியால் ஆலிங்கனம் செய்தவர். சிவப்பு நிறமானவர்.

## 25. கணமோகன கணபதி

பாசம், அங்குசம், கொம்பு, நாவல்பழம் இவைகளைத் தரித்திருப்பவர், படிகம் போன்ற நிறமானவர். சிவப்பு நிறமான ஆடையை அணிந்திருப்பவர்.

## 26. துண்டி கணபதி

ஜெபமாலை, கோடரி, ரத்தின பாத்திரம் இவைகளைத் தரித்திருப்பவர்.

## 27. துவிமுக கணபதி

தன்கொம்பு, பாசம், அங்குசம், இரத்தின பாத்திரம் இவைகளை கைகளில் தரித்திருப்பவர், இந்திரநீலம் போல் சரீரகாந்தியையுடையவர், சிவப்பு நிற வஸ்திரத்தைத் தரித்திருப்பவர், ரத்தினமான கிரீடம், மாலை இவைகளை அணிந்திருப்பவர். இரண்டு முகத்தையுடையவர்.

## 28. மும்முக கணபதி

பிரகாசமும் தீட்சண்யமும் கூர்மையான அங்குசம், ஜெப மாலை, வரம் இவைகளை வலது கைகளில் தரித்திருப்பவர். பாசம், அமிர்தயமான கலசம், அபயம் இவைகளை இடதுகை களில் தரித்திருப்பவர். ஸ்வர்ணமயமான தாமரை மலரின் மத்தியில் விளங்குகின்ற பீடத்தில் சந்தோசமாக வீற்றிருப்ப வர். பலாசகுஸுமம் போன்ற சிகப்பான தேக காந்தியை உடையவர்.

## 29. சிம்ஹ கணபதி

வீணை, கற்பகக்கொடி, சக்கரம், வரம் இவைகளை வலது கைகளில் தரித்திருப்பவர். தாமரை மலர், ரத்தின மயமான கலசம், அழகான பூங்கொத்து இவைகளை இடது கைகளில் தரித்திருப்பவர். துதிக்கை விளங்குகின்ற சிங்க முகத்தை உடையவர். சங்கம் சந்திரன் போன்ற வெளுப்பான நிறத்தை உடையவர். மங்கள மூர்த்தியாயும் பிரகாசிக்கின்ற இரத்தி னம் போன்ற ஆடையை அணிந்தவர்.

## 30. யோக கணபதி

யோகத்தில் இருப்பவரும், யோகப்பட்டதால் பிரகாசிப்பவர், பால சந்திரனைப் போன்ற சிகப்பான சரீர காந்தியை உடைய வர். இந்திர நீலக்கல் போல் பிரகாசிக்கின்ற ஆடையை அணிந்தவர். பாசம், கரும்பு, ஜெபமாலை, யோக தண்டம் இவைகளைத் தரித்தவர்.

## 31. துர்க்கா கணபதி

புடமிட்ட தங்கம் போன்ற சரீர காந்தியையுடையவர். பருத்த சரீரத்தை உடையவர். பருத்த வலது கரங்கள் நான்கிலும் கூரான அங்குசம், பாணம், ஜெபமாலை, கொம்பு இவைக ளையும் இடது நான்கு கைகளில் பாசம், வில், கற்பக விருக்ஷத்

தின் கொடி, நாவற்பழம் இவைகளையும் தரித்திருப்பவர். சிகப்பு நிறமான ஆடையை அணிந்திருப்பவர்.

## 32. ஸங்கஷ்ட்ஹர கணபதி

பால சூரியனைப் போன்ற சிறப்பான சரீரகாந்தியை உடையவராகவும் வெண்மை நிறமுடையவராகவும் விளங்குகிறார். ஒளி மிகுந்த ரத்னாபரணங்களை அணிந்திருப்பவர். நீலோத்பல மலர் விளங்கும் திருக்கரங்களை உடைய் சக்தியை தமது மடியில் வைத்திருப்பவர். இடது கைகளில் பாசம் பாயச பாத்திரம் இவைகளைத் தரித்தவர், வலது கைகளில் அங்குசம் வரம் இவைகளைத் தரித்திருப்பவர். நீலநிறமான ஆடையை அணிந்திருப்பவர். தாமரை மலர் போல சிகப்பான பீடத்தில் நின்ற கோலத்துடன் விளங்குபவர். யானை முகத்தை உடையவர்.

* * *



# விநாயகர் விரும்பும் நிவேதனப் பொருட்கள்

விநாயகருக்கு உகந்த நிவேதனப் பொருட்கள் தேங்காய், வெல்லம், எள்ளுறுண்டை, அப்பம், அவல், வாழைப்பழம், மாம்பழம், பனம்பழம் முதலியன. பயறுவகைகள், கனிவகைகள், கிழங்கு வகைகள் எல்லாம் விநாயகருக்கு உகந்தவையே. 'கடலை பயறோடு' என்ற திருப்புகழில் அப்பம் அமுது வரை இளநீர் எள்ளுருண்டை கடலைக் காயுருண்டை, கரும்பு ,கற்கண்டு, வள்ளிக்கிழங்கு, சர்க்கரைப் பொங்கல், வெண் பொங்கல், மிளகுசாதம், தினைமா, துவரை புழக்கல், தேன், நெய், பச்சரிசி, பணியாரம், பருப்பு, பாகு, பால், பிட்டு, பொரிமா, லட்டு, வடை, வெள்ளரிப்பழம், விழாம்பழம், நாவற்பழம் முதலிய உணவு வகைகள் உகந்தனவாகக் குறிப்பிடலாம்.

# விநாயகர் விரும்பும் புஷ்பங்கள்

விநாயகருக்கு சிவந்த புஷ்பம் மிக விருப்பம், மந்தரைப் பூ மிகச் சிறந்தது, தாமரை, முல்லை, கொன்றை, இருளாச்சி, செருத்தி, செண்பகம், குருந்து, மல்லிகை நொச்சி, குவளை, காளாத்தி, செவ்வந்தி, வெள்ளெருக்கு, புன்னை போன்று இன்னும் பலவும்.

# விநாயகர் விரும்பும் பத்திரங்கள்

அறுகு, வன்னி, மாசிப்பச்சை, கையாந்தகரை , வில்வம்,ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி, மாதுளை, தேவதாரு, அலரி, காட்டாத்தி, எருக்கு, மருது, விஷ்ணு கரத்தை மாதுளை தேவதாரு, மரு, நெல்லி, சிறுசண்பகம், செந்தாளி, மாதிரி இன்னும் பலவும்.

மேதகு மாசிப்பச்சை நறுங்கை யாந்தகரை
வில்வமுடன் ஊமத்தை நொச்சி நாயுருவி

பேதமில் கத்தரி வன்னரி அலரி காட்டாத்தி
யெருக்கு மருதுடன்மால் பேரியம்பு காந்தி
மாதுளையே தேவதாரும் அரு நெல்லி
மன்று சிறு சண்பகமே செந்தளி பாதிரியே
ஓதரிய அறுகு இவையோ இருபத்தொன்று
முயர் விநாய சதுர்த்திக் குயர் பத்திரமே.

# விநாயகர் விரும்பும் அறுகு

அறுகு விடத்தில் முளைத்து கொடி போல் நீண்டு பிற இடங்களிலும் விரிந்து பரந்து வேரூன்றிச் செல்வதும் ''ஆல் போல் தழைத்து அறுகது போல் வேரூன்றி'' என்பது பழமொழி. இது போலவே எமது உடலில் குண்டலியில் வசிப்பவராகிய விநாயகப்பெருமான் உடலில் ஏனைய இடங்களில் பொருந்தச் செய்கிறார். இதன் காரணமாக அறுகு அவருக்கு மிகப்பிரியமாயிற்று.

# அறுகம் புல்லின் மகத்துவம்

முன்னொரு போது யமனின் மகன் அனலாசுரன் என்பவன் தேவர்களை யெல்லாம் கடுமையாக கஷ்டத்திற்குள்ளாக்கினான். துயருற்ற தேவர்கள் தங்கள் சொல்லொண்ணாத் துன்பத்தை விநாயகரிடம் கூறி அதனை நீக்குமாறு வேண்டினர். அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க அந்த அனலாசுரனை அப்படியே விநாயகப் பெருமான் விழுங்கிவிட்டார். ஆனால், அவர் மேனி முழுவதும் அனலாயிற்று. அவ்வெப்பத்தைத் தணிக்க சந்திரன் அமுதம் ஊட்டினான் சரிவரவில்லை. பின்னர் சித்தி புத்திகள் தமது குளிர்ந்த அவையங்களால் ஒத்தணம் பிடித்தனர். அதற்கும் குணமாகவில்லை. விஷ்ணு தாமரைப் பூக்களால் ஒற்றினார். வருணன் குளிர்ந்த நீரைக் கொண்டு நீராட்டினான். அதற்கும் சரிவரவில்லை. சிவபெருமான் ஆதிசேடனைக்

கொண்டு ஒத்தணம் செய்தார். என்ன செய்தும் வெப்பு நீங்கவில்லை. பின்னர் எண்ணாயிரம் முனிவர்கள் ஒவ்வொருவரும் இருபத்தொரு அறுகை பெருமானின் உச்சம் தலை முதல் உள்ளங்கால் வரை நீரைக் கொண்டு சொரிந்தனர். அந்தக் கணமே வெப்பம் நீங்கியது. இதனால் அறுகு குண்டலியில் எழும் வெப்பத்தைத் தீர்க்க உதவியது. ஆனகார ணத்தினால் விநாயகரை வழிபடச் சிறந்த அர்ச்சனைப் பத்திரம் அறு காகும். விநாயகப் பெருமான் முனிவர்களைப் பார்த்து இனி எனக்குச் செய்யும் எந்தப் பூசையிலும் அறுகம் புற்கள் கலக்காவிடில் பலன் ஏதும் தராது என கூறியிருக்கிறார். அதிகமாக உபகாரம் செய்யாமல் அறுகம் புற்களைக் கொண்டு பூசை செய்தாலே போதுமானது. அதிக அளவில் புற்களை சேகரிக்க முடியாவிடில் இருபத்தொரு புற்களைக் கொண்டு அர்ச்சித்தாலே போதும் என்று அனுக்கிரகித்தார். தேவர்கள் மகிழ்ச்சி அடைந்து அறுகம் புல்லின் மகத்துவத்தை அறிந்து கொண்ட னர்.

## விநாயகர் விரும்பும் வன்னி இலை

வன்னி வெப்பம் தணிக்கும் மூலிகை. சூரிய காந்தக் கல்லோடு சூரிய வெப்பம் கலந்தவுடன் தீ வெளிப்படுவது போல வன்னிக் கட்டையினின்று நெருப்பு வெளிப்படுவதாலும், ஓமம் முதலிய நற்கா ரியங்களுக்கு பயன்படும். வன்னித்தழை விநாயகருக்கு உகந்ததா யிற்று. வன்னி நெருப்பு வடிவாதலின் நெருப்பினைச் சார்ந்த பொருட் கள் தூய்மையுறுதல் போல வன்னி மரத்தையும் இலையையும் தீண் டிய அன்பர்களுடைய பாவம் அகல வேண்டும் என்ற திருவுளக்குறிப் போடு விநாயகர் வன்னியடியில் எழுந்தருளியிருந்து வன்னித் தழை யைத் தமக்கு உகந்த அர்ச்சினைப் பொருளாக ஏற்றுக்கொள்ளகிறார்.

***

# அறுகம் புல்லின் அற்புதக் கதை

அவந்தி நகரத்தை சுலபன் என்னும் அரசன் தனது மனைவி சுபத் திரை என்பவளோடு நீதி நெறி பிறழாது ஆட்சி புரிந்து வரும்போது ஒருநாள் மதுசூதனன் என்னும் ஒரு அந்தணன் அரசனிடம் தர்மம் பெறுவதற்காக வந்தான். மதுசூதனனைக் கண்டதும் அவனது பரிதா பக் கோலத்தைப் பார்த்து அவனிடம் இரக்கம் கொள்வதற்கு மாறாக நகைப்புக்கு இடமாக தோன்றுகிறானேயெனச் சிரித்து விட்டான். அர சனது செயல் அந்தணனுக்கு சினத்தை மூட்டியது. அவன் ஈசுவரனி டம் மாருத பக்தி கொண்டவன். அவனின் வாயில் இருந்து வந்த வார்த்தைகள் வெந்தணல் போல் வெளிப்பட்டன.

''கல்வி அறிவற்ற கொற்றவனே என் தோற்றத்தைக் கண்டு நகைத் தாயே! இது உன் ராஜ நீதிக்கு ஏற்றதா சொல் ?நீ நகைத்தது எனது உள்ளத்தையும் உனது இலத்தையும் சுட்டுவிட்டது. எருதுபோல் ஏள னமாகச் சிரித்த நீ ஏரில் பூட்டும் எருதாய் மாறி புல்லைத்தின்று திரிவாயாக ''என்று கடுமையான சாபம் கொடுத்தான் மதுசூதனன். அரசனுக்கு ஏற்பட்ட சாபத்தைக் கேட்ட சுபத்திரை அளவில்லாத துயரம் கொண்டாள். அந்தணன் மீது கடும் கோபம் கொண்டான். ''அந்தணனே நீ தர்மம் தவறி விட்டாய், திருவெண்ணீற்றை அணிந்து சிவப்பழம்போல் தோன்றும் உன்னிடம் அத்திருத்தோற்றத்திற்குரிய இரக்கம் அறவே இல்லை. எவராக இருந்தாலும் அறிந்தோ அறியா மலோ ஒரு தவற்றைச் செய்தால் சான்றோர் அதனைப் பொறுப்பர். ஆனால் நீயோ என் கணவரை மன்னர் என்றும் பாராமல் மமதையால் அறிவற்ற கழுதைபோல் கத்தினாய், என் கணவரை சபித்தாய். அத னால் நீ கழுதையாக மாறி துணி மூட்டைகளை சுமக்கக் கடவாயாக ''என்று சபித்தாள். மதிசூதனனுக்கு கோபம் மேலும் அதிகரித்தது. அவன் அரசியையும் சபிக்கத் தவறவில்லை.''பெண்ணே குற்றம் உங் கள் பக்கம் இருக்க என்னைப் பார்த்துக் குமுறுகிறாய். கணவனின்

தவறுக்காக என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டிய நீ கழுதைபோல் என்னிடம் கத்தியதால் நீ புலைச்சியாகப் பிறந்து பொல்லாத்துயர் பட்டு நலிவாயாக ''இவ்வாறு கோபத்தின் விளைவால் ஒருவருக்கொருவர் எதிர் சாபமிட்டு பலித்துக் கொண்டன.

சுலபன் உழவனிடம் ஏர் பூட்டும் எருதானான். மதுசூதனன் கழுதையாகி வண்ணானிடம் சேர்ந்தான். சுபத்திரை புலைச்சியாக நகரத்தின் சேரியை அடைந்தாள். காலம் கடந்தது .ஒருநாள் உழவன் வயலை உழுத பின்பு மாட்டை அவிழ்த்து மேய விட்டான். அழுக்கு மூட்டைகளை சுமந்து வந்த கழுதையும் மூட்டைகளை அவ்விடத்தில் இறக்கிய பின் மேய்ந்து கொண்டிருந்தது. பக்கத்தில் புலைச்சியும் புல் அறுத்துக் கொண்டிருந்தாள். இத்தருணத்தில் திடீரென வானம் இருண்டு இடி மின்னலுடன் மழை பெய்யத் தொடங்கியது. இதனால் எருது பக்கத்தில் உள்ள விநாயகர் ஆலயத்துள் நுழைந்தது. கழுதையும் விநாயகப் பெருமான் ஆலயத்துள் புகுந்தது. புலைச்சியும் புல்லுக்கட்டை எடுத்துக் கொண்டு வேகமாகக் கோயிலுக்குள் நுழைந்து கொண்டாள். மழையும் விடாது பெய்தது. நேரமும் மாலையாகி விட்டது. எருதுக்கும், கழுதைக்கும் பசி ஏற்பட்டது. பக்கத்திலிருந்த புலைச்சியின் புல்லைக் கண்டு அதை மெதுவாக சாப்பிடத் தொடங்கின. இதைக் கவனித்த புலைச்சிக்கு கோபம் வந்தது. பக்கத்தில் கிடந்த ஒரு தடியை எடுத்து கழுதைக்கு அடித்தாள். வலி பொறுக்க மாட்டாத கழுதை எருதைத் தன்காலால் உதைத்தது. பின் எருதிற்கு கோபம் வந்தது. கழுதையை கொம்பினால் முட்டியது.

அந்தச் சமயத்தில் உள்ளே விநாயகப் பெருமானுக்கு மாலை நேரப் பூசை செய்து கொண்டிருந்தவர்கள் வெளியில் கலவரப்படுகிறவர்களை அகற்றுவதற்கு தடியோடு வந்து எருதையும் கழுதையையும் அடித்து அகற்றினர். மழை பயங்கரமாக பெய்து கொண்டிருந்தது. புலைச்சியும் அடிக்குப் பயந்து அவைகளின் பின்னே ஓடினாள். கழு

தையும் எருதும் சுற்றி வந்த சமயம் எருது,கழுதை இவற்றின் வாயில் இருந்த அறுகம் புல்லு பகவான் திருமுன் போய் விழுந்தது. அது போலவே புலைச்சியின் கையில் இருந்த அறுகம் புல்லும் பகவான் முன்னே போய் விழுந்தது. திருமுன் போய் விழுந்த புற்கள் காற்றில் அடித்துக் கொண்டு கற்பக்கிரகத்துள் எழுந்தருளியிருக்கும் விநாயகப் பெருமானின் திருமுடி மீதும், துதிக்கை மீதும், திருவடி மீதும் வந்து தங்கின. இதைக் கண்ட முனிவர் ஏதோ தகாத காரியம் நடைபெற்று விட்டது என்று எண்ணி அவற்றை அகற்றி விட்டு திருமஞ்சனம் ஆட்டி நறுமலர்கள் சூட்டி வழிபாட்டைத் தொடங்கினார். கழுதையும் எருதும் புலைச்சியும் விடியும் வரை பெய்த மழையின் குளிராலும், அடியின் கொடுமையினாலும் உடல் குன்றி உயிர் துறந்தன. அன்றைய தினம் சதுர்த்தி தினமாதலால் கழுதையும், எருதும், புலைச்சியும் பட்டினி கிடந்து உயிர் நீத்தலும், மூவரிடமும் இருந்து வீழ்ந்த அறுகம் புல் பெருமானின் திருமேனியை அர்ச்சிப்பது போல் வீழ்ந்ததாலும் விநாயகப் பெருமான் அம்மூவரது செயல்களையும் தமக்கு உகந்த ஆராதனையாக ஏற்றுக்கொண்டார். அம்மூவரையும் தமது லோகத்திற்கு அழைத்து தெய்வ விமானத்தில் ஏற்றி வருமாறு கட்டளையிட்டார். இவ்வதிசியத்தைக் கண்ணுற்ற முனிசிரேட்டர்கள் ''நியம், நிஷ்டை என்பது தெரியாதவர்களுக்கு இந்தப் பாக்கியம் எப்படி கிடைத்தது ''என வினவ அதற்கு பூதகணத்தவர்கள் தவசியர்களே. எமது விநாயகப் பெருமானை இம்மூவரும் நேற்றைய சதுர்த்தியில் வழிபட்டு உபசரித்தவர்கள் அதனால்தான் இப்பேறு பெற்றனர்.அந்தணர்கள் அறுகம்புல்லின் மகிமையை எண்ணி அதிசயித்தனர்.

❖ ❖ ❖

# ஒரு அறுகம் புல்லின் மகிமை

மிதிலாபுரியில் ஆட்சி புரிந்த ஜனகராஜன் என்னும் அரசன், பக வான் வேறு, தான் வேறு என்ற பேதமில்லை. எல்லாம் ஒன்றே என்ற வழியைக் கடைபிடித்து வந்த கர்வத்தினால் பெரியோர்கள் எவரை யும் கனம் பண்ணாதிருந்தான். இவனுக்கு ஏற்ற புத்தியை புகட்ட வேண்டுமென்று எண்ணங் கொண்ட நாரத முனிவர் அவனிடம் சென்று 'அரசே பகவானுடைய அனுக்கிரகத்தால் சகல சம்பத்துகளும் உன்னை அடைந்துள்ளன. உன்னை நம்பி வருபவர்களுக்கு இல்லை என்று சொல்லாது கொடுத்து வருகிறாய். பகவானுடைய அனுக்கிரகத் தால் மேலும் பெருகட்டும்' என்றார்.

நாரதரின் பாராட்டைக் கேட்ட அரசன் 'முனிவரே தங்கள் வார்தைக ளைக் கேட்க ஆச்சரியமாக இருக்கிறது. பகவான் வேறு நாம் வேறு என்று ஏன் பேதம் கொள்ளுகிறீர்கள்?. கொடுப்பவனும் அவனே பெறுபவனும் அவனே' என்றான். நாரதர் அதற்கு 'மன்னவா! அழி யாப் பரம் பொருள் வேறில்லையென்று நீ பேசுகிருய். உன் எதிரி லேயே பகவான் வேறு என்பதைக் காட்டுகிறேன் அப்பொழுது நீ உணர்ந்து கொள்' என்று கூறிவிட்டு கௌண்டிய முனிவரிடம் சென் ருர். நாரத முனிவரால் பூசிக்கப்பட்டு வரும் விநாயகரிடம் சென்று யாழை மீட்டிப்பாடி ஜனகராஜனின் நடத்தை பற்றி எடுத்துக் கூறினார். 'தங்களுடைய கருணா கடாச்சத்தால் சகல சம்பத்துக்களையும் பெற்று கீர்த்தியோடு இருந்து வருகிருன். ஆயினும் அவை தங்கள் அனுக்கிர கத்தால் பெற்றவை என்பதை உணராது தெய்வம் வேறு தான்வேறு என்ற பேதமின்றி எல்லாம் தானே என்ற நினைப்பில் இருந்து வருகி ருன். அதனால் அவன் வணங்கத் தக்கவர்களுக்குரிய மரியாதையைக் கொடுப்பதில்லை. அவன் கடைப்பிடிக்கும் வழி தவறு என்பதைக் காட்ட வேண்டும்' என்று வேண்டினார்.

விநாயகப் பெருமானும் நாரதரின் வேண்டு கோளுக்கிணங்க ஜனக ராஜனுடைய கர்வத்தை அடக்குவதற்கு எண்ணம் கொண்டு நோய் நிறைந்து அவதியுறும் ஒரு அந்தண வடிவம் கொண்டு அரசனிடம் யாசிக்கச் சென்றார். அந்தணனின் கோலத்தைக் கண்ட அரசன் மனம் இரங்கியவன் போல் 'உனக்கு என்ன வேண்டும் சொல். இப்பொழுதே கொடுக்கச் சொல்கிறேன்' என்றான். அந்தணர் உருவில் இருந்த விநா யகர் அதற்கு 'அரசே எனக்கு இப்போது பொன்னும் மணியும் தேவை யில்லை. பசி பொறுக்க முடியவில்லை . என் பசியைப் போக்க ஆகாரம் கொடுத்தால் போதும்' என்றார். அதைக் கேட்ட அரசன் அந்தணரை உள்ளே அழைத்துச் சென்று ஆகாரம் அழிக்குமாறு கட் டளை இட்டான். அந்தணரும் அமர்ந்திருந்து இலையில் வைத்த ஆகா ரப் பதார்த்தங்கள் அனைத்தையும் ஒரே கபளமாகப் பிடித்துச் சாப்பிட் டார். ஏவலாளர்கள் உள்ளே இருந்த சாப்பாட்டு வகைகளை கொண்டு வரவர சாப்பிட்ட வண்ணமே இருந்தார். 'சீக்கிரம் கொண்டு வாருங் கள் பசி பொறுக்க முடியவில்லை' என மேலும் சொன்னார். உள்ளே இருந்த உணவுப் பதார்த்தங்கள் முழுவதும் முடிவடைந்தன. ஆனா லும் அந்தணரோ இலையை விட்டு எழுந்திருக்கவில்லை.

அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை, அரசனிடம் சென்று முறை யிட்டனர். அரசன் அவரிடம் வந்தான். அரசனைக் கண்டதும் அந்த ணர். 'ராஜன் ஏன் தாமதம். பசி பொறுக்கவில்லை. ஏதும் எடுத்து வரச்சொல்லுங்கள்' என்றார். பின்னர் களஞ்சியங்கள் திறக்கப்பட்டு எல்லா உணவுப் பண்டங்களும் முடிவடைந்து விட்டன. அதிலும் பசி அடங்கவில்லை. அரசன் ஆச்சரியத்துடன் அந்தணரை நோக்கி 'சு வாமி நோயால் மெலிந்து பசி கொண்டிருந்த தங்களுக்கு ஆகாரம் கொடுக்க சம்மதித்தேன். தங்களுக்கு ஏற்பட்டிருப்பது பசி அல்ல. எனது நாட்டிலுள்ள அனைத்தும் தாங்கள் சாப்பிட்டாகிவிட்டது. இனி என்னிடம் எதுவுமில்லை. தங்களுடைய பசியைத் தீர்க்கக் கூடியவர்க ளிடம் நீங்கள் செல்லலாம்' என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட அந்தணராக இருந்த பகவான் கலகல வென சிரித்து 'நன்ருய் இருக்கிறதே அரசே உன்வார்த்தைகள். என் பசியைப் போக்க வேண்டிய நீ அற்ப ஆகாரத்தைக் கொடுத்து என் பசியைப் பன்மடங்காக அதிகரிக்கச் செய்து விட்டாய். இன்னும் வேறு இடத்துக்குச் செல்லுமாறும் கூறுகின்ருய். பகவான் வேறு, தான் வேறு என்ற பேதமே கிடையாது என்று பேசுகிருய். அப்படியானால் நீயும் பகவான். நானும் பகவான். எனக்கு ஏற்பட்டுள்ள பசியைப் போக்க ஏன் சக்தி இல்லாது போய்விட்டது' என்றார். 'இந்தச் சிறுவிடயத்தை செய்து முடிக்கும் சக்தி உனக்கு இல்லாவிடில் நீயும், பகவானும் எவ்விதம் சமமாகி விடமுடியும் . இனிமேற் கொண்டு உன்னுடைய அர்த்தமற்ற கொள்கையை விட்டு விடு' என்று கூறி அங்கிருந்து திரிசரன் என்னும் ஏழைப்பிராமணன் வீட்டுக்குச் சென்ருர். அவனும் அவன் மனைவி விரோசனையும் விநாயகப் பெருமானிடம் அள வற்ற பக்தி கொண்டவர்களாக சதாகாலமும் அவரது தியானத்திலும் ஆராதனையிலும் ஈடுபட்டுக் காலம் கடத்தி வந்தார்கள்.

பசியால் மெலிந்திருந்த பிராமணனைக் கண்டதும் திரிசரனும் மனைவி விரோசனையும் அவரது பாதங்களில் வீழ்ந்து பணிந்து நின்ருர்கள். அந்தணர் வடிவில் வந்த விநாயகப் பெருமான் முன்ன டந்த வரலாற்றைக் கூறி அப்பசி இன்னும் தீரவில்லை. அதைப் போக் கிக் கொள்ளவே இங்கு வந்தேன் என்ருர். அதைக் கேட்ட விரோசனை யின் கண்கள் நீர் சொரிய எப்படிப்பட்ட சகல ஐஸ்வரியங்களையும் உடைய அரசனாலேயே தங்கள் பசியைத் தீர்க்க முடியாவிடில் யாசித் துக் காலத்தைக் கடத்தும் எங்களால் ஆகக் கூடியதா? யாசித்தவற்றை யும் நேற்றுடன் முடித்துவிட்டோம். இன்றுகாலை எதுவுமில்லாமல் எங்கள் விநாயகப் பெருமானைப் பூசித்துக் கொண்டிருக்கின்ருேம். பூசைக்குக் கொண்டுவந்த அறுகம் புல்லில் ஒன்று மட்டுமே எஞ்சி இருக்கின்றது என்று வேதனையால் நெஞ்சம் துடிக்கச் சொன்னாள்.

அதைக் கேட்ட விநாயகரும் பெரிதும் மகிழ்ந்து 'அம்மணி எப்பெயர்பட்ட செல்வந்தர்களாயினும் மனப்பூர்வமாக விருப்பமில்லாது கொடுக்கப்படும் எந்தப் பொருள்களும் அதன் பலனை நிறையவேற்றுவதில்லை. அதேசமயம் ஏழை எழியோராயினும் அவர்கள் மனப்பூர்வமாகக் கொடுக்கும் அற்பமான பொருட்கள் கூட மிகச்சிறந்த பலனைத் தருகின்றன. என் பசியைப் போக்கத்தக்க உணவு இல்லையே என்று வருந்தத் தேவையில்லை அதைமனதில் உணர்ந்தீர்களே அதுவே போதும் . தாங்கள் குறிப்பிட்ட அந்த அறுகம்புல்லைக் கொண்டு வாருங்கள்' என்றார்.

விரோசனையும் மெய்யன்போடு அதைக் கொண்டு வந்துகொடுக்க அதைப் பெற்று வாயில் போட்டு விழுங்கினார் விநாயகர். அந்தக் கணமே அவரது பசி அடங்கியது. மேலும் வறிய நிலையிலிருந்த திரிசரனின் வீடு மாடமாளிகையாகி எங்கும் குவிந்தது. அவ்வாறே ஜனகராஜனின் அரண்மனையிலும் மீண்டும் நிரம்பியது. வறுமை என்பது அந்த நகரத்திலிருந்தே ஒழிந்தது.

ஜனகராஜனும் தனது தவறை உணர்ந்து திரிசரனின் வீட்டுக்கு வந்து பிறவாப் பேரின்பத்தை அடையும் மார்க்கத்தை உபதேசித்தருள வேண்டுமென வேண்டி நின்றான். திரிசரனும் மனைவியும் விநாயகப் பெருமானிடம் எங்களுக்கு வேண்டுவதெல்லாம் தங்கள் திருவடிகளில் சேரவேண்டுமென்பதே. அதற்கிணங்க அவர்களுடைய அந்திம காலத்தில் அவ்வாறே தம் திருவடிகளில் இருவரும் வந்துசேருவர் என்று அருளினார் விநாயகர்.

***

# வன்னி இலையின் மகத்துவம்

ஆதேயம் என்னும் நகரத்தில் வீமன் என்னும் பெயருடைய கொடியவன் ஒருவன் வாழ்ந்து வந்தான். வழிப்போக்கர்களை வழி மறித்து பொன்னும் பொருளும் அபகரித்தும் இம்சித்தும் வந்தான்.

அவ்வூரில் சிவன் கோயில் ஒன்று இருந்தது. ஒரு முறை சில அந்தணர்கள் அக்கோயில் திருவிழாவைக் கண்டு கழித்துவிட்டு மன மகிழ்ச்சியோடு திரும்பிக் கொண்டிருக்கும் போது, வீமன் அவர்களை வழிமறித்து துன்புறுத்தி அவர்களைக் கொன்று அவர்களிடமிருந்த பொருட்களையெல்லாம் கொள்ளையடித்தான். இதன் காரணத்தால் வீமனை பிரம்பகத்தி தோஷம் பிடித்துக் கொண்டது. அதன் பயனாக அவன் செய்த பாவங்களெல்லாம் ஒன்று திரண்டு ஒரு கொடிய அரக்கனாக அவன் முன்னே வந்து நின்றது. அந்த அரக்கன் வீமனைப் பார்த்து சிங்கம் போல் கர்ச்சித்தான். வீமன் அஞ்சி நடுங்கினான் செய்வதறியாது திகைத்தான். பின்னர் பயத்தால் ஓடத்தொடங்க அரக்கனும் பின் தொடர்ந்தான். வீமன் ஓடிச் சென்று ஒரு வன்னி மரத்தில் ஏறினான். பின் தொடர்ந்த அரக்கனும் அதே வன்னி மரத்தில் ஏறினான். வீமன் மரத்தின் மீது ஏறிய காரணத்தால் வன்னி இலையொன்று கீழே இருந்த விநாயகப் பெருமானின் விக்கிரகத்தின் மீது வீழ்ந்தது. அரக்கனும் தொடர்ந்து அவ்வாறே அவசரமாக அம்மரத்தில் ஏறிய போது அவனது கைபட்டு வன்னி மரத்தின் இலையொன்று கீழே இருந்த விநாயகப் பெருமான் விக்கரகத்தின் மீது வீழ்ந்தது.

மரத்தின் மீது ஏறிய வீமனுக்கும் அரக்கனுக்கும் பெரும் சண்டை ஏற்பட்டது. இருவரும் மரத்தின் மீது இருந்தவாறு அதன் இலைகளையும் கிளைகளையும் ஒடித்துக் கொள்ளலாயினர். இதனால் இலைகள் அனைத்தும் உதிர்ந்து விநாயகர் மீது வீழ்ந்த வண்ணமாகவே இருந்

தன. இருவரும் விடாது சண்டையிட்டுக் கட்டிப் புரண்டு கொண்டு மரத்தில் இருந்து கீழேவிழுந்து உயிரைத் துறந்தனர்.

அவர்களால் உதிர்த்து விழுத்தப்பட்ட வன்னி இலைகளை விநாயகப் பெருமான் தமக்கு உகந்த ஆராதனையாக ஏற்றுக் கொண்டார். அவர்கள் இருவரும் எண்ணற்ற தீவினைகளைச் செய்திருந்த போதும் வன்னி மரத்து விநாயகரின் திருவருளால் தீவினை நீங்கி தெய்வ உடல் பெற்று எழுந்தனர்.

மேலும் பல புராணக்கதைகள் வன்னி இலையின் மகிமைகளைக் கூறுகின்றன. மகாவிஷ்ணு இரணிகசிபு என்னும் அசுரனை வதைப்பது எங்ஙனம் என்று தெரியாதவராய் வன்னி மரத்திடியில் விநாயகப் பெருமானை பிரதிஷ்டை செய்து அவரை விதிப்படி ஆராதித்து வரவே ஆனைமுகனும் அவருக்குத் தோற்றம் அளித்து இரணிய கசிபனை ஒழிக்கத்தக்க உபாயத்தைக் கூறியருளினார். இதன் பயனாகவே விஷ்ணுவும் அவரைப் பணிந்து அவர் ஆசி பெற்று இரணியகசிபுவை நரசிம்ம அவதாரம் எடுத்துக் கொன்றார். அதன்பின் ஆட்சிக்கு வந்த இரணியாக்ஷனையும் வராக அவதாரம் எடுத்து வதம் செய்தார்.

* * *

**மூதுரை**

வாக்குண்டா நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோககுண்டா மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதந்
தப்பாமற் சார்வார் தமக்கு

# விநாயகப் பெருமானின் மகிமைகள்

## 1. விநாயகரின் தோற்றத்தை அடைந்த புருசுண்டி முனிவர்

தண்டக வனத்தில் விப்பிரவன் என்னும் வேடன் வழிப்பறிக்கொள்ளையில் ஈடுப்ட்டிருந்தான். ஒரு நாள் அவ்வழியே அதிவல்லமை மிக்க முக்கல முனிவர் வந்தார். வழமைபோல விப்பிரவன் தன் வாளை உருவிக்கொண்டு முனிவர் முன் வந்தான். முனிவரோ எது வித பதட்டமுமடையாமல் அவன் மீது அருள் நோக்கம் செய்தார். உடனே விப்பிரவனின் மனோநிலை முழுமையாகமாறி மனம் தெளிவடைந்தான். உடனே முக்கல முனிவரைப் பணிந்து தான் செய்த பிழைகளைப் பொறுத்தருள வேண்டும் என வேண்டியதோடு, தான் உய்யும் மார்க்கத்தையும் சொல்லியருள வேண்டுமென வேண்ட, அவர் வேடன் முன் ஒரு காய்ந்த கொம்பை நட்டார். வேடனை நோக்கி அன்பனே இக்கொம்பிற்கு நீ ஒவ்வொருநாளும் நீர் ஊற்றி ''ஓம் கணேசபதியே நம'' என்ற மந்திரத்தை உச்சரித்து வர அது துளிர் விட்டு வளரும். பின்னர் நீ உலகம் சிறக்க உய்வாய் என கூறினுர். வேடன் செய்தான். முக்கல முனிவர் வந்து பார்த்து பெருமிதம் கொண்டார். தனது கமண்டலத்தில் இருந்த புனித நீரை அவன் மேல் சொரிந்தார். உடனே புருவத்தில் இருந்து ஒரு நீண்டதுதிக்கை தோன்றியது. அவ்வாறே விநாயகரை முழுமனதோடு நினைத்து தவம் செய்தபடியால் விநாயகர் உருவத்ததைப் பெற்றார்.

## 2. கிரௌஞ்சனை ஆட்கொண்ட விநாயகர்

சௌபரி முனிவர் சிவபக்தர். மனைவி மனோமயை ஒரு நாள் சௌபரி முனிவரின் மனைவி தனிமையில் இருந்த பொழுது விண்ணுலகில் வந்த கிரௌஞ்சன் என்னும் கந்தருபன் மனோமயையின் அழ

கில் மயங்கி, அம்முனி பத்தினியின் கையைப் பற்றி இழுத்தான். முனிபத்தினி அவனுக்கெதிராக சீறியெழுந்த சமயம் நீராடச் சென்றிருந்த சௌபரி முனிவரும் வந்தார். முனிவர் 'முக்கனே முனிபத்தினி என்று அறிந்தும் செய்த குற்றத்திற்கு நீ மண் பறித்து வளையில் மறையும் பெருச்சாளியாகக் கடவாய்' எனச் சாபமிட்டார். கந்தரூபன் கிரௌஞ்சன் அஞ்சினுன். 'மன்னித்து சாபத்தைப் போக்கி அருள் செய்யுங்கள்' என்று மன முருக வேண்டினுன். கந்தரூபன் முனிவரிடம் மன்னிப்புக் கேட்டதால் அவர் அதற்கு இரங்கி,'பார்க்கவ முனிவர் கிருகத்தில் அவதரிப்பார். அச்சமயம் ஐயனுக்கு நீ வாகனமாகி அவரைத் தாங்கி வலம் வருவாய். முடிவில் முத்தியும் அடைவாய்' என்ருர்.

## 3. அரக்கன் துராசனை அழித்த விநாயகர்

பிரமாசுரன் என்ற அசுரன் சிவபெருமானை வேண்டி தவமிருந்தான். சிவபெருமான் 'என்ன வரம் வேண்டும்' என்று அவனைக் கேட்க அவன் 'சர்வேஸ்வரா எனது கையை எவர் சிரசின் மீது வைத்தாலும் அவர்கள் வெந்து சாம்பலாக வேண்டும்' என்னும் வரத்தினைப் பெற்ருன். வரத்தைப் பெற்ற பிரமாசுரன் சர்வேஸ்வரன் திருமுடி மீதே கையை வைத்துப் பார்க்க முயன்ருன். சிவபெருமான் அவன் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தார். இவனை எப்படியாவது அழித்துவிட வேண்டுமென்று எண்ணிய திருமால் ஓர் அழகிய மோகினியாக உருக்கொண்டு அசுரன் முன் சென்ருர். மோகினியின் பால் மோகம் கொண்ட அசுரன் மதிமயங்கி மோகினி செய்வது போல் செய்யுமாறு வேண்ட அவனும் அதற்கு இசைந்தான். மோகினி தன் தலையிற் கையை வைத்தாள். அதுபோல் அசுரனும் தலைமேற் கையை வைத்தான். அதே சமயம் அசுரன் அக்கினியில் வெந்து சாம்பலானான்.

இதனை அறிந்த மகன் துராசதன் அரச குருவான சுக்கிரனின் ஆலோசனையின் பிரகாரம் சிவபெருமானை நோக்கித் தவமிருந்து மிகவும் அரிய வரங்களைப் பெற்ருன். அதன் பயனுக துராசதன் எல்லாத் தேவர்களையும் துன்புறுத்த முயன்ருன். தேவர்கள் விநாயகப் பெருமானிடம் வேண்ட, அவர் பிரமனின் அனுசரணையுடன் தேவர்களின் இன்னல்களைத் தீர்க்க திருவுள்ளம் கொண்டார். விநாயகப் பெருமான் ஐம்பத்தாறு வடிவங்கொண்டு துராசதனுடைய படைகளை அழித்தார். இறுதியாக உருத்திராத்திரம் விட்டு துராசனை அழித்தார்.

## 4. இரணிய கசிபனை வதைக்க திருமாலுக்கு அருளிய விநாயகர்

காசிப முனிவரின் மனைவியர் இருவர். அதிதி, திதி. திதி கருவுற்று இரணியகசிபன், இரணியாக்கதன் என்ற புதல்வர்களைப் பெற்றாள். இரணியகசிபன் சிவபெருமானை நினைந்து தவமிருந்து அதன் பயனாய் பலவகையான ஆயுதங்களைப் பெற்றதுடன் மண் - விண், இரவு - பகல், உயர்திணை - அஃறிணை, உள்ளும் புறமும் படைக்கருவிகளினுலும் இறப்பு இல்லாமலும் தனது இரத்தம் நிலத்தில் விழுந்தால் அதிலிருந்து தன்னைப் போன்று பல உருவம் எழக்கூடியது போன்ற பல அரிய வரங்களைப் பெற்ருன்.

திருமாலையும் கொல்ல எண்ணம் கொண்ட இரணியக்கதனை அழித்து விட திருமால் சித்தம் கொண்டார், விநாயகப் பெருமானை திருமால் வேண்ட அதற்கு மனமிரங்கிய விநாயகப் பெருமான் 'படைக்கலம் இல்லாத நகத்தினுல் பீறிப் பிளந்து அவனது ரத்தம் நிலத்தில் விழாதபடி அவரது உயிரை மாய்த்துவிடும் படியான பேராற்றலை உனக்கு அருளினேம்' என்று கூறி மறைந்தார். அதன் பிரகாரம்

திருமால் மனித மடங்களில் வடிவமேற்று இரணியகசிபனையும் வரா க வடிவமெடுத்து இரணியாக்கதனையும் வதைத்து அழித்தார்.

## 5. விநாயகரிடம் வரம் பெற்ற கிரச்சமதர்

மன்னன் உருக்கு மாங்கதன் மக்களின் வேண்டுகோளின் பிரகாரம் வனவிலங்குகளை வேட்டையாடச் சென்ற சமயம் தாகமுற்றுநீர் இருக்கும் இடமான கவி மகா முனிவரது ஆச்சிரமத்தை அடைந்த போது அங்கே முனிவரது மனைவி முகுந்தை மட்டும் தனித்திருந்தாள். முகுந்தை உடனே அவன் மீது காமம் கொண்டு தனக்கு இன்பமூட்ட வேண்டினள். உருக்குமாங்கதன் மறுக்கவே 'வெப்புநோய் பெறுவாயாக' எனச் சாபமிட்டாள். உருக்குமாங்கதனையே தினமும் நினைத்துக் கொண்டிருந்தாள் முகுந்தை. தேவேந்திரன் இதனையறிந்து அவனைப் போன்று உருக்கொண்டு அவளோடு இன்பமுற்றான். சில நாள் சென்ற பின் முகுந்தை கருவுற்று அழகான மகன் ஒருவனைப் பெற்றாள். கிரச்சமதர் எனப்பெயரிட்டனர். கிரச்சமதர் பலகலைகளை கற்று வல்லுனரானார். ஒரு கட்டத்தில் கலைகளைப்பற்றிய சொற்போரில் கத்திரி 'நீ எப்படிப் பேசினாலும் உன் பிறவியைப் பார்த்தால் நகைப்புக்கிடமாக உள்ளது' என்றான். இதனைக் கேள்வியுற்ற கிரச்சமதர் உடனே தாயிடம் சென்று வினாவ தாயோ நடந்ததைக் கூற மகனே மேலும் கவலை கொண்டு இருக்கும் போது ஒரு அசரீரீ 'நீ இந்திரன் மகன்' என்று கூறியது. அதில் இருந்து ஒருவாறு தன்னைத்தேற்றிக் கொண்டான். கிரச்சமதர் வேறு ஒரு காட்டை அடைந்து விநாயகரை நினைத்து ஐம்புலன்களையும் அடக்கி தவமிருந்து வரம் பெற்று மிக மகிழ்ந்தார்.

பின்னர் கிரச்சமதர் விநாயகப் பெருமானுக்கு கோயில் எழுப்பி விநாயகரைப் பிரட்டித்து வரத கணபதி என்னும் திருநாமம் இட்டு வழிபட்டார்.

* * *

# விநாயகப் பெருமானின் விசுவரூபம்

ஒரு சமயம் மகா பிரளயத்தின் போது பன்னிரண்டு சூரியர்களும் ஒன்றாகச் சேர்ந்து ஏககாலத்தில் உதித்தனர். பிரபஞ்சம் அனைத்தும் அனற்பிழம்பானது. எங்கும் மழையில்லை. நீர் நிலைகள் வற்றி பசுமை என்பதே காணமுடியாததாகிவிட்டது. இந்தப் பூமண்டலத்தை தாங்கிக் கொண்டிருந்த ஆதிசேடனும் அந்த உஸ்ணத்தை பொறுக்க முடியவில்லை. வேதனையின் காரணத்தால் அவரது ஆயிரம் முகங்களிலிருந்தும் விஷாக்கினி பீறிட்டு வெளிப்பட்டது.

பூ மண்டலத்து ஜீவராசிகள் உஸ்ணத்தை தாங்க முடியாது தவிக்கும் வேளையில் விஷாக்கினியும் கலந்து கொள்ளவே அடியோடு அழிந்து போயின. அதன் உக்கிரத்தில் பன்னிரு சூரியர்களும் பஸ்மமாயினர். முடிவில் ஆதிசேடனும் அக்கினியில் மறைந்து போனன். அண்டசராசரங்கள் அனைத்தும் அழிந்தன.

பஸ்பங்களிலிருந்து உண்டான மேகக் கூட்டங்கள் நூறுவருடத்திற்கு தாரை, தாரையாக நீரை வர்ஷித்தன. தொடர்ந்து விடாது பெய்ததால் எங்கும் ஒரே ஜலப்பிரவாகம். சப்தலோகங்களும் அழிந்தன. இந்திரன் முதலான தேவர்கள் மறைந்தனர். பிரம்மா, விஸ்ணு, உருத்திரன் ஆகிய மூவரும் தங்களுக்குள் ஐக்கியமாகினர். நீரும், நெருப்பும் கலந்தன. அதனுல் வடமுகாக்கினி தோன்றிற்று. தோன்றிய வடமுகாக்கினி வெள்ளத்தை உட்கொண்டது. வடமுகாக்கினி பிரசண்ட வாயுவினில் ஒடுங்கியது . அப்பிரசண்ட வாயு ஆகாயத்தில் அடங்கியது. ஆகாயம் ஆத்மாவில் கலந்தது. ஆத்மாவோ பிரம்மாவில் ஒடுங்கியது. பிரம்மா விஷ்ணுவில் ஒடுங்கி, விஷ்ணு உருத்திரனில் ஒடுங்கி, உருத்திரன் மகேஸ்வரனில் அடங்கி, மகேஸ்வரன் சதாசிவத்தில் ஒடுங்கி, சதாசிவம் விந்துவில் அடங்கி, பின்னர் விந்து நாதனிலும்,

நாதன் சக்தியிலும், சக்தி சிவசக்தியிலும், சிவம் பரத்திலும், பரம் பராபரத்திலும் அடங்கி ஒடுங்கியது.

இவ்வாறாக ஒன்றுள் ஒன்று அடங்கி ஒடுங்கியது. முடிவில் பரப்பிரம்ம சொரூபமாக விளங்கி நிற்கும் ஆதிபரம் பொருளான விநாயகப் பெருமான் வக்கிர துண்டராகத் தோன்றினார். பிரளயத்தால் அழிந்து போன அண்டசராசரங்களை மீண்டும் உண்டாக்க எண்ணினர். பின்னர் மும் மூர்த்திகளையும் தோற்றுவித்தார். வக்கிரதுண்டரால் தோற்றுவிக்கப்பட்ட மும் மூர்த்திகளையும் தங்களைப் படைத்த பரம்பொருளை அறிய விரும்பி ஆயிரம் வருடங்கள் கடும் தவம் புரிந்தனர். அதன் முடிவில் விநாயகர் அவர்களுக்கு காட்சிகொடுத்தார்.

அவர்கள் தவத்திற்கு உளம் கனிந்த பரப்பிரம்ம சொரூபியான யானை முகப் பெருமானுர் கோடி சூரிய பிரகாசத்தோடு கூடிய ஒளிப்பிளம்பாக, அவர்கள் முன்னே எழுந்தருளினர். மும் மூர்த்திகளும் யானை முகப்பெருமானின் அருள் வடிவை நோக்கினர். ஒளிவிடும் திருமுடியிலே நவரத்தின கிரீடம், திரு நெற்றியிலே தூய திலகம், சகல லோகங்களையும் நொடிப் பொழுதில் சாம்பலாக்கும் நெற்றிக் கண், பொன்னான மேனிதனிலே களப சந்தனமும், நவரத்தின மணி மிக்க, அணி ஆபரணங்கள், சந்திரகாரம், நீண்ட துதிக்கை, நான்கு திருக்கரங்களிலும் கத்தி, கேடயம், வேல், வில் போன்ற படைக்கலன்கள் பங்கஜமலர் போன்ற மெல்லிய திருத்தாள்கள். இத்தகைய அழகிய திருத்தோற்றப் பொலிவோடு காட்சி அளித்த விநாயகப் பெருமானைக் கண்ட மும் மூர்த்திகளும் பக்தி பெருக அருள் தாக்க, ஆனந்தம் பொங்க, முழுமுதற் பரம்பொருளின் திருவடிகளைப் போற்றி பணிந்து நின்றனர்.

தேவதேவ நாங்கள் இப்போதுதான் கிருதார்த்தர்களாகினோம். எங்களைப் படைப்பித்த நோக்கம் என்ன? எக்காலமும் தங்களிடம் குன்தாத பக்தி இருக்கவும் தங்கள் சேவையே என்றென்றும் நிலைத்திருக்க

அருள் புரிய வேண்டும், என்று பிரார்த்தித்தனர்.

சோதிவடிவான வேழமுகப் பெருமானுர் மும் மூர்த்திகளுக்கும் அருள் புரியத்திருவுள்ளம் கொண்டார். முக்குண சொரூபிகளே உங்க ளது அரியதவம் எம்மை ஆட்கொண்டுவிட்டது. கேட்கும் வரம் தந்த ருளயாம் சித்தமாய் உள்ளோம் என்று திருவாய் மலர்ந்தருளினுர். விநாயகர் அகமும் முகமும் மலர மும்மூர்த்திகளை நோக்கி ''எனது இரஜச குணத்தில் தோன்றிய நான் முகனே! நீ வேதாகம புராணங்க ளைக் கொண்டு படைத்தல் தொழிலைப் புரிவாயாக'' என்ருர்.

ஸ்ரீமத் நாராயணனைப் பார்த்து ''எனது தாமசகுணத்தில் தோன்றிய நத்திரா நீயோ அழிக்கும் சங்காரத் தொழிலை மேற் கொள்வாயாக'' என்றும் ஆணையிட்டருளி முறையே மும்மூத்திகளையும் ஆக்கல், காத்தல், அழித்தல் தொழிலுக்கும் அதிபதியாக்கினார்.

அப்போது பிரம்ம தேவன் அவரை வணங்கி ''கருணை மூர்த்தியே சகல புவனங்களையும் ஜீவராசிகளையும் அண்டசராசரங்களையும் படைக்கும்படி எமக்கு அருளினீர்கள். அதை நான் எவ்வாறு செய்து முடிப்பது என்பதனைக் காட்டி அருள வேண்டும்'' என வேண்டினுர்.

''சதுர்முகா என்னுள் சகலதும் அடக்கம் என்ற உண்மையைக் காட்டுகி றேன். அவ்வுண்மையை உணர்ந்து படைக்கும் தொழிலைப் புரிவாயா க'' என்ற கூறி தமது துதிக்கையால் பிரம்மதேவனை வாயில் போட்டு விழுங்கினுர். அருகில் நின்றிருந்த விஷ்ணு உருத்திரா ஆகிய இருவ ரும் தங்களுக்கும் அப்பாக்கியம் கிடைக்க வேண்டுமென்று பிரார்த் திக்க அவர்களையும் எடுத்து விழுங்கினார்.

வக்கிரதுண்டரின் திரு வயிற்றினுள்ளே சென்ற மும்மூர்த்திகளும் அங்கே பிரமிக்கத்தக்க காட்சியைக் கண்டனர். அண்டசராசரங்கள் அனைத்தும் சகல ஜீவராசிகளோடு அங்கு இயங்குவதைப் பார்த்தனர்.

ஈரேழுலோகங்களும் அவரது உதரத்திலே அடக்கமாகி இருந்தன. படைத்தல், காத்தல், அழித்தல் எனப்படும் மூவகைத் தொழில்களை நிர்வகிக்கும் மும்மூர்த்திகளையும் அங்கே கண்டனர். கைலையங்கிரியில் தேவகணங்களோடு வீற்றிருக்கும் பரமேஸ்வரன், பாற்கடலில், பள்ளி கொள்ளும் பரந்தாமன் இந்திரன் முதலான தேவர்கள் சூரியர், சந்திரர் முதலான நவக்கிரகங்கள். நாகர்கள் இருக்கும் பாதாள லோகங்கள் பர்வதங்கள் நைமிசாரண்யம் போன்ற ஆரண்யங்கள், கங்கை காவேரி முதலான நதிகள், முனிவர்கள், சித்தர்கள் இன்னும் அநேக புண்ணிய தீர்த்தங்களையும் பார்த்தனர்.

விநாயகரின் உதரத்திலே சகலமும் அடக்கமாயிருப்பதைக் கண்ட மூவரும் மெய் மறந்து நின்றனர்.

சிருஷ்டியின் பிரவாகத்தை உணர்த்திய விநாயகர் அவர்கள் பார்வையினின்று மெல்ல அக்காட்சியை மாயையால் அகற்றினார். உணர்வு வரப் பெற்ற மும்மூர்த்திகளும் அங்கிருந்து வெளியே வர முயன்றனர். ஆனால் ஆதியும் அந்தமும் காணமுடியாது தவித்தனர். எந்த வழியாக உள்ளே நுழைந்தோம் எப்படி வெளியேற வேண்டும் என்பது தெரியாது திண்டாடினர். விநாயகப்பெருமானை மனத்தில் தியானித்து தேவாதிதேவா சிருஷ்டிப்பிரவாகத்தை காட்டியருளியவாறு தாங்கள் இந்தச் சூன்யப்பிரதேசத்திலிருந்தும் வெளியேற வழிகாட்ட வேண்டும் என்று பிரார்த்தித்தனர்.

விநாயகப் பெருமான் மகிழ்ச்சியடைந்து நமது துதிக்கை வழியாகப் பிரமதேவனையும், இரு செவிகள் வழியாக விஷ்ணுவையும், ருத்திரரையும் வெளிப்படுத்தினார். உதரத்திலிருந்து வெளிப்பட்ட மும்மூர்த்திகளும் பகவானின் பாதாரவிந்தங்களைப் பணிந்து தொழுதனர்.

''முக்குண மூர்த்திகளே இனி உங்களுக்கிட்ட பணிகளை செவ்வனே நடத்திவாருங்கள்'' என்று அருளி வக்கிரதுண்டரும் அவர்களை விட்டு மறைத்தார்.

* * *

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே!

— திருஞானசம்பந்தர்



# வல்லாள கணபதி

விநாயக புராணத்தில் விநாயகப் பெருமானின் நாமங்களும் நாமங்களைப் பெறுவதற்கேற்ற காரணமகிமைகளையும் பற்றி கூறப்படுகிறது.

சிந்து தேசத்தில் பல்லி என்றொரு பட்டணம் இருந்தது. அந்த நகரத்தில் கல்யாணன் என்றொரு வைசியன் தமது மனைவி இந்துமதியுடன் இல்லறம் இனிதே நடத்திவரும் பொழுது அவர்களுக்கு ஒரு புத்திரன் பிறந்தான். தம்பதிகள் இருவரும் பெருமகிழ்ச்சியடைந்தனர். கல்யாணன் பிள்ளை பிறந்ததைக் கொண்டாட அனேக தானங்கள் செய்தான். பன்னிரண்டாம் நாள் சோதிடர்களை அழைத்து அவர்களின் அனுசரணையுடன் வல்லாளன் எனும் நாமம் சூட்டப்பட்டது.

சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்த வல்லாளன் அயல்பிள்ளைகளை அழைத்துக் கொண்டு ஊருக்கு வெளியே இருந்த தோப்புக்கு விளையாடப் போய் விடுவான். அவனுக்கு விநாயகக் கடவுளிடம் அளவிலாத அன்பு ஏற்பட்டுவிட்டது. அங்கேயிருந்த ஒரு கல்லை எடுத்து வைத்து அதையே கணேசப் பெருமான் என நினைத்து நீரால் குளிப்பாட்டி மலர்களால் அர்ச்சித்து பூசை செய்து வரலானான். அவர்கள் விளையாட்டு முழுவதும் இந்த வழியிலேயே இருந்தது.

சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட இவ்விளையாட்டு போகப்போக உண்மையாகவே மாறிவிட்டது. விநாயகப் பெருமானுக்கு ஆராதனைகள் பலமாக நடந்தது. தேங்காய்கள் உடைக்கப்பட்டன. நிவேதனப் பொருட்களும் படைக்கப்பட்டு யாவருக்கும் விநியோகிக்கப்பட்டன. இப்படியாக இவர்களின் உற்சாகம் உச்சக் கட்டத்தை அடைந்து விட்டது.

ஒருநாட் காலை எழுந்ததுமே பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு தோப் புக்குப் போய்விட்டான் வல்லாளன், விநாயகருக்கு முன்பாக ஓலைக ளைக் கொண்டு சிறு பந்தலைப் போட்டனர். தென்னங்குருத்துக்க ளைக் கொண்டு எங்கு பார்த்தாலும் தோரணங்கள் கட்டப்பட்டன. பந்தற்காலுக்கெல்லாம் தென்னை ஓலைகளைச் சுற்றினர். தரையிலே தண்ணீர் தெளித்துக் குப்பை இல்லாது பெருக்கினர். வழக்கம் போல விநாயகருக்கு குடம் குடமாகத் தண்ணீர் அபிஷேகிக்கப்பட்டது. அத் துடன் பிள்ளைகள் கொண்டு வந்திருந்த பால், தேன், தயிர், சந்தனம் முதலிய கூட அபிஷேகம் செய்யப்பட்டன. மாலை, மாலையாக வந்து குவிந்திருந்த பூக்களால் விநாயகரை அலங்கரித்தனர். பந்தல் முழுவ தும் ஊதுவர்த்தியின் நறுமணம் கமழ்ந்தது. ஒரு பக்கம் அடுப்பு மூட் டப்பட்டு நிவேதனம் தயாராகிக் கொண்டிருந்தது. ஏழெட்டுச் சிறுவர் கள் சேர்ந்து கைகொட்டிப் பஜனை செய்தார்கள். அன்று பசிதாகம் கூட மறந்து பூசையில் ஈடுபட்டு இருந்தார்கள். அஸ்தமனமாகி இருட் டிவிட்டது. அப்பொழுதும் பிள்ளைகள் ஒருவரும் வீடு திரும்ப வில்லை.

ஊரில் உள்ளவர்கள் தங்கள் பிள்ளைகள் வீடுதிரும்பாதது கண்டு பீதியடைந்து தங்கள் குழந்தைகளைக் கூட்டிச் சென்ற வல்லாளனு டைய வீட்டுக்குச் சென்று பார்த்தார்கள். அங்கே வல்லாலளனும் வரவில்லை என்று தெரிந்தது. அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது. வல்லாளனுடைய தந்தையாகிய கல்யாணனிடம் போய் உன்பிள்ளை யால் எங்கள் பிள்ளைகளும் கெட்டுப் போகிறுர்கள். இன்று அதிகா லையிலேயே உங்கள் பிள்ளை எங்கள் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு போனுன். இன்னும் வீடு திரும்பவில்லை. உன்பிள்ளை யோடு சேர்ந்து எங்கு போனார்களோ என்ன ஆனார்களோ தெரி யாது. நீ உன் பிள்ளையை கண்டித்து அடக்கி வைக்க வேண்டும் என்றுர்கள்.

கல்யாணனின் ஆத்திரம் குமுறி எழுந்தது. ஊரார் சேர்ந்து தன்னைப் பழிக்க நேர்ந்ததே என்ற நினைப்பு அவனை மேலும் ருத்திரனாக மாற்றியது. சார்ப்பிலே செருகியிருத்த மூங்கில் தடியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். இந்துமதி கண்ணீரும் கம்பலையுமாக அவ னைத் தடுத்தாள். கல்யாணனோ அதற்கு செவிமடுக்க வில்லை. தின மும் வல்லாளன் போய் விளையாடும் தோப்புக்குச் சென்றான். தோப் பில் வல்லாளனும் அவனது தோழர்களும் விநாயகருக்குப் பூசை செய்து விழாக் கொண்டாடி துதிப்பாடல்களைப் பாடிக்கொண்டிருந் தார்கள். இதைக்கண்ட கல்யாணனுக்கு ஆத்திரம் மேலும் அதிகரித் தது. ஆத்திரத்தில் என்ன செய்கிறோம் என்பதைக் கூட யோசியாமல் குழந்தைகள் அலங்கரித்து வைத்திருந்த பந்தலை பிய்த்துத்தள்ளி னான். இதைக் கண்ணுற்ற மற்றச்சிறுவர்கள் அவ்விடத்ததை விட்டு அகன்று விட்டனர். கைகளைப் பிசைந்து கொண்டு நிற்கும் மகனை நெருங்கி அவன் தலை மயிரைப் பிடித்து உலுக்கி கன்னத்தில் பலமாக அறைந்தான். நீ தான் கெட்டுப் போனாலும் மற்றவர்களின் பிள்ளைக ளையும் கெடுக்க துணிந்து விட்டாயே என்றான்.

வல்லாளன் ஒரு கையால் தனது கன்னத்தை பொத்திக் கொண்டு கண்ணீர் சொரிய 'அப்பா நாங்கள் இன்று விநாயகருக்கு திருவிழா கொண்டாடினோம்' என்றான். வல்லாளன், தந்தையின் கைகளைப் பிடித்துக் கொண்டு அப்பா நான் உங்களுடன் வீட்டிற்கு வருகிறேன், இந்தப் பொருட்களை ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கதறினான். அவனைப் புறங்கையால் எட்டித் தள்ளிய கல்யாணன் அங்கிருந்த விநாயகரைத் தூக்கி வயலில் எறிந்தான்.

வல்லாளன் உள்ளத்தில் இரத்தம் கசிந்தது. தந்தையின் கால்களை வந்து பிடித்துக் கொண்டான். 'என்ன காரியம் செய்து விட்டீர்கள் அப்பா. எல்லாருக்கும் விக்கினங்களை நிவர்த்தி செய்யும் பெரு மானை அலட்சியம் செய்து விட்டீர்களே! தயவு செய்து என் விநாய

கரை திரும்ப எடுத்து வந்து வைத்து உங்கள் தவறுக்கு மன்னிப்பு கேளுங்கள். அதற்கும் செவிமடுக்காத கல்யாணன் தடியினால் இரத்தம் கசியும்படி நன்றாக அடித்து விட்டான். வல்லாளனின் உடல் வலியினால் துடித்தது. அப்படியே சோர்ந்து வீழ்ந்து விட்டான். அப்பவும் கல்யாணனுக்கு ஆத்திரம் தீரவில்லை. அவனை ஒரு மரத்துடன் சேர்த்து கட்டிவிட்டான். வல்லாளன் நடுங்கிப் போய் 'அப்பா என்னை அவிழ்த்து விடுங்கள்' என்று கத்தினான். அதற்கு அவன் தந்தை 'டேய் உண்மையிலேயே நீ பிள்ளையாருக்கு பூசை செய்திருந்தால் அவரே வந்து உன்னை அவிழ்த்து விடட்டும், இல்லையேல் இப்படியே கிட' என்று சொல்லிவிட்டு வீடு திரும்பினான்.

வேதனை தாங்க முடியாது வல்லாளன் தவித்தான். 'வேழ முகத்தோனே உன்னைப் பூசித்தற்கு நான் கைமேல் கண்ட பலன் இது தானா? நான் என்ன தவறு செய்தேன். என் நண்பர்களைக் கொண்டு, உனக்கு குடம் குடமாகத் தண்ணீர் கொண்டு வரச்செய்து அபிஷேகம் செய்தேன் அது குற்றமா? கஷ்டப்பட்டு பூக்களைப் பறித்து வந்து மாலை தொடுத்து சாத்தினேனே அது தவறா? கணநாதா எதற்காக எனக்கு இந்தத் துன்பத்தைக் கொடுத்தாய்?' வல்லாளன் வேறுவழியின்றி பிள்ளையாரைத் தியானித்து 'உன் அருளுக்கு அருகதை உடையவன் நான் என்றால் நான் உனக்காக கட்டி வைத்த பந்தலை எவன் சிதைத்தானோ, நான் வைத்து பூசித்த உன்திரு உருவை எவன் பிடுங்கி எறிந்தானோ, எவன் உன் பக்தனான என்னை இரத்தம் கசியும்படி அடித்தானோ, மேலும் அது போதாது என்று மரத்தில் கட்டி வைத்தானோ, எவன் உம்மை உதாசீனம் செய்தானோ, அந்தக் கொடியவன், கண்கள் குருடாகி, வாய் பேசமுடியாது, காதும் கேளாது உடல் முழுவதும் நோய் பீடிக்கப்பட்டவராக துன்பப்படட்டும்' என்று கண்ணீர் விட்டு அழுதான்.

வல்லாளனின் துக்கம் தளரவில்லை. விநாயகரைத் தியானித்து பூசை செய்து வந்த தனக்கு இப்படி ஒரு இடையூறு நேர்ந்ததே என பெரிதும் விசனித்து கட்டப்பட்ட நிலையில் இனி இருந்து பிரயோசனம் இல்லை என்று உயிரை விட்டு விட நினைந்து மூச்சை அடக்கினான்.

அந்த நேரம் எல்லாம் வல்ல அந்த விக்கினேஸ்வரன் சிறிய பையன் போல் வடிவம் தாங்கி அங்கு வந்தார். அவர் அருகில் நெருங்கும் போதே வல்லாளனைக் கட்டியிருந்த கட்டுகள் தானாகவே அறுந்தன. உடலில் இருந்த காயங்களும் மறைந்தன. வல்லாளனுக்கு அங்கு வந்திருப்பது யாரென்று தெரிந்து விட்டது. உடனே ஓடிப்போய் சிறுவன் வடிவில் நிற்கும் விநாயகரின் கால்களில் வீழ்ந்தான்.

'சுவாமி அடியேன் இன்று நான் பாக்கியசாலியானேன்' என்று ஆனந்தக் கூத்தாடினான். விநாயகரும் சிறுவன் வடிவை விடுத்து தும்பிக்கை முகத்தோடு காட்சி கொடுத்தார். 'வல்லாளா உன் பக்தியை நான் மெச்சினேன்; நீ மனத்தில் எண்ணியவாறு எனக்கு அபகாரம் செய்தவர்கள் அவசியம் அதற்கான தண்டனையை அனுபவித்தே தீருவார்கள். அவ்விதமே கல்யாணன் செய்த தவறுக்கு பலன்களை அனுபவிக்கத் தொடங்கிவிட்டான். உனக்கு என்ன வரம் வேண்டும்' எனக் கேட்டார்.

வல்லாளன் அவரைப் பணிந்து 'தேவதேவா! அடியேன் ஏதோ தங்கள் மீது கொண்ட ஆசையின் காரணமாக இத்தோப்பிலே கிடந்த கல் ஒன்றை எடுத்து அதைத் தாங்களாகவே எண்ணி ஆராதித்து வந்தேன். தங்கள் சாந்நித்தியம் இந்தக் கல்லில் என்றைக்கும் இருக்குமாறு அருள் புரிய வேண்டும்' என்றான்.

'அப்படியே ஆகும் வல்லாளா. இந்த இடத்தில் நீ ஆரம்பித்த இந்தத் திருவிழா இனிப் பெருவிழாவாக மாறும். உன்விருப்பப் படியே என் சாந்நித்தியம் இந்த இடத்தில் அவசியம் இருக்கும்', என்று வினாயகரும் வரமளித்து 'உன்னுடைய பெயருக்கு முன்னால் வைத்து ''வல்லாள கணபதி'' என்ற பெயருடன் இவ்விடத்தில் கோயில் கொள்வேன், பக்தர்கள் வந்து வழிபட்டு கோரும் வரங்களை அளிப்பேன்'. கணநாதனின் கண்டனத்திற்குட்பட்ட கல்யாணன் கண்ணை இழந்தவாறும், காது கேளாத நிலையிலும், நோய்வாய்ப்பட்டு வீட்டை அடைந்தான். இந்துமதி இதனைக் கண்டதும் கதறினாள். போகும் போதே எச்சரித்தேனே தகாத செயல்கள் ஒன்றையும் செய்ய வேண்டாம் என்று. மகனுக்கு செய்த தீங்கை ஆண்டவன் பொறுக்காமல் உங்களை இவ்விதம் ஆக்கிவிட்டார் போலும். எனது மைந்தனையும் இழந்து உங்களையும் இழக்கின்ற நிலை அல்லவா இது என்று கதறி அழுது கொண்டு மைந்தனின் கதி என்ன வாயிற்றோ என்று அறிய தோப்புக்குள் ஓடினாள்.

அங்கு கண்ட காட்சி அவளைத் திகைக்க வைத்தது. தூக்கி எறியப்பட்ட விக்கிரகம் மீண்டும் பழைய படி மாலைகள் சாந்தப்பட்டிருந்தன. அதற்கு முன்னால் இருந்தவாறு வல்லாளன் தியானத்திலிருந்தான். தற்போது உடம்பில் எதுவித காயங்களும் இல்லை. இந்துமதி ஓடி வந்து மகனைக் கட்டியணைத்துக் கொண்டு அழுதாள். பின் ஆராதிக்கும் அந்தப் பெருமானின் கருணையே எல்லாம் என்று கூறி, தந்தைக்கு இரங்கும் படி வேண்டினாள். அதற்கு வல்லாளன் 'அம்மா தெய்வ அபச்சாரம் செய்தவர்கள் ஒருக்காலும் அதற்குரிய தண்டனையிலிருந்து தப்பமுடியாது' எனக் கூற, இந்துமதி 'குழந்தாய் எப்படியிருந்தாலும் உன் தந்தையல்லவா?' என அதற்கு வல்லாளன் 'அம்மா ஜீவராசிகளுக்கும் தாயுமாக தந்தையுமாக இருப்பவன் அவன். இவ்வுலகில் மற்றய உறவுகள் அனைத்தும் வெறும் மாயையே. கணநாதருக்குச் செய்த அபசாரமே இப்படி நேர்ந்தது. அதை இந்த ஜென்மத்திலும்

அடுத்த ஜென்மத்திலும் அனுபவித்தே தீர வேண்டும்' என அழுத்த மாக கூறிவிட்டான். பின்னர் இந்துமதி தன்னுடன் வீட்டுக்கு வருமாறு அழைக்க அதையும் மறுத்து 'அன்னையே மன்னிக்க வேண்டும் இனி எனக்கு எல்லாம் இந்தச் சன்னிதானம்தான்' என்று கூறியதும் இந்து மதி நொந்த உள்ளத்துடன் திரும்பினாள்.

அவ்விடத்தில் வல்லாள கணபதி ஆலயம் மிகவும் பிரபல்யம் அடைந்தது. கணநாதரின் கருணையால் அழகிய விமானத்தில் ஏறி வல்லாளன் விண்ணுலகை அடைந்தான்.

* * *

## குதிரையின் காதம் கிழவியும் காதம்

மதூர மொழி நல் உமையாள்
புதல்வன் மலர்ப்பத்தை
முதிர நினையவல் லார்க்குஅரி
தோ? முகில் போல் முழங்கி
அதிர நடந்திடும் யானையும்
காதம் அதன் பின்வரும்
குதிரையும் காதம் கிழவியும்
காதம் குல மன்னனே.

# விநாயக புராணம்(கலைக்களஞ்சியம்)

இது விநாயகரது திருஅவதாரம் முதலிய வாழ்வினைச் சித்தரிக்கும் புராண நூலாகும். இதனை தமிழிற் சிறந்த செய்யுட்களாற் பாடியிருப்பவர், திருவாவடுதுறையாதீனத்துக் கச்சியப்ப முனிவர் ஆவார். வடமொழி விநாயக மான்மியம் இதன் முதன்னூல் என்பர். இந்நூல் உபாசனா காண்டம், இலீலா காண்டம் என இரண்டு காண்டங்களைக் கொண்டுள்ளது. இந்நூலில் உலகியல் முறைகளும், வாழ்வியல் முறைகளும், நீதி நெறிகளும் நல்ல செய்யுள் நடையில் விளக்கப் பெற்றுள்ளன. வியாச முனிவர் பிரமதேவருக்கு உணர்த்தியபடி பிருகுமுனிவர் சோமகாந்தன் என்னும் அரசருக்கு உணர்த்த அதனைச் சூத முனிவர் நைமிசாரணிய வனத்திருந்த முனிவர்களுக்கு உணர்த்தினார் என்று கூறித் தொடங்குகிறது. இறுதியில் இதனை பக்தியோடு கேட்டமையால், வியாச முனிவர் வரம் பெற்றதும் சோமகாந்தன் என்ற மன்னன் முத்தி அடைந்ததும் கூறப்பெற்றுள்ளன. உபாசனா காண்டத்தில் சோமகாந்த அரசன் வரலாறு தொடங்கிச் சகஷ்ரநாமப் படலம் முடியப் பேசப்பட்டுள்ளது. இலீலா காண்டத்தில் வக்கிர துண்ட விநாயகர், சிந்தாமணி விநாயகர், கஜாஜன விநாயகர், விக்கின விநாயகர், மயூரேச விநாயகர், கணபதி விநாயகர், மகோற்கட விநாயகர், உடுண்டு விநாயகர், வல்லப விநாயகர் ஆகிய விநாயகரின் திருஅவதாரங்களும் வியாச முனிவர் உபதேசம் பெற்ற படலமும் உள்ளன.

திருக்குறளில் பல குறட்பாக்களில் வரும் கருத்துக்களைத் தெளிவுறத் திரட்டித் தருவதில் இப்புராண ஆசிரியர் சிறந்து விளங்குகின்றார். எடுத்துக்காட்டாக தக்கன் அரசாட்சி பெற்ற படலத்தில் மழை வளம் சுரக்குமாறும், வயல் நிலம் விளையுமாறும் விழையறம் வளருமாறும், வேதநூல் விளங்குமாறும், தழைபொருள் ஈட்டுமாறும், சமரிடை வெல்லுமாறும், பிழைதப வாழுமாறும், பிறழ்தராக் கோலினாகும் என வரும்(89) பாடலில் செங்கோண்மை முற்றும் செறிந்திருத்தல் காண்க. அன்றியும் சாதி உடலைப் பற்றியது(47) என்பது போன்ற சீரிய கருத்துக்களையும் நூலினுள் ஆங்காங்கு காணலாம்.

# விநாயகர் விரதங்கள்

## 1) சதுர்த்தி

விநாயகர் பிறந்து கணபதியாக்கப் பெற்றது சதுர்த்தி நாள். இவர் வழிபாட்டிற்குச் சிறப்புடையவர். இவரைச் சிறப்புடன் பூசிக்க ஏற்றுக்கொள்ளும் நோன்புக்கு விநாயக விரதம் அல்லது சதுர்த்தி விரதம் என்று பெயர். சித்தி விநாயக விரதம், சங்கஷ்டஹர சதுர்த்தி விரதம், தூர்வா கணபதி விரதம் என்ற இம் மூன்றும் காந்தம் முதலிய புராணங்களில் கூறப்படுவன. பொதுவாக அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கினையும் விரும்புபவர் இவ்விரதங்களை ஏற்பர். சிறப்பாகச் சித்தி விநாயக விரதம் காரியசித்தியைப் பெறுவதற்காக வும், அடாப்பழி நீங்குவதற்காகவும் நோக்கப் பெறுவது. கிருஷ்ணன் இதை நோற்றுப் பிரசேன சித்தைக் கொன்று சியமந்தக மணியைத் திருடிக் கொண்டதாக நேர்ந்த பழியினின்று விடுபட்டார். கிருஷ்ணனு டைய உபதேசத்தின்படி யுதிஷ்டிரர் இதை ஏற்றுப் பகைவர்களை வென்று நாட்டைப் பெற்றார். சிவபெருமானே முப்புரங்களை எரிக் கும் செயலில் வெற்றி பெறுவதற்காகச் சித்தி விநாயகரை வழிபட்டார். சுக்கில பட்ச சதுர்த்தியில் நடுப்பகலில் சதுர்த்தி இருக்கும் நாளில் இதை நோற்க வேண்டும். இரண்டு நாள் இப்படி வந்தால் முதல் நாளும், இரண்டு நாளும் வராவிட்டால் மறுநாளும் இதை நோற்க வேண்டும். புரட்டாதி மாதச் சதுர்த்தி மிகச் சிறந்ததாகையால் யாவ ரும் அன்று பூசை செய்வர். இதுதான் விநாயக சுதுர்த்தி என்று கூறப் பெறுவது. களிமண்ணினால் உருவம் செய்து, பிராணப் பிரதிஷ்டை முதலியன செய்து, இருபத்தொருவகை இலைகளாலும் இருபத்தொரு வகை பூக்களாலும், ஒற்றைப்படை அலகுள்ள 21 அறுகம் புற்களாலும் பூசித்து 21 கொழுக்கட்டைகளை நிவேதனம் செய்வர். இரவில் சந்திர னுக்குப் பூசையும் அருக்கியமும் கொடுத்து விநாயகரின் அருளைப் பெறுவர்.

சங்கஷ்ட ஹர சதுர்த்தி விரதமானது நோய், கடன், சிறைவாசம் இவற்றின் அச்சங்களிலிருந்தும் வனவாசம் முதலிய துன்பங்களிலிருந்தும் தம்மைக் காத்துக்கொள்ள ஒருவர் நோக்க வேண்டிய விரதமாகும். இதைக் கிருஷ்ணன் தருமருக்கு வனவாசக காலத்தில் உபதேசித்ததாக ஸ்காந்தம் முதலிய புராணங்கள் கூறும். களிமண்ணினாலோ, தாமிரத்தாலோ உருவம் செய்து பூசிக்க வேண்டும். இப்பூசை கிருஷ்ண பட்ச சதுர்த்தி தினத்தன்று இரவில் சந்திரன் உதயமானவுடன் செய்யப்பெறும். சந்திரன் உதயகாலம் இதற்கு முக்கியம். இரண்டு நாள் இப்படியிருந்தால் முதல் நாளும் இரண்டு நாளும் இல்லாவிடில் மறுநாளும் புருஷ சூக்த மந்திரங்களைக் கொண்டு ஆவகானம் முதலியன செய்து பூசித்துச் சந்திரனுக்கும் கணபதிக்கும் சதுர்த்தி தேவிக்கும் அருக்கியம் கொடுப்பர்.

ஆவணிமாதத் தேய்பிறைச் சதுர்த்தி இதற்கு மிகச் சிறந்ததாகையால் அன்றாவது பூசைசெய்து வேண்டிய வரங்களைப் பெறுவர். தூர்வா கணபதி விரதம் வளர்பிறைச் சதுர்த்தியிலோ, சிறப்பாக ஆவணி மாதச் சதுர்த்தியிலோ, கார்த்திகை மாதச் சதுர்த்தியிலோ, மூன்று அல்லது ஐந்து ஆண்டுகள் அனுஷ்டிக்கப் பெறும் கால னிருணயம் சித்திவிநாயக விரதத்தைப் போலவே ஆகும். இதைச் சிறப்பாக சந்ததியை அடைவதற்காகவும், செல்வத்தைப் பெறுவதற்காகவும் நோற்பர். தங்கம் அல்லது வெள்ளியினால் பிரதிமை செய்து பூசிப்பர். இதன் பூசை விதி சௌரபுராணத்தில் கூறப்பெற்றிருக்கிறது.

## 2) சித்திரை வெள்ளி விரதம்

சித்திரைத் திங்களில் வளர்பிறையில் வெள்ளிக்கிழமையன்று காலையில் குளித்த பிறகு பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றில் ஒன்றாலான விநாயக உருவை அமைத்து விதிப்படி வழிபட்டு, பாயாசம் முதலியன படைத்து கோயிலுக்குப் போய் விநாயகரை வழிபட்டு

வீட்டிற்கு வந்து தானம் முதலியன செய்து அப்பம் உண்டு, மறுநாட் காலை நீராடி, விநாயகரை வழிபட்டு, அவ்விநாயக உருவை அடியார்க் களித்துச் சிவனடியாருடன் உண்டு விரதத்தை முடித்தல் வேண்டும். இவ்விரதத்தை அத்திரி முனிவர் நோற்றுத் தம் கண்களினின்றும் ஞாயிற்றையும், திங்களையும் ஈர்ந்தார். பிரமன் நோற்றுப் பிரமத்துவம் பெற்றார். குபேரன் நோற்று நிதிகளைப் பெற்றார்.

* * *



## நல்வழி

**பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலுங்கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா.**

# இந்துமதி அனுஷ்டித்த விநாயகர் சதுர்த்தி விரதம்

மாளவம் என்னும் பெருவளம் கொழிக்கும் நாட்டில் அமைந்துள்ள கன்னமா நகரம் எல்லா வகையிலும் சிறந்து விளங்கியது. அந்த நகரத்தை தலைநகராகக் கொண்டு சந்திராங்கதன் என்னும் அரசன் தனது பட்டத்தரசி இந்துமதியுடன் அறநெறி தவறாது அரசாட்சி செய்து வந்தான்.

விநாயகப் பெருமானின் திருவருளால் மன்னனும்,மகாராணியும் மனக்குறைவு எதுவும்மின்றி சகல சௌபாக்கியங்களுடன் இன்பம் பொங்க இனிது வாழ்ந்து வந்தனர். ஒருமுறை சந்திராங்கதன்,வீரர்கள் புடை சூழ காட்டிற்கு வேட்டையாடச் சென்றான். குகைவிட்டு கிளம்பும் கரும்புலி எனத் தாவி புறப்பட்ட வேந்தனின் வில்லுக்கும். ஈட்டிக்கும் புலி,காட்டெருமை, சிங்கம் போன்ற கொடிய விலங்குகள் பலியாகின.

இவ்வாறு மன்னன் வனவிலங்குகளை கொன்று குவித்து வரும் தருணத்தில் எதிர்பாராமல் எங்கிருந்தோ வந்த சில அரக்கர்கள் அரசனை எதிர்த்து போரிட்டனர். சந்திராங்கதன் வீரத்திற்கு முன்னால் நிற்கமுடியாது அரக்கர்கள் குருதி வெள்ளத்தில் அழிந்தனர். அரக்கர்கள் அனைவரும் மன்னனால் கொன்று குவிக்கப்பட்டனர்.

இங்கனம் அரக்கர்கள் உயிர் நீத்ததைக் கேள்வியற்ற அரக்கர்களை சேர்ந்த ஓர் அரக்கி, சந்திராங்கதனைப் பழி வாங்க அட்டகாசத்துடன் தாவிப் புறப்பட்டாள். சந்திராங்கதனைப் பிடித்து, இழுத்து கொல்லக் கருதினாள். அவனை நோக்கி மதயானை போல் பாய்ந்தாள். சந்திராங்கதன் அஞ்சி நடுங்கி அருகிலுள்ள தடாகத்தில் குதித்தான், நீருள் மூழ்கி மறைந்தான். அப்பொய்கையில் நீராட வந்திருந்த நாகலோக

கன்னியர், நீருள் மூழ்கி வரும் சந்திராங்கதனைக் கண்டனர். அவன் அழகில் மயங்கினர். உணர்ச்சியால் உந்தப்பட்டனர். அவனை அலக்காகத் தூக்கிக் கொண்டு நாகலோகத்திற்கு சென்றனர்.

நாகலோகத்திற்கு கொண்டு வரப்பட்ட சந்திராங்கதன் எதும் புரியாமல் திகைத்தான்

அதுசமயம் நாககன்னியர் 'அரசே அஞ்ச வேண்டாம். உங்களைப் பாதுகாப்பான இடத்தில் தான் கொண்டு வந்து சேர்த்துள்ளோம் . நாங்கள் நாகலோக கன்னியர்கள். உங்கள் பேரழகினாலும், ஆண்மைச் செறிவினாலும் எங்கள் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள விரகதாபத்தின் மோகத்தீயானது கொழுந்து விட்டெரிகிறது', என்று மோகவார்த்தைகளைப் பொழிந்தனர். இன்சுடிவப்பானங்களையும், பல்சுவைப் பழங்களையும் கனிவோடு கொடுத்தனர். பொன்னும் மணியும், பட்டாடைகளும், அணிவித்து ஆனந்தக் களிப்பெய்தினர்.

சந்திராங்கதனுக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. ஏகபத்தினி விரதனான சந்திராங்கதன், நாகலோக கன்னியரின் காமத்திற்கு பலியாகவில்லை. அவர்களை கூடி மகிழ மறுத்தான். ஆனால் அம்மங்கையர்களோ, அவனை விடுவதாக இல்லை. எப்படியாகிலும் மன்னனைத் தங்கள் வசப்படுத்தி விட வேண்டும் என்ற தணியாத ஆசையில் ஆடினர், பாடினர், பற்பல வழிகளில் அவனை மயக்க முயன்றனர். இப்படியாக நாட்கள் நகர்ந்தன.

அதே சமயத்தில் இந்துமதி, தனது கணவனைக்காணாது வருந்தினாள். கணவனுடன் வேட்டைக்கு சென்று திரும்பியவர்கள், சந்திராங்கதன் நீரில் மூழ்கி இறந்ததாகக் கூறினார்கள்.

அது கேட்டு இந்துமதி அழுதாள், துடித்தாள், துவண்டாள், செய்வதறியாது திகைத்தாள். கைமை நோன்பாற்றிக் காலத்தைக் கழிக்கலா

னாள். ஆண்டுகள் பல உருண்டன. ஒரு நாள் நாரதமாமுனிவர் அரண்மனைக்கு வந்தார். இந்துமதி விரைந்து சென்று மாமுனிவரின் திருவடிகளை பணிந்து, உபசரித்து ஆசனத்தில் எழுந்தருளச் செய்து பாதபூஜை செய்தாள். இந்துமதியின் பக்திக்கு மனம் மகிழ்ந்த நாரதமுனிவர், அவளது நிலைமையைக்கண்டு 'இந்துமதி உன்வேதனையை விட்டுவிடு, உன்பதி சந்திராங்கதன் உயிரோடுதான் இருக்கிறான்' என்றார். மாமுனவரின் மதுரமொழிகள் இந்தமதியின் செவிகளில் தேன்போல் பாய்ந்தன.

நாரதர் தொடர்ந்து தடாகத்தில் மூழ்கிய சந்திராங்கதனைப்பற்றிய அத்தனை விருத்தாந்தங்களைப்பற்றியும் கூறினார்.

பின்னர் 'மகளே உன் கணவனைத்திரும்ப பெறுவதற்கு தக்க ஒரு மார்க்கத்தை உனக்குக் கூறுகிறேன். ஆனைமுகப் பெருமானின், சதுர்த்தி விரதத்தைத் தவறாது அனுஷ்டித்தால், சகல சௌபாக்கியங்களையும் பெறுவதோடு உன் கணவனையும், திரும்பப் பெறுவாய்' என்று மொழிந்த நாரத முனிவர் இந்துமதிக்கு சதுர்த்தி விரதத்தை அனுஸ்டிக்க வேண்டிய முறைகளைப்பற்றியும் விளக்கி ஏகாட்ச்சர மந்திரத்தையும் உபதேசித்தார்.

இந்துமதி மகரிஷியை நமஸ்கரித்து பலவாறு தோத்திரம் செய்தாள். சதுர்த்தி தொடங்க வேண்டிய ஆவணி மாதம் பூர்வ பட்சத்தில் வரும் சதுர்த்தி தினத்தன்று விரத்தை ஆகமவிதிப்படி தொடங்கினாள் இந்துமதி.

முப்பது நாட்கள் அன்ன ஆகாரமின்றி ஆனைமுகக் பெரமானை வணங்கி, ஏகாஷரமந்திரத்தை ஓதி, தானதருமங்களைச் செய்து, விரதத்தை மங்களகரமாக முடித்தாள். கணேசமூர்த்தி இந்துமதியின் பக்திக்கும், அன்பிற்கும் கட்டுப்பட்டு அவளுக்கு திருவருள் புரிந்தார்.

ஆனைமுகப் பெருமானின் அருளால் மோகம் பிடித்திருந்த நாக லோக கன்னியர்களின் காம எண்ணங்கள் அழிந்தன. இச்சைகளை வெறுத்தனர். சந்திராங்கதனை போற்றினர். அவனது கற்புத்தன் மைக்கு தலைகுனிந்து பொன்னும், பொருளும் வாரி, வாரிக் கொடுத்து முன் போல் தடாகத்திற்கு வெளியே கொண்டு போய் ஓர் அழகிய குதிரையின் மேல் அவனை எற்றி அனுப்பி வைத்தனர்.

சந்திராங்கதன் தனது நகரத்திற்கு காற்றிலும் வேகமாக விரைந்தான். மன்னன், நகர் நோக்கி வருகிறான் என்ற செய்தி காட்டுத்தீ போல் நாடெங்கும் பரவியது. இந்துமதி மகிழ்ச்சி பொங்க சேனைகளும், மந்திரி பிரதானிகளும் புடை சூழ மேளதாளத்துடன் புறப்பட்டாள். மன்னரை எல்லையிலே எதிர்கொண்டு வரவேற்று அகமகிழ்ந்தாள்.

சந்திராங்கதன் முன்போல் இந்துமதியோடு இன்புற்று வாழத் தொடங்கினான். அதன் பின்னர் சந்திராங்கதனும், இந்துமதியும் ஆண் டுதோறும் தவறாது சதுர்த்தி விரதம் அனுட்டித்து, இம்மையிலும், மறுமையிலும், சகல மேன்மைகளையும், பெற்று பெருவாழ்வு வாழ்ந் தனர்.

* * *

### விருத்தாகல புராணம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவுந் தீமையைக் காய்க்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

# நாலாம் பிறை

தமிழ் மக்கள் தம் வாழ்வில், சமயம் வேறு அல்லாமல், சமய வாழ்வே வாழ்பவர்கள். சூரியனையும் வழிபாடு செய்வார்கள். அது போல் சந்திரனையும் வழிபாடு செய்வார்கள்.

மாதந்தோறும் வளர்பிறைச் சந்திரனைப் பார்த்து முதலில் நல்லவர்களில் முளிப்பது இந்துக்களின் வழக்கமாகும். இவ்வண்ணம் நல்ல நாளில் நல்லவர்களின் பிறை பார்த்து முளித்தால் அந்த மாதம் நல்லவிடயங்கள், சுபகாரியங்கள், மற்றும் நடப்பவைகள் எல்லாம் நல்லனவாகவே அமையும் என்பதில் மக்களுக்கு நல்ல நம்பிக்கை உண்டு.

தேவாரம் பாடிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தனது முதல் தேவாரத்தில் ''பித்தா பிறைசூடி'' என்று குறிப்பிடுகின்றார். இதிலிருந்து பரமசிவன் சந்திரனை தம் தலையில் சூடிக்கொண்டிருக்கிறார் என்பது கண்கூடு. ஆனாலும் வளர்பிறைச்சந்திரனை பார்ப்பது தான் வழமை. அதிலும், மூன்றாம் பிறைச்சந்திரனைப் பார்ப்பதுதான் விசேசம் என்று கூறப்படுகின்றது. அது வருடம் தோறும் வருகின்ற ஆவணி மாதத்தில் அமாவாசை கழிந்த மூன்றாம் நாலாகும். திருதி நட்சத்திரம் சேர்ந்த அத்தினத்தில் சந்தனக்கீறு போல தோன்றும் .அந்த சந்திரனை, அன்று பார்ப்பதால் தயவு தாட்சண்ணியம், அன்பு, கருணை, காருண்யம் எல்லாம் அமைந்த வாழ்வுக்கு அது ஏற்ற ஒளியைத் தரும் என்பதாகும். ஆனால் இதற்கு எதிர்மாறு மாதத்தில் அமாவாசை கழித்து வரும் நாலாம்பிறை அன்று விநாயகர் சதுர்த்தி தினமும் கூட.அன்று நாலாம் பிறை அதைப்பார்த்தால் ''படாப்பழி'' ஏற்படும் எனக் கூறப்படுகின்றது. அன்று சந்திரன் பிறர் கண்ணில் படக்கூடாது என்று சாபம் இடப்பட்டுள்ளது. அன்று யாராவது சந்திரனைப்பார்த்தால், அவர்கள் மேல் வீண் பழி வந்து விடுமாம். இத்தகைய படாப்பழியைத்தவிர்த்து கொள்வதற்காகவே ஆவணிமாதத்து நாலாம் பிறைச்சந்திரனைப் பார்க்கக் கூடாது என்று நம்மவர்கள் கூறுவர்.

## விநாயகர் புராணம்

''செய்திரு நிருத்தங்கண்டே தேவர்கண் மகிழ்ந்து போற்ற
மையல்சேர் மதியவன் தன் வடிவினை நகைத்த வேலை
யெய்கியவகந்தையானி சிரித்தனை பழிபாவங்கள்
வெய்துறவடவாருண்ணை மேவுமித்தித்திற்கண்டோர்''

### பிள்ளையார் கதை

1. ''என்னைக்கண்டிதழ்தனை சிரித்தாய்
2. உன்னைக்கண்டவ உரைத்திடும் இத்தினத்திற்
3. பழியொடு பாவமும் பலபலவிதனமும்
4. அழிவும் எய்துவரென்று அசனி போற் சபித்தான்

விநாயக பெருமானின் திருக்கூத்தைக் கண்டு மகிழ்ந்தனர் தேவர்கள். அறியாமை பொருந்திய சந்திரன் அவ்வேளை அவரது திருவுருவத்தைப் பார்த்து ஏளனமாய் சிரித்தான். இதனால் கோபமடைந்த விநாயகக்கடவுள் சந்திரனைப் பார்த்து நீ உன்னிடத்தில் உள்ள கர்வத்தினால் சிரித்தாய். மேலும் வருடம் தோறும் வருகின்ற இத்தினத்திலே உன்னை பார்த்தவர்கள் பல பழி பாவங்களுக்கு ஆளாவார்கள் என்று சபித்தார்.கர்வத்தால் ஏளனமாகச்சிரித்து விநாயகரின் கோபத்திற்கு ஆளானான் சந்திரன். இதன் பின்னரே தான் தவறுவிட்டதாக உணர்ந்தான். தீராத நோய்களை தீர்த்து வைக்கும் விநாயகரை விரோதிக்கலாமா? சந்திரன் தன் தவற்றை உணர்ந்து மன்னிக்குமாறு விநாயகரை வேண்டினான்.

விநாயகரும் மனம் இரங்கி ''நான் கொடுத்தது கொடுத்தது தான் நான்காம் பிறையை யாரும் பார்க்கமாட்டார்கள். ஆனால்மூன்றாம் பிறையைப் பார்த்தால் அவர்களுக்கு புண்ணியம் கிட்டும்'' என்று திருவாய் மலர்ந்தருளினார். இதனாலேயே இந்துக்கள் நான்காம் பிறையைப் பார்க்கும் வழக்கம் வழமையில் இல்லாதிருந்து வந்துள்ளது. மூன்றாம் பிறைச்சந்திரனைப் பார்த்து மகிழ்ந்து வருகின்றார்கள்.

# விநாயகர் காப்பும் காப்புச் செய்யுளும்

'காப்பு' என்னும்போது சாதாரணமாக பெண்கள் அணியும் காப்பைக் குறிக்கும். மற்றும் ஒரு பெயர் 'வளையல்' கையில் வளைந்து இருப்பது அது. இன்றைய நிலையில் வனிதையர்களின் கரங்களை வளையல்கள் அலங்கரித்தன. பெண்களின் கரங்கள் மென்னையானது அத்தகைய மென்னையான கரங்கள் தொழிற்படும்போது பாது காப்புக்கருதி அத்தகைய பொருட்பாவனை தொடக்க காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது. நாளடைவில் அது நாகரீகமாகமாறி அலங்காரப் பொருளாகிவிட்டது.

இவ்வாறே எமது வாழ் நாள் பூராகவும் விநாயகப் பெருமான் எங்களுக்கு காப்பாக அமைகிறார். எங்களுக்கு வரும் இடர்களையெல்லாம் அகற்றுகிறார்கர் .தீயசக்திகளை நீக்குகிறார். விக்கினங்களை விலக்கி காக்கின்றார்.

எழுதும் அன்பர்கள் முதலில் பிள்ளையார் சுழி போடாது எந்த எழுத்தையும் எழுதுவது இல்லை. தாம் எழுதுகின்ற எழுத்துக்கள் யாவும் எதுவித இடையூறுகளையும் ஏற்படுத்தாவண்ணம் விநாயகப் பெருமானார் காக்கவேண்டும் என்பதற்கறிகுறியாகவே இந்தப்பிள்ளையார் சுழியானது காப்பாக அமைகிறது.

எத்தெய்வவழிபாடு செய்பவர்களும் நூல் செய்யும்போது, தாம் எழுதும் நூல் எதுவித இடையூறுமின்றி முடிவடைய முதலில் ''விநாயகர் காப்பு'' செய்வது ஒரு பெரும் மரபாக இருப்பதை நாம் காண்கிறோம். இவ்வாறு விநாயகர் காப்பு செய்வதற்கு சர்வேஸ்வரனான எம்பெருமானே விநாயகர் காப்புச் செய்யுளுக்கான முதல் அடியினைக் கூறிக் கொடுத்த வரலாறுகள் பல இருப்பதை நமது புராணங்களிலிருந்து அறிகிறோம்.

கந்தப் புராணத்தை கச்சியப்பசிவாச்சாரியார் பாடமுனைந்தபோது கந்தப்பெருமானே வந்து ''திகடசக்கர'' என்று விநாயகப் பெருமானுக்குரிய காப்புச் செய்யுளுக்கு அடியெடுத்துக் கொடுத்ததைக் காண்கிறோம். இவ்வாறு பாப்புனையும் எந்தவொரு பாவலரும் முதலில் விநாயகருக்கு காப்புச் செய்வதைச் சிறப்பாகக் கூறலாம்.

எவ்வாறு நமது அன்பர்கள் எழுதும் போது பிள்ளையார் சுழியையும், நூல் செய்யும் போது விநாகர் காப்புச் செய்யுளையும் நோக்குகின்றார்களோ அவ்வாறே நமது வாழ் நாள் முழுவதும் விநாயகப்பெருமான் காப்பாக அமையவேண்டுமென வழிபாடு செய்கிறார்கள். இந்த வழிபாடே வருடம்தோறும் வரும் கார்த்திகை மாசத்துதிருக்கார்த்திகையை அடுத்து வரும் கிருஷ்ணபக்ஷபிரதமை முதல், மார்கழிமாசத்து சுக்கிலபக்ஷத்து சஸ்டியீறாக வரும் 21 நாட்களிலும் நடைபெறும் விநாயக வழிபாடாகும்.

## *சமயக்கிரியைகளில் குருமார்கள் முதல் வணக்கம்*

இந்துசமயக் கோட்பாட்டுக்கமைய நடைபெறும் கிரியைகளில் குருமார்கள் எப்பொழுதும் தமது முதல் வணக்கத்தை விநாயகருக்கே செய்வார்கள்.

> **''சுக்லாம் பரதம் விஸ்ணும்**
> **சசிவர்ணாம் சதுர்புஜம்**
> **பிரசன்ன வதனம் த்யாயேத்**
> **சர்வ விக்ன உப சாந்தயே''**

## காப்புச் செய்யுள்கள்.

1. கந்தப் புராணம்

திகட சக்கரச் செம்முகமைந்துளான்
சகட சக்ரத் தாமரை நாயகன்
அகட சக்கர விண்மணியாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

2. பிள்ளையார் புராணம்

நற்றவத்திலம்பலத்து நம்பனிடத் தம்பிகைமுன்
பெற்றெடுத்த தந்திமுகப்பிள்ளையே - குற்றமலி
வன்மாலைத்தீர்க்க மருதென்றினிதியம்பு
நின்மாலைக்குக் காப்பு நீ.

3. விருத்தாசலப் புராணம்

திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காக்கவும்
பருவமாய் நமதுள்ளம் பழுக்கவும்
பெருகு மாளத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

4. திருவாதவூரடிகள் புராணம்

பவளமால் வரையில் நிலவெறிப்பதுபோல
பரந்த நீற்றளகு பச்சுடம்பில்
திவள மாதுடன் நின்றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்

தவளமா மருப் பொன்றொடித்தொரு கரத்தின்
தரித்துயர் கிரிப்புநத் தெழுதும்
தவள மாகளிற்றின் திருமகம் படைத்த
கடவுளை நினைந்து கை தொழுவாம்.

5. திருச்செந்தூர்ப் புராணம்

ஊற்றெடுத்து வண்டோவிடுமும்மத
நாற் றெழுக்கினருளியஞ் சாரல்வா
ஏற்று கைக்கு மிறைவற்குமுந்திய
மாற்றி வரக் கழியானையை வாழ்த்துவாம்.

6. சிதம்பர புராணம்

வான நாடர்கண் மாதவர் நாடரும்
மோன ஞான முழுது முணர்திடம்
தான மேவுந் தடவிகடாசலத்
தானை மாமுகத் தண்ணலை யேற்றுவாம்.

7. திருமந்திரம்

ஐந்து கரத்தினை யானை முகத்தினை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

8. மூதுரை

வாக்குண்டாம் நல்லமனமுண்டாம் மாமலரால்
நோக்குண்டாமேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

9. அருணகிரியந்தாதி

சித்திதரும் புத்திதரும் செந்திருவை சேர்விக்கும்
பக்திதரும் மெஞ்ஞானம் பாலிக்கும் - கொத்தி
யரிமுகனைக் காய்ந்த வருணேசர் தந்த
கரிமுகனைக் கை தொழுதக் கால்.

10. நல்வழி

பாலும் தெளி தேனும் பாகும் பருப்பு மிவை
நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலம்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

* * *



# விநாயகர் காப்புக் கிழமையும் பிள்ளையார் கதையும்

வருடம் தோறும் வரும் கார்த்திகை மாசத்து திருக்கார்த்திகையை அடுத்துவரும் கிருஷ்ண பட்ச பிரதமை முதல் மார்கழி மாதத்து சுக்கில பட்சத்து சஷ்டி ஈறாக வரும் இருபத்தொரு நாட்களிலும் விநாயகப் பெருமானைக்குறித்து எல்லா விநாயகர் ஆலயங்களிலும் மற்றும் ஏனைய ஆலயங்களிலும் அனுட்டிக்கப்படும் விரதம் விநாயக சஷ்டி விரதமாகும்.

இந்த விரதத்தை கிராமத்தவர்கள் பொதுவாக ''காப்புக்கிழமை'' என்றே சொல்வார்கள். இதில் இருபத்தொரு நேரிழையாலாகிய காப்பை ஆண்கள் வலக்கையிலும் பெண்கள் இடக்கையிலும் கட்டிக் கொள்வார்கள். முதல் இருபது நாளும் ஒவ்வொரு பொழுது போசனம் செய்து இறுதி நாளாகிய சஷ்டியன்று உபவாசம் இருத்தல் வேண்டும்.

இந்த விரத நாட்களிலே பூசைக்கு முன்பதாக தினமும் ஆலயங்களில் ''பிள்ளையார் கதை'' படிக்கப்படும். விரத அனுட்டானிகள் அதைக் கேட்டுப்பயன் பெறுவர். விரத அனுட்டானிகளும் ஏனையவர்களும் மேலும் விளங்கிக்கொள்ளும் வண்ணம் பிள்ளையார் கதையின் விளக்கத்தையும் ஆலயங்களில் அறிஞர்கள் தெளிவுபடுத்துவார்கள்.

இவ்விரதத்தை அனுட்டிப்போர் விநாயகரின் திருவருட் செயல்களையும் விநாயக விரதங்கள் நோற்றுவம் பெற்ற பேறுகளையும் விரத நாட்களில் நினைவு கூர்ந்து விநாயகப் பெருமான் பால் அன்பைப்பெருக்க ஏதுவாக கந்தபுராணம், இலிங்கபுராணம், உபதேச காண்டம் முதலிய நூல்களில் சொல்லப்பட்ட விநாயகரின் மகிமைகளையும்

அருட்செயல்களையும் திரட்டி ''பிள்ளையார் கதை'' என்னும் இந்நூலைச் சுன்னாகம் அரங்கநாதரின் அருந்தவப் புதல்வர் வரதபண்டிதர் ஆக்கி சைவ மக்களுக்கு அளித்தார்கள்.

* * *

**சதுர்த்தியில் இருபத்தொரு இலைகள் அர்ச்சனை**

ஆவணி மாத விநாயக சதுர்த்தியன்று அவரை இருபத்தொரு இலைகளால் அர்ச்சித்தல் விசேடம் எனச் செல்லப்பட்டுள்ளது.

அவை:-

முல்லை, கரிசலாங்கண்ணி, வில்வம், ஊமத்தை, இலந்தை, வெள் அறுகம்புல், துளசி, வன்னி, நாயுருவி, கண்டங்கத்தரி, அரளி, எருக்கு, மருதை, விஷ்ணுகிராந்தி, மாதுளை, தேவதாரு, மருவு, அரசு, ஜாதி மல்லிகை, தாழை, அகத்திக்கீரை ஆகியவற்றின் இலைகளே.



# விநாயகர் துதிப்பாடல்கள்

## ஸ்ரீ மகா கணபதி திருமந்திரம்

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விஸம்பித ஸூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே
கஜானனம் பூத கணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பு பூபல ஸார பக்ஷிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாதபங்கஜம்
அக ஜர்னன பத்மார்கம் கஜனன மகர்நிஷம்
அநேக தந்தம் பத்தானாம் ஏக தந்தம் உபாஸ்மஹே.

## ஷோடர்ச்சனை

ஓம் ஸுமுகாய நம
ஓம் ஏகதந்தாய நம
ஓம் கபிலாய நம
ஓம் கஜகர்ணகாய நம
ஓம் லம்போதராய நம
ஓம் விகாடய நம
ஓம் விக்ந ராஜாய நம
ஓம் கணாதி பாய நம
ஓம் தூமகேதுவே நம
ஓம் கணாத்யக்ஷாய நம
ஓம் பாலசந்திராய நம
ஓம் கஜான நாய நம
ஓம் வக்கிரதுண்டாய நம
ஓம் சூர்ப்ப கர்ணாய நம
ஓம் ஹேரம்பாய நம
ஓம் ஸ்கந்த பூர்வஜாய நம

ஓம் மஹா கணபதயே நம நாநாவித பத்ர புஸ் பாணி ஸமர்ப்பயாமி தூப தீபார்த்தம் அக்ஷதான ஸமர்ப்பயாமி.

# காசிப முனிவர் அருளிய விநாயகர் கவசம்

நாடோறும் தூய்மையான நிலையில் இருந்து ஓதுபவர்கள் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பெற்று பல்லாண்டு நல்வாழ்வு வாழ் வதோடு தலைமுதல் கால் வரை அவருடைய உறுப்புக்களும் காக்கப் படுவர்.

வளருந் தலைமுடி, தலை, நெற்றி, புருவம், இணைவிழிகள்

வளர்ச்சிகையைப் பராபரமாய் வயங்கு விநா
　யகர் காக்க வாய்ந்த சென்னி
யளவுபடா வதிகசவுந் தரதேக
　மதாற்கடர்தா மமர்ந்து காக்க
விளரற நெற்றியை என்றும் விளங்கியகா
　சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வில் மகோதரர் காக்க தடவிழிகள்
　பாலசந்திரனார் காக்க.

உதடு, நாக்கு, முகவாய்க்கட்டை, வாக்கு, பல், காது, மூக்கு

கவின் வளரும் அதரம்கச முகர்காக்க
　தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்க நனி
　வாக்கை விநாயகர் தாம் காக்க
அவிர் நகைதுன் முகர் காக்க அள் எழிற்
　செஞ் செவிபாச பாணி காக்க
தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணி நா
　சியைச் சிந்திதார்த்தர் காக்க.

### முகம், கழுத்து, இணையான தோள்கள், முலை, உள்ளம், வயிறு

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளம் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர் தாம் மகிழ்ந்து தாம் காக்க
ஏமமுறு மணிமுலை விக்கின விநா
சன் காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்க அகட்
டினைத் துலங்கேரம்பர் காக்க.

### பக்கங்கள், குறி, குய்யம், தொடைகள்

பக்கமிரண்டையுந் தராதர் காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்னகரன் காக்க விளங்கிலிங்கம்
வியான பூடணர்தாம் காக்க
தக்க குய்யந் தன்னை வக்கரதுண்டர்
காக்க சகனத்தை அல்லல்
உக்ககண பன் காக்க ஊருவை மங்
கள மூர்த்தி உவந்து காக்க.

### முழங்கால், இருகால்கள், இருகைகள், முன்கைகள்

தாழ் முடிந்தாள் மகா புத்தி காக்க இரு
பதம் ஏகதந்தர் காக்க
வாழ்கரம்கிப் பிரப்பிரசா தனர் காக்க
முன்கையை வணங்குவார் நோய்

ஆழ்தரச் செய் ஆசாபூரகர் காக்க
  விரல் பதும அத்தர் காக்க.
கேழ் கிளரும் நகங்கள் விநாயகர் காக்க
  கிழக்கினிற் புத்தீசர் காக்க.

**திக்குகள் அனைத்திலிருந்தும்**

அக்கினியிற்சித்தீசர் காக்க உமா
  புத்திரர் தென் ஆசை காக்க
மிக்க திருதியிற் கணேசுரர் காக்க
  விக்ன வர்த்தனர் மேற்கென்னுந்
திக்க தனிற் காக்க வாயுவிற்கசகன்
  னன் காக்க திகழ் உதீசி
தக்கநிதிபன் காக்க வடகிழக்கில்
  ஈசநந்தனரே காக்க.

**பகல் இரவு முதலிய காலங்களில் பிறதொல்லைகளிலிருந்தும்**

ஏகதந்தர் பகல் முழுவதுங்காக்க இர
  வினும் சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின் விக்கினகிருது காக்க இராக்
  கதர் பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
  வருந்துயரும் முடிவிலாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
  சாங்குசர்தாம் விரைந்து காக்க.

**மானம், புகழ் முதலியவற்றையும் உற்றார் உறவினரையும்**

மதி ஞானம் தவம் ஞனம் மானம் ஒளி
புகழ்குலம் வண்சரீரம் முற்றும்
பதிவான தனம்தானி யம்கிருகம்
மனைவிமைந்தர் பயில் நட்பாதிக்
கதியாகவும் கலந்துசர்வா யுதர்காக்க
காமர் பவுத்திரர் முன்னான
விதியாரும் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

**படிப்போர் நோயற்றவராய் வாழ்வர்**

வென்றிசீ விதம் கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ் வாறிதுதனை முக்காலமும்
ஓதிடினும் பால் இடையூறென்றும்
ஒன்றுறா முனிவரர்காளறிமின்
கண் யாரொருவர் ஓதினாலும்
மன்ற ஆங்கவர் தேகர் பிணியற
வச் சிரதேக மாகிமன்னும்.

***

கணபதி துணை

# விநாயகர் அகவல்

ஔவையார் அருளியது

திருச்சிற்றம்பலம்

சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெருநுதிக் கோடும்
வேழ முகமும் வெண்ணீற் றணியும்
அஞ்சு கரமு மங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயு நாலிரு புயமும்
மூன்று கண்ணு மும்மத யாறும்
இரண்டு செவியு மிலங்கு பொன் முடியுந்
திரண்ட முப் புரிநூற் றிருமார் பகமும்
பொற்புற விங்கும் பொருளே கயிலை
அற்புதனின்ற கற்பகக் களிறே
முப்பழ நுகரு மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொள வேண்டித்
தயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கை யறுத்துத்
திருந்துநம் முதலஞ் செழுத்தையுங் காட்டிப்
பொருந்திய வெனது புன்மனம் புகுந்து
வாடா வண்ணம் வந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்து
தெவிட்டாப் போதஞ் செப்பியென் செவியில்

உவட்டா ஞானத் துண்மையுங் காட்டி
ஐம்புலன் றன்னை யடக்குமு பாயமும்
இன்புறு கருணையு மெனக்கினி தருளித்
தலமொரு மூன்றும் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கமு மறுத்தே
ஒன்பது வாயிலொருமந் திரத்தால்
அன்புறு கதவை யடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்குள நிலையை
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையி னெழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாடங்காட்டி
மூன்றுமண் டலகத்தின் முட்டிய தூணில்
நாற்றெழுவாயி னாவி லுணர்த்திக்
குண்டலி தன்னைக் கூறு மியல்பை
விண்டெழு மந்திரம் விழைவுறச் செப்பி
மூலதார மூண்டெழு கனலைக்
காலா லெழுப்பிக் கருத்தறி வித்தே
அமுத கலசமு மலரி யியக்கமும்
குமுத சகாயக் குணத்துடன் காட்டி
இடைச்சக் கரத்தி னெட்டு நிலையோ
டுடற்சக் கரத்தி னுயிர்ப்பையுங் காட்டிச்
சண்முகச் சூலமுஞ் சதுர்முகச் சுட்டியும்
எண்முகமாகிய வெண்பதொன் றிடமும்
புரியட்ட காயமும் புலப்பட வெனக்குத்
தெரி யெண்ணிலையுந் தெரிசனப் படுத்திக்
கருத்தி லிருத்திக் கபாடங் காட்டித்
திருத்தி முத்தி சித்தி யெற் கருளி

என்னை யறிவித் தெனக்கருள் செய்து
முன்னைப் படிவினை முதலறக் களைந்து
வாக்கு மனமு மில்லா மனோலயந்
தேக்கி யென்க்குச் சிந்தை தெளித்தே
இருவினை தனக்கு மியைபுற நின்ற
கருவினை வராக் கருத்தறிவித்தே
எல்லையில் லாததோ ரின் பினையருளி
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத் தினுள்ளே சதாசிவங் காட்டிச்
சித்தத் னுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவுக் கணுவா யப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றிநின்ற கரும்புள்ளே காட்டி
வேடமு நீறும் விளங்க நிறுத்திக்
கூடகத் தொண்டர் குழாத்துடன் வாழ
அஞ்சக் கரத்தி னருள்புரி வித்து
நெஞ்சக் கருத்தி னைலைபுகு வித்தே
தத்துவ நிலையுந் தந்தெனை யாண்ட
வித்தக விநாயகன் விரைகழற் சரணத்
துரிமை சேர் அகவல் ஓதினார்
பொருளொடு தவமும் புகழும் பெறுவரே.

திருச்சிற்றம்பலம்

## தமிழ் அருச்சனை மலர்
## விநாயகக் கடவுள்

வேழ முகத்து விநாயகா போற்றி
மலைமகள் பெற்ற வாரணா போற்றி
ஐங்கர நால்வாய் அமலா போற்றி
புழைக்கை கொண்ட புனிதா போற்றி
மோதகம் ஏந்திய முதல்வா போற்றி

நான்ற வாயுடை நாதா போற்றி
மூலா தார முன்னவா போற்றி
துண்டிராசன் மகிழ் துங்கா போற்றி
ஐந்தொழில் ஆற்றும் ஐங்கரா போற்றி
வெள்ளை மேனி விநாயகா போற்றி

அறுமுகச் செவ்வேட் கண்ணா போற்றி
ஐந்து வாண்முகத் தையா போற்றி
வெட்சி புனைந்த விநாயகா போற்றி
கன்ன மதத்துக் கரிமுகா போற்றி
வல்லபைக் குரிய வாரணா போற்றி

கருணை மதம்பொழி கணேசா போற்றி
பொள்ளா மேனிப் போதகா போற்றி
பாலச்சந்திரப் பரமா போற்றி
அல்லல் களையும் ஐங்கரா போற்றி
கரும்பு மிசையும் கரிமுகா போற்றி

குறிகுணம் கடந்த குஞ்சரா போற்றி
முக்கட் களிற்று முன்னவா போற்றி
சிறுகண் களிற்றுச் செல்வா போற்றி
வெள்ளைக் கொம்புடைவிநாயகா போற்றி
கணங்கள் போற்றும் கரிமுகா போற்றி

பூதக் காலுடைப் புனிதா போற்றி
முக்கனி நுகரும் முதல்வா போற்றி
சதுர்த்தி நன்னாட் சதுரா போற்றி
வெள்ளை மதம் பொழி விநாயகா போற்றி
புகர்முகக் களிற்றுப் புங்கவா போற்றி

மகோற்கடன் என்ற மாண்பா போற்றி
கரகநீர் கவிழ்த்த கரிமுகா போற்றி
வலம்புரிப் பெயருடை வாரணா போற்றி
வெள்ளுடைவிரும்பும் விநாயகா போற்றி
சிங்கம் ஊர்ந்த செல்வா போற்றி

வள்ளியை வெருட்டிய வாரணா போற்றி
விக்கினம் போக்கும் விநாயகா போற்றி
ஒற்றைக் கொம்புடை ஒருவா போற்றி
விகட சக்கர விநாயகா போற்றி
புராரி போற்றும் புதல்வா போற்றி

அகத்தியர்க் கருளும் அன்பா போற்றி
மழவிளங்களிற்று மன்னா போற்றி
மஞ்சள் நிறத்து வாரணா போற்றி
சித்தி புத்தியைச் சேர்ந்தவா போற்றி
தேரச் சொடித்த தேவா போற்றி

உதர பந்தமுடைய ஒருவா போற்றி
நாரதர் போற்றும் நாயகா போற்றி
ஐவகைப் பூதமாய் அமைந்தவா போற்றி
வழிபடு வார்க்கருள் வாரணா போற்றி
அவல் பொரி விரும்பும் ஐயா போற்றி

மதிக்கு அருளிய மகிபா போற்றி
வேண்டுவார்க் கருளும் விநாயகா போற்றி
மூவா சாவா முன்னவா போற்றி
சிந்தா மணி நற் செல்வா போற்றி
நாகா பரண விநாயகா போற்றி

வாதா பிவாரண வள்ளலே போற்றி
மும்முக வாரண மூர்த்தியே போற்றி
கட்டறு களிற்றுக் கன்றே போற்றி
குமார கணபதிக் கோவே போற்றி
மாலுக்கருளிய மணியே போற்றி

தாசக்கரங் கொண்ட தந்தியே போற்றி
கந்தன் களிக்கும் களிறே போற்றி
பெருச்சாளி யூரும் பிரமனே போற்றி
ஒடிந்த கொம்புடைய உம்பலே போற்றி
களிற்று மாமுகக் கடவுளே போற்றி

மயில் மீதூர்ந்த வாரணா போற்றி
இந்துவின் பிறையணி யானையே போற்றி
வெண்பொடி பூசிய வேழமே போற்றி
கருணை பூக்கும் களிறே போற்றி
கற்பக வேழக் கன்றே போற்றி

சித்தி விநாயகச் செம்மலே போற்றி
தழைசெவி இரண்டுடைத் தந்தியே போற்றி
மழைமதக் களிற்று மணியே போற்றி
ஓமெனும் முகத்து ஒருவனே போற்றி
வெண்ணூல் அணிந்த வேழமே போற்றி

செந்நிற மேனிச் செம்மலே போற்றி
கதிரொளி வீசும் களிறே போற்றி
தம்பிக்கருள் புரி தந்தியே போற்றி
உமையருள் பெற்ற உம்பலே போற்றி
எண்குண முடைய இபமே போற்றி

ஓடைஅணிந்த ஓங்கலே போற்றி
துரியங் கடந்த தும்பியே போற்றி
மாகாண பதி எனும் மணியே போற்றி
கார் முகக் குஞ்சரக் குன்றே போற்றி
உம்பர் போற்றும் உம்பலே போற்றி

பேழை வயிற்றுப் பிள்ளாய் போற்றி
தொந்தி வயிற்றுத் தும்பியே போற்றி
இளம்பிறை போன்ற எயிற்றாள் போற்றி
கயமுகத் தசுரனைக் காய்ந்தாய் போற்றி
அங்குச பாசம் அணிந்தாய் போற்றி

கந்து முறிக்கும் களிற்றாய் போற்றி
இருவே றுருவுடை எந்தாய் போற்றி
மேருவில் பாரதம் விளம்பினாய் போற்றி
பிள்ளையார் என்னும் பெயராய் போற்றி
கணபதி என் வினை களைவாய் போற்றி

மாங்கனி அரன் பால் வாங்கினாய் போற்றி
அனலா சூரனை அழித்தாய் போற்றி
இராச கணபதி எந்தாய் போற்றி
அறுகு வன்னி அணிந்தாய் போற்றி
கமலா சுரனைக் காய்ந்தாய் போற்றி

எள்ளுருண்டைவடை ஏற்பாய் போற்றி
மும்மத வேழ முகத்தாய் போற்றி
மெய்ப்பொருள் வேழ மேனியாய் போற்றி
இருகுட்டேற்கும் எந்தாய் போற்றி
மனத்தின் இருளை மடிப்பாய் போற்றி

முந்திய பொருட்கெலாம் முந்தியோய் போற்றி
ஓமெனும் பொருளிலே உற்றோய் போற்றி
செல்வ விநாயக போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.



## பஜனைப் பாடல்கள் விநாயகர்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே
வீற்றிருக்கும் பிள்ளையார் வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
சஞ்சலங்கள் தீர்ப்பவர் சகலவினை போக்குவார்
தஞ்சமென்று வந்தவர்க்கு மிஞ்சு சுக மளிப்பவர்
யானை முகங்கொண்டவர் பானை வயிறு படைத்தவர்
ஐந்து கரங்கள் உடையவர் பக்தர் குறை தீர்ப்பவர்
அவல் கடலை சுண்டலும் அரிசி கொழுக்கட்டையும்
ஆவலுடன் தின்னுவார் அல்லல் தீர்க்கும் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்
ஐந்தெழுத்து மந்திரங்கள் நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்
ஓம் நமசிவாய ஓம்நமசிவாய ஓம்நமசிவாய
சிவாயநம ஓம் சிவாய நம ஓம் சிவாயநம ஓம்
ஓம் நமசிவாய ஓம்நமசிவாய ஓம்நமசிவாய
சிவாயநம ஓம் சிவாய நம ஓம் சிவாயநம ஓம்
நமச்சிவாய என்ற ஐந்தெழுத்து மந்திரத்தை
நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

ஆறுமுக வேலனுக்கு அண்ணனான பிள்ளையார்
நேரும் துன்பம் யாவையும் நீக்கி வைக்கும் பிள்ளையார்
கலியுகத்தில் எம்மைக் காவல் காக்கும் பிள்ளையார்
எலியின் மீது ஏறியே வினைகள் தீர்க்கும் பிள்ளையார்
ஔவைக்கு அருள்புரிந்த ஆனைமுகப்பிள்ளையார்
கௌவைக் கனி மாம்பழத்தை மகிழ்ந்தெடுத்த பிள்ளையார்

பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்
பிள்ளையார் பிள்ளையார் பெருமை வாய்ந்த பிள்ளையார்

கணநாதம் கணநாதம்
ஈஸ்வர புத்ரம் கணநாதம்
விக்ந விநாயக கணநாதம்
சித்தி விநாயக கணநாதம்
பார்வதி புத்ரம் கணநாதம்
முத்திப் பிரதாயக கணநாதம்
மூஷிக வாகன கணநாதம்
மோதஹ ஹஸ்தா கணநாதம் (கணநாதம்)

சிவ சிவ கஜமுக கணநாதா
சிவ கண வந்தித குணநாதா
வாவா வாவா அங்குச பாசா
வந்தரு ளின்பந் தந்திடு நேசா

உமைதரு பாலா குருமணியே
உந்தனடைக்கலம் அடியோமே
மகா கணபதே குருசரணம்
சரணம் சரணம் தந்திமுகா
சரவண பவனுக் குயர் துணைவா (சிவ சிவ)

கணபதி ஓம் சிவ கணபதி ஓம்
கணபதி ஓம் சிவ கணபதி ஓம்
மூஷிக வாகன கணபதி ஓம்
மோதஹ ஹஸ்தா கணபதி ஓம்
சாமர கர்ணா கணபதி ஓம்
விளம்பித சூத்திர கணபதி ஓம்
வாமன ரூபா கணபதி ஓம்
மகேஸ்வர புத்ர கணபதி ஓம்
விக்ன விநாயக கணபதி ஓம்
பாதநமஸ்தே கணபதி ஓம்
சித்திவிநாயக கணபதி ஓம்
பாத நமஸ்தே கணபதி ஓம் (கணபதி)

ஜெய கணேச ஜெயகணேச ஜெயகணேச ஓடிவா
ஜெய கணேச ஓடிவா
ஜெயகணேச ஜெயகணேச ஜெயகணேச ஆடிவா
ஜெயகணேச ஆடிவா (ஜெய)
ஜெயகணேச மங்களங்கள்
எங்கும் தங்க ஓடிவா
அது இங்கும் தங்க ஆடிவா
ஜெயகணேச மாண்புடனே நாங்கள் வாழ ஆடிவா (ஜெய)
ஜெயகணேச இன்பநிலை ஓங்கிகிடவே ஆடிவா (ஜெய)

ஜெயகணேச நெஞ்சக் கனகல் நெகிழ்ந்து
உருகவே ஓடிவா
ஜெயகணேச சோதி ரூப ஜெய கணேச ஆடிவா (ஜெய)

கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கருத்தினில் கந்தனைக் காட்டிடுவாய் (கணபதி)
கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கள்ளம் கபடு மாயை நீக்கிடுவாய் (கணபதி)
கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
உள்ளமதில் அன்பை நிறைத்திடுவாய் (கணபதி)
கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
தாழ்மையும் தூய்மையும் தந்திடுவாய் (கணபதி)

வித்தைக் கிறைவா கண நாதா
நேர்மை தொழிலில் படியம்மை
சக்தித் தொழிலே அணைத்துமிடில்
தாழ்ந்த நமக்கு உயர்வாமே (கணபதி)

பக்தியுடையார் காரியத்தில்
பகரார் மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்கும் தன்னையைப் போல்
மெல்ல மெல்லப் பயனடைவார் (கணபதி)

# விநாயக நாமாவளி

கணபதி ஓம் ஜய கணபதி ஓம்
கஜமுக வைங்கர கணபதி ஓம்
குணபதி யாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம்

மூஷிக வாகன கணபதி ஓம்
மூலப் பிரணவ கணபதி ஓம்
மாசறு தேசிக கணபதி ஓம்
வல்லபை மோகன கணபதி ஓம்

விக்ந விநாயக கணபதி ஓம்
விகசித நகைமுக கணபதி ஓம்
உக்ர தபோபல கணபதி ஓம்
ஊர்த்துவ நர்த்தன கணபதி ஓம்

பார்வதி பால கணபதி ஓம்
பரசிவ ஞான கணபதி ஓம்
பூர்ண வியாபக கணபதி ஓம்
புவன புரந்தர கணபதி ஓம்

சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நித்திய தத்துவ கணபதி ஓம்
நின் மல சின்மல கணபதி ஓம்.

# களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்

## அமைந்த இடம்

அல்லல்களையும் ஐங்கரன் உறையும் ஆலயம் தொழுவதற் கென்றே அமைந்த நல்லிடமாக விளங்குவதும், மூர்த்தி, தலம் தீர்த் தம், முறையாக அமைந்ததுமான இடம் களுதாவளைப் பிள்ளையார் ஆலயமாகும். மட்டக்களப்பிலிருந்து கல்முனையை நோக்கிச் செல் லும் பிரதானமான பாதையிலே ஏறக் குறைய 14 மைல் தொலைவில் பல எழில் வளங்களோடு அழகுற அமைந்த இடம் களுதாவளை என்னும் புனித கிராமமாகும். ஆயிரமாண்டுகட்கு மேலான தொன்மை வாய்ந்த இங்குள்ள ஆலயம் விநாயக வழிபாட்டின் மகத்து வத்தையும் அதன் மேம்பாட்டையும் தெளிவுபடுத்திக் கொண்டே வந்துள்ளது. பூகோள ரீதியாக பார்ப்பவர்கள் ஒவ்வொரு பொருளை யும் சம்பந்தப்பட்ட இடத்தோடு ஒப்பிட்டுக் கூறுவார்கள். உதாரண மாக காங்கேசன்துறை என்னும் போது காங்கேசன் சீமெந்துத் தொழிற் சாலை ஞாபகத்திற்கு வரும். அவ்வாறே இங்கே களுதாவளை என் றால் பிள்ளையார், பிள்ளையார் என்றால் களுதாவளை என்று மக்கள் நம்பும் அளவிற்குக் களுதாவளைப் பிள்ளையாரின் அருள் விரிவ டைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. பழம் பெருமை வாய்ந்த இந்த ஆலயத்தின் ஆரம்பம் அதிசயிக்கத்தக்க வகையில் சுயம்புலிங்கமா கத் தோன்றிய மூல மூர்த்தி, அவன் அருளாலே அவன் தாள் வணங்கு வதற்கு ஏற்றவாறு அமைந்திருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

## ஆலய ஆரம்பத்தின் தொன்மை

சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன்பே களுதாவளை என்னும் கிரா மத்தில் விநாயகர் வழிபாடு தோன்றியிருக்கின்றது. களுதாவளைக் கிராமம் பற்றி உள்ள கல்வெட்டுக் குறிப்புக்களின் பிரகாரம் களுதாவ

ளையில் மக்கள் குடியேறிய காலம் கி.பி.0904 ம் ஆண்டாகும். அன்றி லிருந்தே விநாயகர் வழிபாடும் ஆரம்பித்துள்ளது.

## கல்வெட்டு

**''மணியாள் பூபால வன்னிமை தான் பார்க்கும் போது இஸ்ட லிங்கம் என வணங்கி இலங்கை தன்யீசனிட ஆலயங்கள் உண்டு பாரும் மூல சக்தி வினாயகருக்கு ஆலயந்தான் இத் தேசம் இல்லாததாலே'' பிள்ளையார் கோவில் இது'' அது வாக சிவ பிரானே பணியும் என்று இயம்பிளார் வன்னிமை யும் இயம்பினாரே''.**


மேற்கூறபட்ட கல்வெட்டுக் குறிப்பில் இருந்து பார்க்கும் போது களுதாவளையில் விநாயகர் ஆலயம் அமைய வேண்டுமென இறை வனே பணித்துள்ளார் என்பது வெள்ளிடை மலையாகின்றது.

மேலும் தற்போது களுதாவளை ஆலய கல்வெட்டுக் குறிப்புகளின் படி களுதேவாலயம் எனக் கூறப்படுகிறது.

**''மண் உலகில் மாயபிரான உமை பரமன் அருளினாலே களு தேவ ஆலயத்தை கணேசனென பெயர் வகுத்து யாரும் வந்து வணங்குவார்''.**

## ஆலய அமைப்பும் அபிவிருத்தியும்

ஆலயம் சுயம்பு லிங்கமாகத் தோற்றம் பெற்ற காலத்தில் சிறிதள வில் கல்லினால் கட்டப்பட்ட மூலஸ்தானம், மேலுக்கு மச்சி விதான மாக அமைக்கப்பட்ட நிலையில், முன்பதாக பலிபீடம் மற்றும் தம்ப மண்டபம் அமைய, இந்த அளவில் நெடுங்காலமாக விநாயகப் பெரு மான் அருள்பாலித்துக் கொண்டிருந்தார். செல்வந்த மக்கள் சுற்றுப் புறத்தை அழகு படுத்திக் கொண்டிருந்தனர்.



களுதாவளைப் பிள்ளையார் ஆலயம்

## கல்லடிப் பிள்ளையார்

களுதாவளைப் பிள்ளையார் ஆலயத்திற்கு நேரே முன்பதாகப் பிரதான பாதை ஓரத்தில் அமைந்திருப்பது வேப்படிப் (கல்லடி) பிள்ளையார் ஆலயமாகும். கடந்த காலத்தில் சூறாவளிக்கு முன்னர் சிறிய கோயிலாக வேப்ப மர நிழலில் பாதையால் போகிறவர்களுக்கும் வருபவர்களுக்கும் வினைகள் தீர்க்கும் விக்னேஸ்வரனாக சிப்பி செதுக்காத சிலையாக இருந்து காட்சி கொடுத்து வந்தார். 'கடுகு சிறிதானாலும் காரம் பெரிது' என்பார்கள். அதற்கமைய கல்லடிப் பிள்ளையாரின் அருள் இருந்தமை குறிப்பிடத்தக்து. பிள்ளையாரடியில் அமைக்கப்பட்டிருக்கும் உண்டியல், நாளாந்தம் பாதையினூடாக செல்பவர்கள் செலுத்தும் காணிக்கைக்கு மிகவும் பொருத்தமான வகையில் பயன்படுகின்றது. பிரதான கோயில் நிருவாகமே இதையும் நிருவகித்து வருகின்றது. பிரதான கோயிலின் தேவைகளைப் பெருமளவில் பூர்த்தி செய்து கொள்வதற்கு கல்லடிப் பிள்ளையாரின் நிதியுதவிகள் நல்ல முறையில் பயனளித்து வருகின்றன. இந்த ஆலயம் 1978 ம் ஆண்டு நடந்த கோரப்புயலினால் தாக்குண்டது. பிள்ளையாருக்கு மேலே குடை போன்று நின்ற வேப்ப மரம் சூறாவளியினால் முறிந்தது. முறிந்த கம்புகள் பிள்ளையாருக்கு குடை பிடித்தது போன்று மீண்டும் நின்று கொண்டிருந்ததைக் கண்ட மக்கள் எல்லோரும் அதிசயித்தனர்.

அதன் பின்னர் ஆலய வண்ணக் குமார்கள் சிறந்த முறையில் நடவடிக்கை எடுத்துப் புதிதாக அதேபிடத்தில் அழகுற அமைத்து அபிசேகம் செய்து பொங்கல் பூசைகளெல்லாம் செய்து வருகின்றனர். ஆண்டு தோறும் பங்குனி உத்திரத்தில் அபிஷேகப்பூசையும் பொங்கலும் நடை பெறுகின்றன. பல அடியார்கள் தாங்கள் விரும்பும் நாட்களில் பொங்கல் செய்து விநாயகரை வழிபாடு செய்து வருகின்றார்கள்.

அதன் பின்னர் அடியார்களின் அருள் மேலோங்கவே மேலும் ஆலய மண்டபங்கள் விரிவடையத் தொடங்கின. முறையாக கற்பகக் கிரகம், அர்த்த மண்டம், மகா மண்டபம், நிர்த்தமண்டபம் ,தம்ப மண்டபம், மணிமண்டபம், யாகசாலை, வாகனசாலை, வசந்தமண்ட பம், மணிக்கோபுரம் ஆகியன அமைந்துள்ளன. அண்மையில் முன் முகப்பு வரவேற்பு மண்டபம் மிக அலங்காரமான முறையில் அமைக் கப்பட்டுள்ளது. மேலும் மண்டப உள்வீதியில் நவக்கிரகக் கோயில், நாக தம்பிரான் கோயில், வைரவர் கோயில் ஆகியவைகளும் வசதி யாக அமைந்துள்ளன.

தற்போது மேலும் பல வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தண்ணீர் தாங்கி அமைக்கப்பட்டு ஆலயத்தின் பல பாகங்களுக்கும் குழாய் மூலம் நீர் பெறக்கூடிய வசதிகள் செய்யப்படுகின்றன. மின்சாரம் தடைப்படும் போது பாவிப்பதற்கென்று ஆலயத்திற்கு தனியான ஜெனரேட்டர் இயந்திரம் ஒன்றும் பெறப்பட்டுள்ளது. மற்றும் ஒலிபெ ருக்கி வசதிகளும் உண்டு. வழிபடும் அடியார்களின் நன்மை கருதி பல வசதிகளும் செய்யப்படுகின்றன.

மூர்த்தி

சுயம்பு லிங்கம் பீடத்தினுள் சூக்குமமாக இருக்கிறது. அதன் பின்னே பிள்ளையார் அமைந்திருக்கிறது. சுயம்புலிங்கமாகத் தோன் றிய விநாயக மூர்த்தியை அடுத்து வேறெங்கும் அரிதாகக் காணக் கூடிய நிலையில் களுதாவளைக் கிராமத்தில் மூல மூர்த்தி விநாயகர் நின்ற நிலையில் இருந்து மக்களுக்கு நல்லருள் பாலிக்கின்றார். சுயம்பு லிங்கமாக தோன்றிய விநாயகர் ஏனைய இடங்களில் பார்க்க முடியா தவாறு விசேட தன்மை பெற்றவராக இக்கிராமத்தில் கோயில் கொண் டுள்ளார்.

பரவலாக நின்ற நிலையில் இருக்கும் விநாயகர் நடனம் ஆடி எல்லோரையும் மகிழ்விப்பவராகவும் தேற்றுபவாரகவும் இருப்பார் என்பதில் ஒரு நம்பிக்கை. அவரே சகல கருணை காருண்யத்திற்கும் காப்பாளனாக விளங்கின்றார்.

தலம்

ஆலயம் என்னும் போது ஆன்மாவை வியக்கச் செய்கிற இடமாக இருக்க வேண்டும். எந்த வகையிலும் புனிதத் தன்மை மாறுபடாது, மாசுபடாது அமைந்திருப்பதும் அவசியம் .'அவன் அருளாலே அவன் தாள் வணங்குதல் ' என்னும் பதத்துக்கமைய இறைவனுடைய கட்டளைப் பிரகாரமே இந்த இடம் புனிதமாக்கப்பட்டுள்ளது. கிராமத் தோடு தொடர்பில்லாமல் மக்கள் சஞ்சாரம் அற்ற இடத்தில் விநாயகர் ஆலயம் அமைந்தள்ளது.

தீர்த்தம்

மூர்த்தி தலம் தீர்த்தம் முறையாக அமைவது ஆலய வழிபாட்டிற்கு உகந்ததாகும். மூர்த்தி, தலம், நன்றாக அமைந்து ஆலயத்திற்கு முன் பாக தீர்த்தக் குளமும் அவ்வாறே அழகுற அமைந்துள்ளது. மேலும் அபிவிருத்தியடைந்த போது அதே தீர்த்தக் குளம் இன்னும் விசால மாக்கப்பட்டு ஏற்றபடிகளும் நாலா பக்கங்களிலும் கட்டப்பட்டுள்ளன.

தீர்த்தம் ஆடுகின்ற வேளைகளில் அடியார்கள் நாலா பக்கங்களி லும் தீர்த்தக் குளத்தில் இறங்கி தீர்த்தம் ஆடக் கூடிய தீர்த்தக் குளம் வசதியாக்கப்பட்டுள்ளது.

## அலங்கார உற்சவம்

ஆண்டு தோறும் வரும் ஆனி மாத உத்தர நட்சத்திரத்தில் தீர்தோற்சவமும் அதற்கு முன்னர் ஒன்பது திருவிழாக்களும் நடைபெறும். தீர்த்தோற்சபவத்திற்கு முந்திய திரு விழாவும் கிராமத்தில் உள்ள குடும்பத்தவர்களால் நடாத்தப்படுகின்றது.

| | | |
|---|---|---|
| முதலாம் நாள் | - | கோயில் |
| இரண்டாம நாள் | - | கோயில் |
| மூன்றாம் நாள் | - | வள்ளிநாயகி குடும்பம் |
| நான்காம் நாள் | - | சட்டி குடும்பம் |
| ஐந்தாம் நாள் | - | போற்றிநாச்சி குடும்பம் |
| ஆறாம் நாள் | - | சுரக்கா முந்தி குடும்பம் |
| ஏழாம் நாள் | - | பேனாச்சி குடும்பம் |
| எட்டாம் நாள் | - | பெத்தாச்சிகிழவி குடும்பம் |
| ஒன்பதாம் நாள் | - | பொது(ஆறுகுடும்பங்களும் இணைந்து) |
| பத்தாம் நாள் | - | தீர்த்தோற்சபவம் |

திருவிழாக்காலங்களில் விசேட கூட்டு வழிபாடுகள் பிராத்தனைகள் சமயத் சொற் பொழிவுகள், எம்பெருமான் வீதி உலா வருதல் என்பன இடம் பெறும்.

## திருவிழா மூர்த்திகள்

திருவிழாக் காலங்களில் சபாமண்டபத்தில் விசேட பூசைகள் நடைபெறும். நடுவில் மூஷிக வாகனத்தில் விநாயகப் பெருமானும் வலதுபுறத்தில் பரமசிவனும் பார்வதிதேவியாரும் குதிரை அல்லது எருது வாகனத்திலும், இடதுபுறத்தில் மயில் வாகனத்தில் வள்ளி தெய்வானையுடன் முருகப் பெருமானும் வீதியுலாவிற்கு வருவார்கள். வேட்

டைத்திருவிழாவை சிறப்பிக்கும் முகமாக பிள்ளையார் குதிரைவாக னத்தில் வருவார். அடியார்களின் 'அரோகரா' சத்தம் ஒலிக்க சபா மண்டபத்தினுள் இருந்து மூர்த்திகள் வெளிக்கிட்டு முதலில் உள்வீதி யாகவும் பின்னர் வெளிவீதியாகவும் வலம் வருபவார்கள். அடியார் கள் பலர் இவ்வேளையில் கற்பூரச் சட்டி எடுப்பதும் அங்கப்பிர தாஷ்னை செய்வதிலும் ஈடுபடுவர்.

திருவிழாக் காலங்களில் சமயச் சொற் பொழிவுகள் கலை நிகழ்ச்சி கள் இடம் பெறும். முதல் திருவிழா செய்பவர்களின் செயற்பாடு எப்படியோ, அடுத்த குடும்பத்தவர்கள் அதை விட மேலும் சிறப்பா கச் செய்வதற்கேற்ற சிறப்பு நிகழ்ச்சிகள் சோடான வேலைகள் கூடச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தோடு எல்லோருக்கும் செயற்படு வார்கள். எல்லாமே ஒருங்கிணைந்து பார்க்கும் போது ஆலயச் சூழல் வெகு சிறப்பான முறையில் கோலாகலமான விழாவாகக் காணப்ப டும்.

## ஆலய குருமார்கள்

கிழக்கிலங்கையில் விசேடம் பெற்ற இந்த ஆலயத்தில் பல குருமார் கள் இறைபணி செய்துள்ளார்கள். தற்போது குரு லிங்கசங்கம பரம்ப ரையைச் சேர்ந்த சிவஸ்ரீ க.சீதாராம் அவர்கள் பிரதம குருவாக ஆல யத்தில் கடமையாற்றுகிறார். இன்றைய நிலையில் கோயில் நிருவாகி கள் இவரது சேவையில் திருப்தி அடைந்துள்ளனர். தற்போது வருடந் தோறும் நடை பெறுகின்ற அலங்கார உற்சவங்களையும் இவரே தலைமை தாங்கி நடத்துகின்றார். இவருக்கு முன் ஆலய பிரதம குருவாக சிவஸ்ரீ.சந்திரசேகர குருக்கள் அவர்கள் பணியாற்றினார் கள். அவரின் ஆலோசனைகளும் ஆலய வளர்ச்சிக்கு ஊன்றுகோ லாக அமைந்தன. ஆலய குருவிற்கு உதவியாக ஓர் ஐயரும் நியமிக் கப்பட்டுள்ளார்.

## ஆலய நிரந்தரப் பணியாளர்கள்

ஆலயத்தில் நடைபெறும் சகல பூசைகளும் மற்றும் முயற்சிகளும் குறித்த நேரத்திற்கு நடை பெறுவதற்கு ஏதுவாக இந்தப் பணியாளர் கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். திறப்புக்காரர் ஒருவர், காவலாளி இருவர் இதில் அடங்குவர்.

## நாளாந்தக் கோயிற் பூசைகள்

இவ்வாலயத்தில் நடைபெறும் பூசை பெரும் பாலும் மக்கள் பூசை யாக நடை பெற்று வருகிறது. ஆலயத்தின் ஆரம்ப காலாத்தில் வாரத் திற்கொருமுறை அதுவும் வெள்ளிக்கிழமை மாத்திரமே பொங்கல் பூசையாக நடை பெற்று வந்தது. பொங்கலுக்குப் பல வெளியூர்களிலி ருந்து வண்டில்களில் வந்து பொங்குவார்கள். தூரத்தில் இருந்து வருப வர்கள் எல்லோரும் தமக்கேற்றவாறு பொங்கலைச் செயவார்கள். எல்லோரும் பொங்கிய பின்னரே பூசை நடைபெறும்.

பின்னர், காலம் செல்லச் செல்ல களுதாவளைப் பிள்ளையாரின் நம்பிக்கை மேலோங்க அடியார்களின் எண்ணிக்கையும் மக்களின் வழிபாட்டு ஊக்கமும் ஆலய வண்ணக்குமார்களின் கவனத்தைத் தூண்டியது. அதன் பயனாக நாளாந்தம் பூசை செய்ய விநாயகர் திருவருள் பாலித்தார். மக்கள் தங்கள் வயல்களில் நெல்விளைந்தா லும் தங்கள் இடங்களில் வாழைக்குலை போட்டுப் பழுத்தாலும் களு தாவளைப் பிள்ளையாரை நினைப்பதில் தவறுவதில்லை.

இதன் காரணமாக பூசை முறையினை ஆலய வண்ணக்குமார் சபையினர் மேலும், மூன்று நேரப் பூசையாக மாற்றியதோடு மட்டுமல் லாமல் குறிப்பிட்ட நேரத்திற்கும் பூசை முடிப்பதையும் தீர்மானித்து அதற்கமைய தற்போது தினமும் காலை 6 மணி பூசை பி.ப.1மணி மாலை 6 மணிப் பூசை எனக் குறித்த நேரத்திற்கு பூசைகள் நடத்த

ஒழுங்குகளைச் செய்துள்ளார்கள். வெள்ளிக்கிழமைகளில் அடியார்கள் அதிகம் வருவதால் பூசை நேரம் அரை மணி நேரம் தாமதித்து பி.ப.1.30 மணிக்கு நடைபெறுகின்றது. இந்த ஒழுங்கு தற்போதைய நிலையில் தூரத்திலிருந்து வருபவர்களுக்கு வசதியாக உள்ளது. இவர்களுக்கு உதவியாகப் பொங்கல் பாத்திரங்களும் குறைந்த விலையில் விறகும் விற்பனை செய்யப்படுகின்றன. பொங்கல் வேலையில் உதவுவதற்கு பல அடியார்கள் காத்து இருப்பதும் பிள்ளையாரின் அருளாகும்.

## சங்காபிசேகம்

ஆலயத்தில் அபிசேட பூசைகளை ஆண்டுதோறும் பல தடவைகளில் நடை பெறுகின்றன. ஆண்டுக்கு இருமுறை சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெறுகின்றன.

வலம் புரிச் சங்கு உட்பட 1050 அபிசேகச் சங்குகள் ஆலயத்திற்குச் சொந்தமாக, மன்னாரில் இருந்து பெறப்பட்டுள்ளது. சங்குகள் சொந்தமாகப் பெற்ற பின்னர் சங்காபிசேகம் பல தடவைகள் வசதிக்கேற்றவாறு நடைபெறுகின்றமையும் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகும்.

மற்றும் அபிசேகம் பூசைகள் ஒவ்வொரு விசேட தினங்களிலும் மற்றும் திருவிழாக்காலங்களிலும் சிறப்பாக நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.

## ஆலய வண்ணக்குமார் குழுவினர்

''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' எனக் கந்த புராணம் கூறுகிறது. அதற்கமைய ஆலய குருமார்கள் அமைந்திருக்கின்றனர். குருவிற்கேற்றவாறு அவரோடு இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள் ஆலய வண்ணக்குமார் சபையினர். ஆறு குடும்பங்களைக்

கொண்டது களுதாவளைக் கிராமம். அதன்வடித் தெடுத்த மணிகளாகத் திகழ்பவர்கள் வண்ணக்குமார்கள். அவர்கள் செயற்படும் போது ஆறு திரு முகங்களும் ஒருங்கிணைந்த ஒரு திருமுகமாகச் செயற்படுவது ஒரு சிறப்பு அம்சம்களாகும். ஆலயத்தின் துரித அபிவிருத்தி இவர்களின் சிறப்பான பணியிலே தான் தங்கியுள்ளது. தவறாது தங்கள் சபையின் வாராந்த மாதாந்தக் கூட்டங்களைக் கூட்டி ஆலயத்தின் வளர்ச்சி பற்றி ஆராய்வது அவர்களின் தலையாய் கடமையாகும். வெள்ளிக்கிழமை பூசை, வருடாந்த உற்சவம் மற்றும் எனைய விசேட தினங்களின் போது இவர்களது சேவை அளப்பரியது. சாதாரணமாக வண்ணக்குமார் எடுக்கும் தீர்மானங்கள் பெரும் பாலும் ஊர் மக்கள் எடுக்கும் தீர்மானத்திற்குச் சமமாகும்.

1. பெத்தாக் கிழவி குடும்பம் -திரு.சி.கனகரெத்தினம்
2. பேனாச்சி குடும்பம் -திரு.ப.குணசேகரன்
3. சுரக்காமுத்தி குடும்பம்-திரு.இ.சீனித்தம்பி
4. போற்துறினாச்சி குடும்பம் -திரு. ஞா.சண்முகம்
5. செட்டிக் குடும்பம் -திரு சு.இரத்தினசிங்கம்
6. வள்ளிநாயகி குடும்பம் -திரு.சீ. இராசாங்கம்

அமரர் சி.தன்மன் பிள்ளை வண்ணக்கர் அவர்கள் மிக நீண்டகாலம் வண்ணக்கராகப் பணி புரிந்துள்ளார். அவரின் பின் அமரர் இ.வேலுப்பிள்ளை அமரர் சி.கண்ணமுத்து ஆகியோரும் குறிப்பிடத்தக்கவர்கள். தற்போது அவர்கள் விட்டதிருப்பணிகளைத் தொடர்ந்து திரு.கு.கனகரெத்தினம் தலைமையில் ஏனைய ஆறு வண்ணக்கு மார்களும் கிராமத்திற்கு தலைமைதாங்கி திறம்படச் செயற்பட்டு வருகின்றனர். ஆலயத்தில் நடை பெற்றுவரும் சகல அபிவிருத்திகளும் வண்ணக்கு மார்களின் அயராத முயற்சியே ஆகும்.

தற்போதைய நிலையில் பெத்தாக் கிழவி குடும்ப வண்ணக்கர் தலைமை வண்ணக்கராகவும் நிதிப் பொறுப்பாளராகவும் ஆலயதி றப்பு பொறுப்பையும் அதே குடும்பத்தைச சோர்ந்தவர்களே செயற்ப டுத்தி வருகிறுர்கள். திரு.பொ.தேவராசா என்பவர் அப்பணியை தற் போது செய்து வருகிறுர். ஆறுவண்ணக்குமார்களுக்கும் உதவியாக ஆறு கடுக் கண்டர் மார்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்கள் ஆலயதிருப்பணி வேலையில் வண்ணக்கு மார்களுக்கு எப்பொழு தும் உதவுபவர்களாக இருப்பார்கள்

## அற்புதங்கள்

களுதாவளைப் பிள்ளையார் பெருமனின் அற்புதங்கள் அளப்பரி யன. ஆலயத்தில் குவிந்து கிடக்கும் பொருட்கள் அத்தனையும் பெரு மானின் திருவிளையாடல்களுக்குச் சான்று பகருவனவாகும்.

எத்தனையோ இடர்களையெல்லாம் வேரோட வெட்டி எறிந்துள் ளார் தீராத வினைகளையெல்லாம தீர்த்தருளியுள்ளார். இனிமேல் தம்பி வெளியில் வரமாட்டான் என்று எண்ணியிருந்த தம்பிமார்க ளைக்கூட வரவைக்க அந்த விநாயகன் உதவியுள்ளான்.

இவ் விநாயகரை இந்து மக்கள் மட்டுமல்ல இஸ்லாமியரும், சிங்கள வரும் வழிபட்டு மேன்டையடைந்த வரலாறும் தென்படுகின்றது. தனது வாய் பேசாத ஊமைப் பிள்ளையை பிள்ளையார் முன்னிலை யில் பேசவைக்க, வேண்டிய போது முன்னொரு போது பொல்லாப் பிள்ளையார் வாய்திறந்து நம்பியின் அமுதத்தை உண்டது போன்று, இங்கே இந்த முஸ்லிம் குழந்தையின் வாய் திறந்து பேசத் திருவருள் பாலித்து அன்னாரைத் திருப்தியடையச் செய்த பெருமை பற்றியும் பேசப்படுகிறது.

## வழிபடும் அடியார்கள்

''நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சன்னிதி' என்று அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இன்றைய கால கட்டத்தில் நிம்மதியைத் தேட வேண்டிய காலமுமாக அமைந்து விட்டது. இந்த வகையில் ஐங்கர னாக விக்கினங்கள் தீர்க்கும் விக்னேஸ்வராக இருக்கும் விநாயகரை இந்தக்களுதாவளைக் கிராமத்து மக்களும் தொடர்ந்து வழிபட்டு வரு கின்றூர்கள்

இவ்வண்ணம் வெளியில் இருந்த வினாயகரை நமபிக்கையோடு வழிபடச் செல்லும் அடியார்களில் சிறியேனும் ஒருவன். எனது சிந் தனை இவ்வாறு தான் சரியோ அல்லது பிழையோ நானறியேன். உங்கள் பக்கம் விழைகிறேன்.

ஔவையார் அருளினார் 'தும்பிக்கையான் பாதம் தப்பாமல் சார் வார் தமக்கு'. 'நல்ல வாக்கு நல்ல மனம்' இதில் எனக்கு நல்ல நம்பிக்கை. ஆகவே தொடர்ச்சியாக ஆலயம் சென்று அந்தப் பெரு மானை வழிபடும் போது அது 'பற்றறி சாஜ்' பண்ணுவதுபோல் இருக்கிறது. செல்வதைக் குறைக்கும் போது அந்த சக்தியும் குறைகின் றது. ஆகவே தான் 'ஆலயம் தொழுவது சாலமும் நன்று' என்பதை அனுபவரீதியாக உணர முடிகிறது.

சுபம்

Vinai Theerkum

# VINAYAGAR



Offset by : TRISTAR, DEHIWAL